# என்னுரை

திரி என்றால் மூன்று. கடுகம் என்றால் மருந்து இதன்படி மூன்று வகையான மூலிகைகள் கலந்த மருந்தைத் திரிகடுகம் என்பர். அவையாவன சுக்கு, மிளகு, திப்பிலி, இம்மூன்றும் உடலில் தோன்றும் நோய்களைக் குணப்படுத்தும். அதுபோல் இதில் உள்ள பாடல்களில் கூறப்பட்ட ஒழுக்கக் கருத்துக்கள் மனதில் உருவாகும் அழுக்குகளை நீக்கி மனிதனை மகிழ்வுடன் வாழச் செய்யும். இதை இயற்றியவர் நல்லாதனார். இவர் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தார்.. இதுவரை காலமும் உரைநூலாக இருந்த இந்நூலைக் கதை நூலாக மாற்றியுள்ளேன். இந்நூலின் பாடல்கள் சாதாரணமானவர்களுக்கு விளங்காது. இந்நூலில் உள்ள அரிய கருத்துக்களைப் பாமரர்கள் அறிந்து கொள்வதற்காகக் கதையாக எழுதியுள்ளேன். வாசித்துப்பயன்பெறுங்கள். அத்துடன் உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள். இதைக் கணனி மயப்படுத்தித் தந்த செல்வி க.கல்ப்பனாவிற்கும், அழகான அட்டைப் படத்தை உருவாக்கித் தந்த ப. யாழினிக்கும் நன்றி.

கே.வி. குணசேகரம்

கோப்பாய்.

# திரிகடுகம்

## காப்பு

**கண்அகல் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்**
**தண்நறும் பூங்குருந்தம் பாய்ந்ததூஉம் - நண்ணிய**
**மாயச் சகடம் உதைத்தூஉம் இம்மூன்றும்**
**பூவைப்பூ வண்ணன் அடி.**

பரந்து பட்ட உலகங்களை அளந்தவரும், குருந்த மரத்தை முறித்தவரும், வஞ்சகமான வண்டியின் சக்கரத்தை உதைத்தவருமான திருமாலின் திரு வடிகளைப் போற்றுவோமாக…..

# 1. நூல்

### 1. திருகடுகம் போன்ற மருந்து

**அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய**
**தொல் குடியின் மாண்டார் தொடர்ச்சியும் - சொல்லின்**
**அரில் அகற்றும் கேள்வியார் நட்பும் இம் மூன்றும்**
**திரிகடுகம் போலும் மருந்து.**

அருந்ததிகளைப் போன்ற கற்புள்ள பெண்ணின் தோளும், குற்றமில்லாத குடியில் பிறந்த சான்றோரின் நட்பும், குற்றங்கள் நீங்கக்

கற்றுக் கேள்வியறிவு மிக்கவரின் நட்பும் சுக்கு, மிளகு, திப்பிலி கொண்டு செய்யப்பட்ட மருந்தாகும்.

சிறுத்தொண்டன் உயர்குடியிற் பிறந்தவர். ஒழுக்கமானவர். கற்கவேண்டிய நூல்களையெல்லாம் கற்றுத் தெளிந்தவர். அவர் சிவன் கோவிலில் ஒரு மடம் அமைத்திருந்தார். பகலில் அன்னதானம் நடைபெறும். மாலை நேரங்களில் மாணவர்களுக்கு மொழியும், கணிதமும், இலக்கணமும் கற்பிக்கப்படும். அங்கு ஊரவர்களும் வெளியூரவர்களும் வந்து கல்வி கற்பர். சிறுத் தொண்டனின் மனைவி காமாட்சி. அருந்ததியைப்போன்ற கற்புள்ள அழகான பெண். கணவனைப் போல உயிர்கள் அனைத்திலும் அவள் அன்பு கொண்டமையால் அவளை ஊரவர் தெய்வமாக கருதி வணங்குவர். அவ்வூரில் நடைபெறும் எந்த வைபவமானாலும் அவர்களிடம் ஆசிபெறாமல் யாரும் யாரும் செய்யமாட்டார்கள்.

நாவலனுக்கு ஆசிரியர் வேலை கிடைத்திருந்தது. பல்கலைக் கழகத்தில் அவன் கற்கும் போதே சிறுத்தொண்டனின் பாடசாலையில் கற்பித்தவன். அன்று முதன் முதலாக வேலைக்குச் செல்வதால் அவன் அவர்களிடம் ஆசிபெற வந்திருந்தான்.

‘‘ஐயா, இன்று நான் வேலையைப் பொறுப்பேற்கவுள்ளேன். உங்களையும் காமாட்சி அம்மாவையும் இவ்வூரவர்கள் தம் பெற்றோர்களாகவே கருதுகின்றனர். அருந்ததியைப் போலக் கற்புக்கரசியான அம்மாவை வணங்கிவிட்டுச் சென்றால் எல்லாக்காரியங்களும் சிறப்பாக முடியும். அடிக்கவருபவனும் அடிபணிவான். உயர்குடியிற் பிறந்து கற்கவேண்டிய நூல்களையெல்லாம் கற்றுத் தெளிந்த உங்களிடம் ஆசி பெற வந்தேன்’’ என்று கூறி அவர்களது பாதங்களில் விழுந்து வணங்கினான்.

நாவலன் “நீ என்றும் பெருமையுடனும் புகழுடனும் வாழ்வாய்” என்று வாழ்த்தினார் சிறுத்தொண்டன்.

## 2. மேன்மையுடையார் செயல்கள்

**தன்குணம் குன்றாத் தகைமையும் தாவில் சீர்**
**இன் குணத்தார் ஏவின செய்தலும் - நன்குணர்வின்**
**நான்மறை யாளர் வழிச் செலவும் இம்மூன்றும்**
**மேன்முறை யாளர் தொழில்.**

தனது குடியின் ஒழுக்கத்தைப் பேணுதல், சான்றோர் ஏவிய செயலை நல்ல முறையில் செய்து முடித்தல், அந்தணரை மதித்து அவர்கள் காட்டும் வழியில் நடத்தல் ஆகிய மூன்றும் மேன்மையுடையவர்களது செயலாகும்.

“மகனே, ஆசிரியத் தொழில் சம்பளத்திற்கான தொழிலல்ல. அர்ப்பணிப்புடன் செய்யவேண்டியது. ஆசிரியரின் கையில் தான் உலகம் தங்கியுள்ளது. வலது குறைந்த மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் அனைவரும் கற்று நிபுணர்களாவர்.. அதற்கு ஆசிரியரின் அர்ப்பணிப்பான சேவை தான் காரணம். ஆசிரியன் கட்டாயம் தனது குலப் பெருமையை மேம்படுத்துதல் வேண்டும். சான்றோர் கூறிய வழிமுறைகளை நன்கு போற்றிக் கடைப்பிடித்தல் வேண்டும். அதற்காக அவர்கள் தினமும் கற்றுத் தம்மைத் தயார் செய்தல் வேண்டும். உன்னைப்பற்றி எனக்குத் தெரியும். நீ எனது நல் மாணாக்கர்களில் ஒருவன். இருப்பினும் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன்.. அதனால் தான் சொன்னேன். அத்துடன் அந்தணர்களைப் போற்றி வழிபடல் வேண்டும். குருவுக்கு எப்பொழுதும் மதிப்பளித்தல் வேண்டும்” என்றார்.

“ உள்ளே வா மகனே, காலை உணவு உண்டு விட்டுச் செல்” என்றாள் காமாட்சி.

நாவலன் உள்ளே சென்றான். தலை வாழை இலையில் உணவு படைக்கப்படாதிருந்தது. அதை அவன் உண்டு முடித்ததும் அவையான பசுப்பால் கொண்டு வந்து கொடுத்தாள் காமாட்சி.

“ நன்றி அம்மா” கண்கலங்கினான் நாவலன்.

## 3. அறியாமையால் ஏற்படும் கேடு

**கல்லார்க்கு இனாய் ஒழுகலும் காழ்கொண்ட**
**இல்லாளைக் கோலால் புடைத்தலும் - இல்லம்**
**சிறியாரைக் கொண்டு புகழும் இம் மூன்றும்**
**அறியாமை யால்வரும் கேடு.**

கற்காதவர்களை நண்பராக ஏற்றுப் பழகலும், நற்குணமுள்ள மனைவியைக் கோல் கொண்டு அடித்தலும், தீயவர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்வதும் எப்போதும் கேட்டையே தரும்.

சிறுத் தொண்டனின் வீட்டில் பலவருடகாலமாகச் சமையல்வேலை செய்பவள் கலையரசி. ஒழுக்கமானவள், நற்குணங்கள் கொண்டவள், விசுவாசமாக வேலை செய்பவள்.அதனால் சிறுத்தொண்டனும் காமாட்சியும் அவளின் மீது அளவுக்கதிகமான அன்பு வைத்திருந்தனர். அதனால் அவளது குடும்பத்திற்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்தனர். அவளது கணவனான திருமாறன், சிறுத்தொண்டனின் தென்னந் தோப்பில் வேலை செய்பவன். இரகசியமாக மது அருந்துவான். தீயவர்களுடன் சேர்ந்து திரிவான்.

அன்று கலையரசி சிறுத்தொண்டனின் வீட்டுக்கு வந்து விம்மி விம்மி அழுதாள். அவளது முகம் வீங்கி இருந்தது, “ஐயா, கணவனைப்பற்றி வெளியாருக்குச் சொல்லக்கூடாது என்பதற்காக நான் இவ்வளவு காலமும் எனது கணவனைப் பற்றிக் கூறவில்லை. அவர்

தீயவர்களுடன் சேர்ந்து குடிக்கிறார். குடித்துவிட்டு அவர்களை அழைத்து வந்து உணவு கொடுக்கச் சொல்கிறார். நான் ஏதாவது சொன்னால் கம்பால் எனக்கு அடிக்கிறார்'' பலத்து அழுதாள் கலையரசி.

சிறுத்தொண்டனுக்கு அவையாவும் தெரியும். ஆனால் அவர் தெரிந்தது போலக் காட்டிக் கொள்ளவில்லை. அவளது கணவன் திருமாறன் அவரின் முன் தலை குனிந்தபடி நின்றான், ‘‘குடிப்பழக்கம் குடியை எல்லாவகையிலும் கெடுத்துவிடும். நீ குடிக்கிறாய். அது பெருந் தவறு மட்டுமல்ல பாவமும்கூட. சான்றோர்களைத் தவிர வேறு யாரையும் வீட்டுக்கு அழைத்துச் செல்லக் கூடாது. தீயவர்கள் மது அருந்தினால் பைத்தியக்காரரை விட மோசமானவர்களாகிப் பழிபாவங்களுக்கஞ்சாது கொடிய செயல்களைச் செய்து விடுவார்கள்.. உனக்கு இரண்டு குமர்ப்பிள்ளைகள் உண்டு. எதுவும் நடவா விட்டாலும் நாளைக்கு அவர்களுக்குத் திருமணம் பேசும் போது பல குழப்பங்கள் ஏற்படும். அதைவிட நற்பண்புகள் மிக்க கலையரசியை கோல் கொண்டு தாக்க உனக்கு எப்படி மனம் வந்தது? அவள் குறிப்பறிந்து நடக்கும் அருமையான பெண். சொல்லாமலே தனது கடமையை உணர்ந்து நடப்பவள். அவளை ஏசினாலே உனக்குப் பாவம் கிடைக்கும். உனது பெற்றோர் நல்லவர்கள். நீ எப்படித்தீயவனானாய்?'' என்று கேட்டார் சிறுத்தெண்டன்.

‘‘தவறு செய்து விட்டேன் ஐயா, இனி அப்படி நடக்க மாட்டேன்'' என்று அழுதான் திருமாறன்.

## 4. இறப்பதற்குரியவன் தொழில்கள்.

**பகை முன்னர் வாழ்க்கை செயலும் தொகை நின்ற**
**பெற்றத்துள் கோல் இன்றிச் சேறலும் - முன் தன்னைக்**
**காய்வானைக் கைவாங்கிக் கோடலும் இம் மூன்றும்**
**சாவ உறுவான் தொழில்.**

பகைவனுக்குத் தன் செல்வத்தின் செழிப்பால் செருக்கைக்காட்டுதலும், பசுமாட்டுக்கூட்டத்துள்க் கோல் இன்றிச் செல்லுதலும், தன்னை வருத்தும் பகைவனைத் தனக்கு உறவாகக் கொள்ளுதலும், மரணத்தைத் தரும் செயல்களாகும்.

‘‘ஐயா, அவர் கடுமையாக உழைப்பவர். தனது வேலை நேரம் முடிய வயலில் மாடாக உழைப்பவர். அதனால் எம்மிடம் போதியளவு பணம் உண்டு இவர் கள் குடிக்கும் இடங்களில் எமது செல்வத்தின் பெறுமதியைக் கூட்டிக் கூறுவார். இவரது மைத்துனன் ஏகாம்பரம் தீயவன். இவரது பரம எதிரி. இப்போது இவருடன் நட்பாகி இவரை கெடுக்கும் வழிகளில் ஈடுபட்டுள்ளான். அதை இவர் புரிந்து கொள்கிறாரில்லை. சொன்னாலும் விளங்கிக் கொள்கிறார் இல்லை. சில தினங்களுக்கு முன் இவர் நன்றாகக் குடித்துவிட்டு வந்து வீட்டில் கலகஞ் செெய்ய நான் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு அப்பாவின் வீட்டுக்குச் சென்று விட்டேன். இவர் மயக்கத்தில் படுத்ததும் ஏகாம்பரமும் அவனது நண்பர்களும் எமது பணம், தங்க ஆபரணங்களைத் தேடியுள்ளனர். இவரின் நடத்தை சரியில்லாததால் நான் முன்பே அவற்றைக் கொண்டு சென்று அப்பாவிடம் கொடுத்துவிட்டேன். அதனால் தான் அவை தப்பின’’ என்று அழுதாள் கலையரசி.

‘‘மகனே, தனது பகைவர்முன் தன் செல்வச் செருக்கைக் காட்டுவதும், பகைவரை நண்பராக ஏற்றலும், பசுக்கூட்டத்துள்க்கோல் இன்புரிச்செல்வதும் மரணத்தை உண்டு பண்ணும் செயல்கள். பகைவர்கள் தந்திரமாக நட்பாகி அழிக்க நினைப்பர். எமது பசுமந்தைக்குளக் கோபாலன் கோலின்றிச் சென்று அவற்றால் மிதிக்கப்பட்டு உயிருக்குப்போராடியது உனக்குத் தெரியும். என்னிடம் நீ வேலை செய்வதால் தான் இதைச் சொன்னேன்’’ என்றார் சிறுதொண்டன்.

## 5. அருந்துன்பம் காட்டும் நெறி

**வழங்காத் துறை இழிந்து நீர்ப்போக்கும் ஒப்ப**
**விழைவு இலாப் பெண்டிர்தோள் சேர்வும் - உழந்து**
**விருந்தினனாய் வேற்றூர் புகலும் இம்மூன்றும்**
**அருந்துயரம் காட்டும் நெறி.**

யாரும் இறங்கி நீராடாத நீர் நிலையில் இறங்கி நீராடுவதும் விருப்பமில்லாத பொது மகளுடன் கூடி இன்பம் அனுபவிக்க விரும்புதலும், வறுமைப்பட்ட போது விருந்தினராய் அயலூர் சென்று சேருதலும் ஒருவனுக்குப் பெரும் துன்பங்களைக் கொடுக்கும்.

“ஐயா, குடித்துவிட்டு இவர் ஊரின் ஒதுக்குப் புறத்தில் உள்ள பெரிய குளத்தில் குளிக்கிறார். இவரோடு செல்பவர்கள் அதை வேடிக்கை பார்க்கின்றனர். அந்தக்குளத்தில் யாரும் குளிப்பதில்லை. புதைக்கும் சேறும், தாமரைக் கொடிகளும், அபாயமான சுழியும் அக்குளத்தில் இருப்பதாகப் பேசிக் கொள்கிறார்கள். அதைவிட ரகுநாதனின் வீட்டுக்கு அடிக்கடிபோய் அங்குள்ள பெண்களை வம்புக்கிழுக்கின்றனராம். அவள் பலருடன் கூடிக்குலவும் பெண் தான். இருப்பினும் இவரை அவளுக்குப் பிடிப்பதில்லை. அதனால் நேற்றிரவு நாலைந்து பேர் வீட்டுக்கு வந்து இவரை ரகுநாதனின் வீட்டுப்பக்கம் வந்தால் கொலை செய்வோம் என்று கூறி விட்டுச் சென்றுள்ளனர். அதற்குப் பயந்து அயலூருக்குச் சென்று வாழலாம் என்று கூறுகிறாள்” விக்கி விசும்பி அழுதாள் கலையரசி.

“திருமாறா, பஞ்சமா பாதங்களைச் செய்ய எப்படி உனக்கு மனம் வந்தது. நான் அறிந்தவரை யாரும் அந்தக் குளத்தில் குளித்தில்லை. யாரும் செய்யாத ஒரு காரியத்தை செய்தால் மரணம் கூடச் சம்பவிக்கும். இதை ஏன் உணர்கிறாயில்லை. உனது எதிரிகள் உன்னை அழிக்கத்திட்டமிட்டுச் செயலாற்றுகின்றனர். பல முறை அனுபவப்பட்டும் உனக்குப் புரிகின்றதில்லையே. ரகு நாதனின்

மனைவி விபச்சாரி தான். இருப்பினும் விரும்பாதவளைப் பலாத்காரம் பண்ணுவது மகா தவறு. அத்துடன் அழகான நற்குணவதியான கலையரசிக்குத் துரோகம் செய்ய உனக்கு எப்படி மனம் வந்தது பார் அவளை, கையெடுத்துக் கும்பிட வேண்டும் என்ற எண்ணம் உனக்குத் தோன்ற வில்லையா? இந்த ஊரில் வேளாண்மை செய்கிறாய். மனைவி உதவி செய்கிறாள். பிற ஊருக்குச் சென்று என்ன செய்யப்போகிறாய்?'' என்று சிறுத்தொண்டன் பேசிக் கொண்டிருக்கும் போது திருமாறன் அவரின் கால்களைப் பற்றிப் பிடித்து அழுதான்.

## 6. ஆண்மைச் செல்வங்கள்

**பிறர் தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார்**
**திறன் வேறு கூறிற் பொறையும் - அறவினையைக்**
**காரண்மை போல ஒழுகலும் இம் மூன்றும்**
**ஊராண்மை யென்னும் செருக்கு.**

பிறர் தன்னைப் புகழ்ந்து பேசும்போது நாணம் கொள்ளுதலும், தன்னை விரும்பாதவர் தாழ்த்திப் பேசும் போது அதைப் பொறுத்துக் கொள்ளளும், மேகத்தைப் போலப் பிறருக்கு உதவி செய்தல் ஆகிய மூன்றும் ஆண்மை மிக்கவரின் செயலாகும்.

‘‘ஐயா, நீங்கள் தெய்வம். இந்த ஊரைக் காப்பாற்றும் கடவுள்.நீங்களில்லா விட்டால் ஊரில் பல குடும்பங்கள் வறுமையால் அழிந்து விடும்.'' என்று திருமாறன் கூறும்போது சிறுத்தொண்டன் குறுக்கிட்டுச் சொன்னார், ‘‘மேலே பேசாதே. நான் எதையும் செய்யவில்லை. நான் நாளைக்கு இறந்ததால் எல்லாரும் வாழவழிதெரியாது இறந்தா போய்விடுவார்கள். நீ இப்போது காரியம் பார்ப்பதற்காக இப்படிச் சொல்கிறாய். நீயும் ஏகாம்பரமும் சந்தியில் நின்று என்னைப் பற்றி

மிகவும் கேவலமாகப் பல முறை திட்டியுள்ளீர்கள். நான் ஆண்டவனுக்குத் தான் கணக்குக் கொடுப்பவன். நீங்கள் எப்படியும் எனக்கு முன்னாலேயே கதைக்கலாம். நான் கோபப்படமாட்டேன். கோபப்படுபவன் பாவம் செய்யத் தொடங்குகிறான். திமிராகப் பேசுபவன் பாவம் செய்கிறான். தீய செயல்களைச் செய்பவன் பாவியாகிறான். இவையெல்லாம் எனக்குத் தெரியும். என்னிடம் விசுவாசம் உள்ளவர்கள் யார்? விசுவாசிகள் போல நடிப்பவர்கள் யாரென்றும் எனக்குத் தெரியும். நான் இவற்றைப் பற்றியெல்லாம் ஆராயாது இரப்பவர்களுக்கு உதவி செய்கிறேன். ஆகையால் என்னைப்பற்றி எப்படியும் விமர்சிக்கலாம்'' என்றார் சிறுத்தொண்டன்.

## 7. ஊமை கண்ட கனவு

**வாளைமீன் உள்ளல் தலைப்படலும் ஆள் அல்லான்**
**செல்வக் குடியுள்ள பிறத்தலும் - பல் அவையுள்**
**அஞ்சுவான் கற்ற அருநூலும் இம் மூன்றும்**
**துஞ்சு ஊமன் கண்ட கனா.**

பெரியவாளை மீனை மிகவும் சிறிய உள்ளான் என்ற பறவை தூக்கமுயற்சிப்பதும், ஆற்றலும் அறிவும் இல்லாதவன் செல்வக் குடியை அடக்கி ஆள முயற்சிப்பதும், அரிய நூல்களைக் கற்ற ஒருவன் சபையிற் பேச அஞ்சுவதுமாகிய இம் மூன்றும் ஊமைகண்ட கனவிற்கு ஒப்பானவை ஆகும்.

சிறுத்தொண்டனின் மடத்தில்பெரியதொரு முத்தமிழ் விழா கொண்டாடப்பட இருந்தது. உலகின் பல பாகங்களிலும் இருக்கும் அறிஞர்கள் பலர் அவ் விழாவில் கலந்து உரையாற்ற இருந்தனர். பண்டிதர் பரந்தாமன் ஓர் ஆசிரியர். பல்வேறு விதமான அறிவுதரும் நூல்களைக் கற்றுப் பல பரீட்சைகள் எழுதிச் சித்தியடைந்தவர். ஆனால் மேடை ஏறிப் பேசப் பயன்படுவர். சிறுத்தொண்டன் தனது

மடத்தில் இருக்கும் முதியவர்களுக்கு அறிவு தரும் நூல்களைக் கற்பிக்குமாறும், சொற்பொழிவாற்றுமாறும், பல முறை கேட்டும் பயம் காரணமமாக மறுத்தவர். மடத்தில் பெருவிழா நடைபெறுவதால் உலகில் உள்ள அறிஞர்களுக்குத் தனது கல்வியறிவின் மேம்பாட்டைக் காட்ட விரும்பிச் சிறுத்தொண்டனிடம் வந்தார்.

“ஐயா, நான் பல்வேறு வகையான நூல்களைக் கற்றது உங்களுக்குத் தெரியும். என்னைப் போலப்பல பட்டங்களைப் பெற்றவர்கள் குறைவு. அதனால் தயவு செய்து முத்தமிழ் விழாவின் போது பேசுவதற்கு இடந்தாருங்கள்” என்றார்.

சிறுத்தொண்டன் சிறிது நேரம் யோசித்தார் பின்பு சொன்னார், “நீங்கள் அறிஞர் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் உங்களின் பேச்சு வன்மை பற்றி யாருக்கும் தெரியாது. ஊரில் நடைபெற்ற சிறுசிறு வைபவங்களில் பேச அஞ்சினீர்கள். அதனால் உங்களைப் பேசவிட முடியவில்லை. தான் கற்ற அறிவை அவையினர்க்கு வெளிப் படுத்த அஞ்சுபவன், ஆற்றலோ அறிவோ இல்லாதவன். செல்வர்களை அடிமைப்படுத்தி ஆள நினைப்பது, வாளைமீனை உள்ளான் என்ற பறவை தூக்கிச் செல்ல முயலுவதைப் போன்றது. இவையாவும் ஊமை கண்ட கனவாகவே இருக்கும். அதை விளங்க முடியாது.” என்றார் சிறுத்தொண்டன். பரந்தாமனுக்கு அவமானமாக இருந்தது.

## 8. பேசக்கூடாத இயல்பு உடையவை

**தொல்லையுள் தோன்றும் குடிமையும் தொக்கு இருந்த**
**நல் அவையுள் மேம்பட்ட கல்வியும் - வெல்சமத்து**
**வேந்து உவப்ப அட்டு ஆர்ந்த வென்றியும் இம்மூன்றும்**
**தாம் தம்மைக் கூறாப் பொருள்.**

ஒரு கற்றோர் அவையில் கூடியிருக்கும் பெரியவரது குடிப்பெருமை, அவரது கல்விச்சிறப்பு, அரசனது வெற்றி ஆகிய மூன்றும் புகழ்ந்து பேசவேண்டிய தேவை இல்லாதவையாகும்.

“பண்டிதரே, நீர் கற்றனீர். உமது குடிப்பிறப்பைப் பற்றியும், உமது கல்வியின் சிறப்புப் பற்றியும் இங்குள்ள அனைவருக்கும் தெரியும். அதை நீரோ அல்லது வேறு யாருமே சொல்லிப் புரிய வைக்க வேண்டியதில்லை. எமது விழாக்குழு யார் யாரைப் பேச அழைப்பது என்று ஆறு மாதங்களுக்கு முன்பே கூடித்தீர்மானித்து அதன்படி செயற்பட்டு வருகிறது. இனிப் புதிதாக எதுவும் செய்வதற்கில்லை. உலகத்தில் வாழும் அறிஞர்களுள் இலக்கணத்தில் வல்லவர் யார்? இலக்கியத்தில் வல்லவர் யார்? நாடகத்தில் வாய்ப்பாட்டால் மிருதங்கத்தில் வல்லவர்கள் யார் யாரென்று அறிஞர்களுக்கு மட்டுமல்ல அனுபவித்தவர்களுக்கும் தெரியும். ஓர் அறிஞரின் குடிப்பிறப்புப் பற்றியும் அவர்களது கல்விச் சிறப்புப் பற்றியும் ஓர் அரசனானால் அவனின் போர் நடவடிக்கைகள் பற்றியும், யாரும் ஆராய்ந்தறியத் தேவையில்லை என்று பெரியவர்கள் கூறியது உமக்குத் தெரியும்” என்றார் சிறுத் தொண்டன்.

## 9. மூடர் விரும்புபவை

**பெருமை உடையார் இனத்தின் அகறல்**
**உரிமையில் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்**
**விழுமிய அல்ல துணிதல் இம்மூன்றும்**
**முழுமக்கள் காதல் அவை.**

நற்குணம் மிக்க சான்றோரின் உறவை நீக்குதல், தன்னை விரும்பாத பெண்ணை நினைத்து வாழுதல்.

சிறந்தவை அல்லாதவற்றைச் சிறந்தவை என்று எண்ணித் துணிதல் ஆகிய இம் மூன்றும் மூடர் விரும்புபவையாகும்.

மகேஸ்வரனின் தந்தை நடராசா சிறுத்தொண்டனின் வீட்டுக்கு மிகவும் வேதனையுடன் வந்தார். அவருக்கு ஒரே ஒருமகன். வர்த்தகனாக இருக்கிறான்.. சிறுத்தொண்டன் மகேஸ்வரனை வந்து சந்திக்கும் படி கூறியாமையால் அவனும் வந்திருந்தான், ‘‘ஐயா, எனக்கிருப்பது ஒரே ஒரு மகன். அவனுக்கு இப்போ முப்பது வயதாகிறது. அவன் ஒரு பெண்ணை விரும்புகிறான். ஆனால் அவளுக்கு இவனில் விருப்பமில்லை. அதனால் அவள் இன்னொருவனைத் திருமணம் செய்து மகிழ்வுடன் வாழ்கிறாள். இவன் அவளை நினைத்து வாழ்கிறான். திருமணம் செய்ய மறுக்கிறான். இவன் திருமணம் செய்யாவிட்டால் எனது குடும்பம் அழிந்துவிடும்’’ அழுதார் நடராசா.

‘‘மகனே, பெரியவர்களது சொற்களைக் கேளாதுவிடல், தனக்குஉரிமை இல்லாத பெண்ணை நினைத்து வாழுதல், சிறந்தவையாக இல்லாதவற்றைச் சிறந்தவை என்று முடிவெடுத்தல் ஆகிய மூன்று செயல்களும் மூடர்கள் விரும்பிச் செய்யும் செயல்களாகும். நீ எனது மாணவன், சிறந்த மாணவன். அப்படியானவன் மூடத்தனமாக நடக்கலாமா..? நீ அவளை விரும்பினாய். ஆனால் அவள் உன்னை விரும்பாததோடு உன்னை ஓர் அற்ப புழுவாக எண்ணி அவமதித்தாள். காதல் என்பது இரு உள்ளங்களின் சங்கமம். அரசனாக இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு அவன் மீது விருப்பமில்லாவிட்டால் விரும்பமாட்டாள். இது கற்ற உனக்குத் தெரியாதா? உனது வம்சம் தழைக்க வேண்டும். உனது பெற்றோர் மகிழவேண்டும். நீ காதலித்தவள் உன்னைக் காதலித்துப் பிரிந்தால் உனது நிலைப்பாடு சரி. ஆனால் அவள் மகிழ்வுடன் வாழும் போது நீ ஏன் உன்னையும் வருந்திப் பெற்றோரையும் வருத்துகிறாய். பெரியவர்களின் சொல்லைக்கேள். உனக்கு உரிமையில்லாத

பெண்ணின் நினைவை அகற்று. நீ பிடித்ததைச் சரியென்று எண்ணாது பெற்றோரின் விருப்பப்படி நட'' என்றார் சிறுத்தொண்டன்..

## 10. நன்மை அளிக்காதவை

**கணக்காயர் இல்லாதஊரும் பிணக்கு அறுக்கும்**
**மூத்தோரை இல்லா அவைக்களனும் - பாத்துண்ணும்**
**தன்மை யிலார் அயலிருப்பும் இம்மூன்றும்**
**நன்மை பயத்தல் இல.**

நல்லாசிரியர் இல்லாத ஊரில் வாழ்வதும், சான்றோர் இல்லாத அவையில் இருத்தலும், பகுத்துக் கொடுத்துண்ணாதவனின் அருகில் இருத்தலும் ஆகிய மூன்றும் தீமைகளையே தரும்.

''மகனே, நல்லாசிரியர் இல்லாத ஊரிலும், சான்றோர் இல்லாதத சபையிலும், பகுத்துக் கொடுத்து உண்ணாதவனின் அருகிலும் இருக்கக் கூடாதென்று பெரியவர்கள் கூறியுள்ளனர். ஏனென்றால், நல்லாசிரியன் இல்லாத ஊர்மக்கள் கல்வியறிவுடையவர்களாக இருக்க மாட்டார்கள். அவர்களால் நன்மை தீமைகளைப் பகுத்துணர முடியாது. அதுபோலச் சான்றோர் இல்லாத சபை எவ்வேளையிலும் குழப்பத்திலீடுபடும். பார்த்திருக்க உண்பவனின் அருகில் இருப்பது பாவம். ஆனால் எமது ஊர் அப்படியான ஊரல்ல. நல்லாசிரியர்கள் இருக்கிறார்கள். அதனால் ஊரவர் தவறாக நடக்க மாட்டார்கள். தவறாக நடந்தால் ஆசிரியர்கள் கண்டித்துத் திருத்துவார்கள்… அதுபோலச் சான்றோர் பலர் ஊரில் இருப்பதால் சபை குழம்புவதில்லை. இங்கு இல்லாதவர்கள் உண்பதற்கு மடங்கள் உண்டு. அப்படியிருக்க நீ தவறான முடிவை எடுக்கலாமா…? துன்பத்தை ஒழிக்க இன்பமான செயல்களைச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் காலப்போக்கில் துன்பம் மறைந்து விடும். உனது மாமன்மகள் அழகானவள்,

குணவதி. அவளைத்திருமணம் செய். சிலநாட்களின் அவள் உன்மீது வைக்கும் அன்பு உனது மனதில் உள்ள வேதனையான எண்ணங்களைப் போக்கிவிடும்'' என்றார் சிறுத்தொண்டன்.

''சரி ஐயா'' என்றான் மகேஸ்வரன்.

## 11. துன்புறுத்தும் செயல்கள்

**விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும் வீழக்**
**களியாதான் காவாது உரையும் - தெளியாதான்**
**கூரையுள் பல்காலும் சேறலும் இம் மூன்றும்**
**ஊர் எல்லாம் நோவது உடைத்து.**

தன்னை அழைக்கதவரின் ஆடும் கூத்தாட்டத்தைச் சென்று பார்ப்பதும், கள்ளை உண்ணாதவனாக இருந்தபோதும் நாவடக்கமின்றி பயனில்லாத சொற்களைப் பேசுவதும், தன்னை நம்பாதவனின் இல்லத்திற்குப் பல முறை செல்லுதலும் ஆகிய மூன்றும் துன்பம் தரும் செயல்களாகும்.

அன்று மாலை காமாட்சியின் மூத்த சகோதரனின் மகள் கவிதா சிறுத்தொண்டனது வீட்டுக்கு வந்தாள். சிறுத்தொண்டனைக் கண்டதும் தூக்கம் கட்டுப்பாட்டை மீறி அழுகையாக வெடித்தது.

''மாமா, நீங்கள் நல்லவர். ஒழுக்கமானவர். ஊரவர்களின் மதிப்பையும் மரியாதையையும் பெற்றவர். இருந்தும் எனது அப்பாவிற்கு இவையெல்லாம் ஏனோ பிடிப்பதில்லை. நல்லவரான உங்களை அவர் தனது பரம விரோதியாகவே நினைக்கிறார். நான் பிறந்தன்றே என்ன உங்களது இளைய மகனுக்கு நிட்சயித்தீகள். அப்பாவும் விரும்பினார். இப்போ அவர் எனக்கு வேறு இடத்தில் திருமணம் பேசுகிறார். இதை நான் விரும்பவில்லை. நாளை எனது நடன அரங்கேற்றம் பட்டணத்தில் உள்ள பெரிய மண்டபமொன்றில் நடைபெறுகிறது. அதற்கு நீங்கள் கட்டாயம் வருதல் வேண்டும். நீங்கள் வராவிட்டால் நான்

ஆடமாட்டேன்’’ என்று அழுதாள் கவிதா. ‘‘மருமகளே, தன்னை அழைக்காதவனின் கூத்தைச் சென்று பார்ப்பதும், தன்னை விரும்பாதவனின் வீட்டுக்குச் செல்வதும் கள்ளருந்தாவிட்டாலும் ஆராயாது தீயசொற்களைப் பேசுதலும், பேசுபவனின் வீட்டுக்குச் செல்வதும் எப்பொழுதும் தீமைகளையே தரும். நான் மண்டபத்திற்கு வந்தால் உனது தந்தை யார் பலர் முன்னிலையில் என்னை அவமதிப்பார். நீ எனது மருமகளானாலும் இன்னொருவனின் மகள். அதனால் உனது தந்தை விரும்பாத இடத்திற்கு நான் வரமாட்டேன். என்னை மன்னித்துக் கொள்’’ என்று கலங்கினார் சிறுத்தொண்டன்.

## 12. நன்மை அளிப்பவை

**தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்**
**வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்**
**கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்**
**கேளாக வாழ்தல் இனிது.**

முயற்சியுடையவன் பிறரிடம் கடன்பட மாட்டான், வந்த விருந்தினருக்குப் பகிர்ந்து கொடுத்து விட்டுத் தான் உண்பவன் மற்றவர்களுக்கு உதவி செய்பவனாவான், பிறர் அறிவித்தவற்றை மனதில் நிறுத்திக்கொள்பவன் மறக்காதவனாவான். இந்த மூன்று குணங்களும் உடையவர்களுடன் வாழ்வது என்றும் இனிது.

பண்டிதர் பரந்தாமனுக்கு அவசரமாகப் பத்தாயிரம் ரூபா தேவைப்பட்டது. அவர் எல்லோரிடமும் கடன் கேட்கமாட்டார். சிறுத்தொண்டனிடம் தான் கடன் கேட்பார். அவர் கடன் வாங்கித் தனது பெற்றோருக்குத் தனது மனைவிக்குத் தெரியாமல் கொடுப்பார். பின்பு ஏதாவது மேலதிக வருமானம் வரும்போது கொடுப்பார். இதற்கு

முன்பும் அவர் சிறுத்தொண்டனிடம் கடனாகப் பெற்ற பணத்தைத் கொடுக்கவில்லை.

பரந்தாமன் மடத்திற்கு வந்த போது சிறுத்தொண்டன் முதியவர்களுக்குக் கற்பித்துக் கொண்டிருந்தார், "நீங்கள் எல்லோரும் முதியவர்கள். முன்பு எப்படி வாழ்ந்தோம் என்பதில் பிரச்சினை இல்லை. இனி எப்படி வாழ வேண்டும் என்று பெரியவர்கள் கூறியதைச் சொல்கிறேன் கேளுங்கள். பிறரிடம் ஒரு போதும் கடன்படாமல் வாழ்பவனே முயற்சியுடையவன். முயற்சியுடையவன் தான் எண்ணியபடி வாழ்வான். முயற்சியில்லாதவர்கள் தான் கடன்பட்டுத் துன்பங்களை அனுபவிப்பார்கள். விருந்தினர்கள் வீட்டுக்கு வந்தால் இருக்கும் உணவை வந்தவர்களுக்குக் கொடுத்துவிட்டு எஞ்சிய உணவை உண்பவன் தான் பிறருக்கு உதவி செய்பவன். ஆசிரியர்கள் சொன்னதின் அர்த்தம் மாறுபடாது அதை நினைவில் வைத்திருந்து சொல்பவன் தான் மறதி இல்லாதவனாவான். இந்த மூன்று குணங்களையும் கொண்டிருப்பவர்கள் என்றும் இன்பமாக வாழ்வார்கள்" என்று சிறுத் தொண்டன் கூறியவற்றைக் கேட்ட பண்டிதர் பரந்தாமன் தான் வந்த விடயத்தைச் சொல்ல வெட்கப்பட்டார். நான் முயற்சியுள்ளவனாக இருந்திருந்தால் மனைவிக்கு பயப்படத் தேவையில்லை. கடன் படவும் தேவையில்லை என்று நினைத்தார். தனக்காகத் தான் சிறுத்தொண்டன் அவ்வாறு சொல்லியிருப்பார். என்றும் நினைத்தார்.

## 13. பெறுவதற்கு அரியவர்

**சீலம் அறிவான் இளங்கிளை சாலக்**
**குடியோம்பல் வல்லான் அரசன் - வடுவின்றி**
**மாண்ட குணத்தான் தவசி என்ற இம் மூவர்**
**யாண்டும் பெற்கரி யார்.**

‘‘ஒழுக்க நெறிகளை அறிந்தவன் இளமையிலிருந்து கூட வாழும் நண்பனாவன். குடிமக்களைக் காப்பவன் அரசானாவன்.. குற்ற மற்ற குணங்களை உடையவன் துறவியாவான்.. இவ் மூவரும் கிடைத்தற்கரியவர்களாவர்.

‘‘ஒழுக்கம் என்பது ஒருவனது இளமைப்பருவத்தில் மனதில் வந்தமைவது. அது இறக்கும் வரை நல்ல நண்பனைப்போல இருந்து வரும் துன்பங்களை அகற்றி இன்பத்துக்குள்ளாக்கும். எமது ஊரில் வாழும் ஒழுக்க சீலரான செல்லப்பாவைப்பாருங்கள். அவர் ஒழுக்கம் மிக்கவர். அதனால் அவருக்கு ஊரே உறவாகியுள்ளது. அதனால் அவருக்கு வரும் இன்ப துன்பங்களை ஊர்மக்கள் மகிழ்வுடன். ஏற்று உதவி செய்கின்றனர். அதற்குக் காரணம் அவரது ஒழுக்கம் தான். அதுபோலக் குடிமக்களை நல்ல முறையில் காப்பவன் அரசன். நல்லஅரசன் ஆளும் வளங்குறையாத நாடு வாங்குகின்ற நாடாகும். அங்கு எதற்கும் பஞ்சமேற்படாது. அடுத்து குற்றமற்ற குணங்களை உடையவர் தான் உண்மையான துறவி . எமது ஊரில் உள்ள சிவன்கோவிலில் வாழும் நமசிவாயம் சுவாமிகளிடத்து எந்தக் குறைகளையும் கண்டு பிடிக்க முடியாது. அதனால் தான் அவர் கடவுளாக மதிக்கப்படுகிறார். அவரது ஒழுக்கமான வாழ்க்கை முறை, பற்றற்ற தன்மை, பாகுபாடு காட்டாத தன்மை ஆகியவற்றால் தான் அவர் கடவுளின் அருளை முழுமையாகப் பெற்று மக்களுக்குச் சேவை செய்கிறார். அவர் செய்பவை யாவும் பலிக்கின்றன. இளமையில் ஒழுக்கம், குடிமக்களை நல்லமுறையில் காத்தல், குற்றமற்ற துறவு ஆகிய மூன்றும் மக்களுக்கு இன்பமளிப்பவை’’. என்றார் சிறுத்தொண்டன்.

## 14. அறிவுடையார் அடையாதவை

**இழுக்கல் இயல்பிற்று இளமை: பழித்தவை**
**சொல்லுதல் வற்றாகும் பேதைமை – யாண்டும்**
**செறுவொடு நிற்கும் சிறுமை இம்மூன்றும்**
**குறுகார் அறிவுடையார்.**

இளமை பருவம் தவறுகள் செய்வதை இயல்பாகக் கொண்டது. அறியாமை என்பது அறிவுடையோர் விலக்கிய செயல்களைச் செய்வது. இழிந்த தன்மை என்பது எப்போதும் சினம் கொள்வது. இம் மூன்றைப் பற்றியும் அறிந்தவர்கள் இவற்றை மேற்கொள்ளார்.

முதியவர்களின் வகுப்பு முடிந்த பின்பு இளைஞர்களுக்கான வகுப்பை எடுத்தார் சிறுத்தொண்டன். அவரது மாணவனான சோதிலிங்கம் இரண்டு தினங்களுக்கு முன்பு கள்ளருந்திவிட்டு வழியால் சென்ற இளம்பெண்ணோடு குறும்புகள் செய்திருந்தான். அதை அவளது தகப்பன் சிறுத்தொண்டனுக்குக் கூறியிருந்தார்.

“அன்பான மாணவர்களே, இளமைப்பருவம் தவறுகள் செய்வதை இயல்பாகக் கொண்டது. அத்துடன் அறியாமையால் பெரியவர்கள் விலக்கிய செயல்களைச் செய்வது. இழிந்த தன்மை என்பது ஆராயாது கோபப்படுவது. இவ் மூன்றும் துன்பத்தையும் கேட்டையும் தரும். சில தினங்களுக்கு முன் சோதிலிங்கம் ஓர் இளம் பெண்ணுக்குக் குறும்புக் கதைகள் கூறியுள்ளான். அது இயல்பானது. ஆனால் மது அருந்திவிட்டுக் குறும்புகள் செய்வது மிகவும் கொடுமைமயானது. அதைப்பற்றிக் கேட்க வந்த உறவினரைக் காரணமின்றித் தகாதவார்த்தைகளால் சோதிலிங்கம் பேசியிருக்கிறான். இது உங்களுக்குத் தெரியும். உங்களிற் சிலரும் அச்செயலுக்கு

உடந்தையாக இருந்திருக்கிறீர்கள். உங்களின் பருவம் அப்படியானது தான். ஆனால் நீங்கள் எல்லை மீறி உள்ளீர்கள். மது அருந்துவது மகாபாவம். மது அருந்திவிட்டுத் தீய செயல்களைச் செய்வது அதைவிடக் கொடிய பாவம். கற்பது அறியாமையை நீக்குவதற்காக ஆனால் நீங்கள் கற்றுவிட்டுத் தீயசெயல்களைச் செய்யக்கூடாது. செய்பவர்கள் கற்கக் கூடாது'' என்றார் சிறுத்தொண்டன்.

## 15. நட்புக் கொள்ளத் தகாதவர்

**பொய் வழங்கி வாழும் பொறி அறையும் கைதிரிந்து**
**தாழ்விடத்து நேர்கருதும் தட்டையும் - ஊழினால்**
**ஒட்டி வினைநலம் பார்ப்பானும் இம்மூவர்**
**நட்கப் படாஅ தவர்.**

பொய் சொல்லி வாழும் வறியவனும், இழிந்தவனோடு நட்புக் கொண்டு வாழும் மூங்கில் போன்ற துறையையுடைய மனதைக் கொண்டவனும், தனது நன்மையை எதிர்பார்த்து நட்புக் கொண்டவனும் ஆகிய மூவரும் நட்புக்கொள்ளத் தகாதவர்கள் ஆவார்.

‘‘பொய்சொல்லி வாழும் வறியவர்களும், முறை தவறி வாழ்பவனோடு நட்புக் கொண்டவனும் தீயவர்கள். அவர்களுடன் நட்புக்கொள்ளக்கூடாது. ஆதவன் வறியவன். சோதிலிங்கத்தின் பொருளுக்காக அவனுக்கேற்றவகைகளில் நடக்காதவற்றை நடக்கிறது என்று பொய் கூறித் தனது வாழ்க்கையை நடத்துகிறான். பொன்னையாவின் மகள் காஞ்சனா, சோதிலிங்கத்தை விரும்புவதாகப் பொய் சொல்லுவான். தினமும் அவளைப்பற்றிய பல தவறான தகவல்களைச் சொல்வான்.. அதனால் தான் இந்தநிலை உருவானது. கஜேந்திரன் பொன்னையாவின் எதிரி, காணி விடயத்தில் இரு குடும்பங்களுக்கும் பிரச்சினை உண்டு. அதற்காகப் பொன்னையாவைப் பழிவாங்கச் சோதிலிங்கத்தைப் பயன்படுத்தியிருக்கிறான். நிர்மலன்

தனது நன்மைக்காகச் செயற்படுகிறான். சோதிலிங்கம் பெரும் நிலச் சுவாந்தன்.. அவனிடம் கொஞ்ச நிலம் பெற்று விவசாயம் செய்து பிழைப்பதே நிர்மலனின் நோக்கம். இவ்வாறு மூவரும் திட்டமிட்டுச் சோதிலிங்கத்துடன் பழகி வருகிறார்கள். நல்ல குடியிற் பிறந்த சோதிலிங்கத்தைத் திருமணம் செய்யப்பல பெண்கள் காத்திருக்கின்றனர்.. அவன் தன் குடிக்குரிய பண்புகளைப் போற்றினால் நானே முன் நின்று அந்தத் திருமணத்தை நடத்தி வைப்பேன்'' என்றார் சிறுத்தொண்டன். அதைக்கேட்டுச் சோதிலிங்கம் திகைத்துப் போனான்.

## 16. இறவாத உடலை அடைந்தவர்

**மண்ணின்மேலை வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்**
**பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும் - உண்ணுநீர்**
**கூவல் குறைவின்றித் தொட்டானும் இம் மூவர்**
**சாவா உடம்புஎய்தி னார்.**

பூமியில் புகழுடன் வாழ்ந்தவனும், கற்புடைய பெண்ணை மனைவியாகப் பெற்றவனும், வற்றாத ஊற்றுடைய கிணறுகளை தோண்டியவனுமாகிய அம் மூவரும் எக்காலத்திலும் இறவாத உடலைப் பெற்றவராவர்.

''சோதிலிங்கம், உனது தந்தை பெரும் தனவந்தன். ஏழை எளியவர்களுக்கு அள்ளிக் கொடுப்பவர். இந்தக் கிராமம் உவர்த்தன்மையானது. ஊரின் மத்தியில் இருக்கும் வைரவர் கோவில் கிணறு நன்நீரை உடையது. கோயில் உனது பாட்டனரது காணியில் உள்ளது. அதனால் கோவில்காணிக்குள் ஒரு கிணறு தோண்டினார். அது மிகவும் நல்ல சுவையானநீர். அதனால் பெருந்தொட்டி ஒன்று கட்டி அதற்குள் இயந்திரத்தின் மூலம் நீரை நிரப்பி ஊரின் பொது இடங்களில் குழாய்கள் அமைத்து குடிநீர் கொடுக்கும் உத்தமர்.

அவரைத் தெய்வமாக இவ்வூரவர்கள் மதித்து வணங்குகின்றனர். வயற்கரைகளில் உள்ள சிறு குளங்கள் இரண்டைப் புணரமைத்து மழை நீரைத் தேக்கியுள்ளார். அதனால் வருடம் முழுவதும் கால் நடைகள் நீரைக் குடிக்கின்றன. அத்துடன் உனது தாய் திருமகளைப் போன்ற உத்தமி. ஊர்மக்களுக்கு அள்ளிக் கொடுப்பவள். என்றும் புகழுடன் இறவாத புகழுடம்பைப் பெற்ற உனது பெற்றோருக்கு நீ தொழுநோய் போல இருக்கிறாய். மது குடிப்பது கொலை செய்வதற்குச் சமமான பாவத்தைத் தரும் என்பதை நீ ஏன் உணர்ந்து கொள்ளவில்லை. உனக்குக் கற்பித்த நான் தான் பாவம் செய்துள்ளேன்'' என்று கலங்கினார் சிறுத்தொண்டன்.

''நீ ஒழுங்காக இருந்தால் நானே முன்னின்று உனது திருமணத்தை நடத்திவைப்பேன்'' என்று சிறுத்தொண்டன் கூறிய பின் சோதிலிங்கம் மனம் மாறிச் சிறுத்தொண்டனின் பாதங்களைப் பிடித்து அழுதான்.

## 17. கல்வித் தோணியைக் கைவிட்டவர்

**மூப்பின்கண் நன்மைக்கு அகன்றானும் கற்புடையாள்**
**பூப்பின்கண் சாராத் தலைமகனும் - வாய்ப்பகையுள்**
**சொல் வென்றி வேண்டும் இலிங்கியும் இம் மூவர்**
**கல்விப் புணைகைவிட் டார்.**

முதுமை வந்த பின்பும் துறவு கொள்ளாதிருப்பவனும், கற்புடைய மனைவியை பூப்புக்கொண்டு நீராடிய பின் தழுவி இன்பம் கொடாதவனும், வாய்ச்சொல்லால் பகைவரை வெல்ல எண்ணும் துறவி ஆகிய மூவரும் கல்வி என்னும் தோணியைக் கைவிட்டவர்கள் ஆவர்.

பொன்னம்பலம் கூறியதைச் சிறுத்தொண்டனால் நம்பமுடியவில்லை. ஆறுமுகத்தின் மகன் சிவகரன் திருமணமாகி ஒரு

வருடம் கூடப் பூர்த்தியாகவில்லை. அவன் துறவு மேற்கொண்டு விட்டானாம். ஆறுமுகத்தின் மூத்த சகோதரன் சகாதேவன் விலை மகள் ஒருத்தியின் வீட்டுக்குச் சென்றபோது சிறு பிரச்சினை தோன்றி அது பெரிதாகிக் காயப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளானாம். அவர் புறப்பட்டுச் சிவகரனின் வீட்டுக்குச் சென்றார். சிவன் கோயிலுக்கு அருகில் பலர் கூட்டமாக நின்றனர். ஒருவனது அவலக் குரல் பலமாகக் கேட்டது. சிறுத்தொண்டன் வந்ததும் மக்கள் விலகி நின்றனர், ‘‘ஐயா. இவன் சாமி யார் வேடம் போட்டு ஊரை ஏமாற்றுகிறான். கழிப்புக்கழிப்பது, சோதிடம் சொல்வது, கிரக சாந்தி செய்வது எனப் பெருந்தொகையாகப் பணத்தை வசூலிக்கிறான’’. ஆத்திரத்துடன் கத்தினான் ஒருவன். பெருமூச்சு விட்டார் சிறுத்தொண்டன். ஊர் இப்போது கெட்டுவிட்டது. பற்றுக்களை நிக்கித் துறவி போல வாழவேண்டியவன் காமம் கொள்கிறான். பற்றை அறுத்துத் துறவு கொண்டான் போலச் சொற்களால் மக்களை ஏமாற்றியவன் மக்களிடம் அடிவாங்குகிறான்’’ என நினைத்து, ‘‘அவனை விடுங்கள். அவனை ஊரில் இனிமேல் கண்டால் காவல் துறையினரிடம் பிடித்து ஒப்படையுங்கள்’’ என்று கூறிவிட்டு அப்பாற் சென்றார். கோவிலின் வடக்கு வீதியின் நின்ற வேப்பமரத்தின் கீழ் சிவகரன் கண்களை மூடியபடி அமர்ந்திருந்தான். அவனுக்கருகில் சிலர் நின்று வேடிக்கை பார்த்தனர். சிறுத்தொண்டனைக் கண்டதும் அவர்கள் எழுந்து வணங்கினர்.

‘‘சிவகரன்’’ என்று அழைத்தார் சிறுத்தொண்டன். சிவகரன் கண் விழித்தான், ‘‘சிவகரன், துறவு கொள்ளும் வயதல்ல உனக்கு. திருமணம் செய்யுமுன் துறவை மேற்கொண்டிருத்தல் வேண்டும். அப்போ துறவை மேற்கொள்ளாது திருமணம் செய்து ஒருவருடம் முடியுமுன் துறவியாகியுள்ளாய். உன்னால் துறவை மேற்கொள்ள முடியாது. பாவம் அப்பெண். அதனால் துறவைக் கைவிட்டு விட்டு

அவளுடன் கூடி வாழ்ந்து கொண்டு துறவிகளுக்குதவு. துறவறத்தை விட இல்லறம் தான் சிறந்தது. என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். இல்வாழ்வான், தனது மனைவி பூப்படைந்து நீராடிய பின் அவளைக்கட்டித் தழுவி இன்பம் அளிக்காதவன் ஆண்மையுடையவனுமல்ல, கற்றவனும் அல்ல. வயது வந்த பின் துறவை மேற்கொள்ளாதவனும் துறவி என்று சொல்லிக் கொண்டு நடிப்பவனும், திருமணம் செய்தவுடன் துறவு கொள்பவனும்கற்ற கல்வியை மறந்தவர்களாவர்'' என்றார் சிறுத்தொண்டன்.

## 18. கள்வர் போல் அஞ்ச வேண்டியவர்

**ஒரு தலையான் வந்துஉறூஉம் மூப்பும் புணர்ந்தார்க்கு**
**இருதலையும் இன்னாப் பிரிவும் - உருவினை**
**உள் உருக்கித் தின்னும் பெரும்பிணியும் இம் மூன்றும்**
**கள்வரின் அஞ்சப் படும்.**

அழைக்காமலே வந்து சேரும் முதுமையும், நெருங்கிய நட்புக் கொண்டவரின் மரணப் பிரிவும், உடலை உருக்கி ஆறாத் துன்பத்தைத் தரும் தீராத நோய் என்னும் மூன்றிற்கும் கள்வருக்குப் பயப்படுவது போலப் பயப்படவேண்டும்.

சிறுத்தொண்டனின் உயிர் நண்பரான சிவஞானம் வயோதிபமடைந்து பக்கவாதத நோயால் அவதிப்பட்டவர். அன்று இறந்துவிட்டவர். அதைச் சிறுத்தொண்டனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர் சிவஞானத்தின் வீட்டுக்கு வந்தார். அவரது மனைவியும் பிள்ளைகளும் அவரைக் கட்டிப்பிடித்து அழுதனர். அவரும் பலமாக அழுதார். முதுமையும் நோயும் அழைக்காமல் வரும். திடீரென்று மரணத்தைக் கொடுக்கும் என்று மாணவர்களுக்குக் கற்பிக்கும் சிறுத்தொண்டன் பலமாக அழுதார். உணர்ச்சிவசப்பட்டு மயங்கி சரிந்தார். வெகுநேரமாகியும் அவருக்கு நினைவு திரும்பாமையால்

அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். வைத்தியர் நெடு நேரம் சிகிச்சை அளித்த பின்பே அவருக்கு நினைவு திரும்பியது. அவரைப் பராமரித்த நாவலன் அவரைப்பணிந்த பின் சொன்னான், “ஐயா, எங்கள் குரு நீங்களே இவ்வாறு கலங்கலாமா? முதுமையும், மரணமும் தீராத நோய்களும் மனிதர் அழைக்காமலே வந்து அவர்களது உயிரைப் பறிக்கும் என்று சொன்ன நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு நினைவிழந்து விட்டீர்கள். வைத்தியர்கள் பெருஞ்சிரமமப்பட்டுத் தான் உங்களைக் காப்பாற்றினர். நட்பு உயிரைப் பறிக்கும் என்பது எனக்குத் தெரியும். நானும் ஊரவர்களும் பயந்து விட்டோம்” என்றான். சிறுத்தொண்டனால் பேச முடியவில்லை.

## 19. தூங்கும் தீங்கினார்

**கொல் யானைக்கு ஓடும் குணம் இலியும் எல்லின்**
**பிறன்கடைநின்று ஒழுகுவானும் - மறம் தெரியாது**
**ஆடும்பாம்பு ஆட்டும் அறிவிலியும் இம் மூவர்**
**நாடுங்கால் தூங்கு பவர்.**

கொல்லும் தன்மை வாய்ந்த மதயானைக்கு அஞ்சி ஓடும் போர் வீரனும், பிறன் மனைவியை விரும்பி அவனது வீட்டு வாசலில் நிற்பவனும், நன்மை செய்தவர்களுக்குத் தான் தீமைகள் செய்வதைப் பாவம் என்று அறியாதவனும் ஆகிய இம் மூவரும் பழிப்புக்கிடமானவர்களாவர்.

ஆறுமுகத்தின் மூத்த சகோதரன் சகாதேவன். தனது நண்பனான நல்லைநாதனின் வீட்டுக்குச் சென்று அவனது மனைவியான கோசலையின் கையைப் பிடித்து விட்டதாக அவள் சொன்னாதால் நல்லைநாதனும் வேறு சிலரும் சகாதேவனைத்

தாக்கினர். சகாதேவன் ஒருவாறு தப்பி ஓடிவிட்டான்.. அவனைத் தாக்குவதற்காக நல்லைநாதனும் அவனது நண்பர்களும் தேடித் திரிந்தனர்.. அதனால் சகாதேவன் சிறுத்தொண்டனின் வீட்டுக்கு வந்தான்.

“ஒரு செயலைச் செய்யுமுன் அதனால் வரும் நன்மை தீமைகளை உணரல் வேண்டும். உனக்கு எழுபது வயதாகிறது. இது தேவையா…? எதற்கும் ஒரு அளவு உண்டு. அதைவிட அந்தந்தப் பருவத்தினருக்குரிய செயல்கள் உண்டு. துறவுகொள்ள வேண்டிய நேரத்தில் காமம் கொள்ளல் கூடாது. உனக்கு நல்லைநாதன் எவ்வளவு உதவிகள் செய்துள்ளான்… அவற்றையெல்லாம் மறந்து அவனுக்குத் தீமை செய்துள்ளாய். அத்துடன் அடுத்தவன் மனைவி மீது காமம் கொண்டு அங்கு சென்று தங்கியிருக்கிறாய். மனிதர்கள் தீமை செய்ய அஞ்ச வேண்டும். போர்வீரன் மதயானைக்கு அஞ்சக்கூடாது. இவ்வாறு பெரியவர்கள் கூறியுள்ளனர். அடுத்தவனின் மனைவியை விரும்பி அவளது வீட்டில் இருப்பதும், நன்மை செய்தவர்களுக்குத் தீமை செய்வதும், அஞ்சக் கூடாதவனிற்கு அஞ்சுவதும் என்றும் தீமையையே தரும். அத்துடன் இம் மூவரும் பழிப்புக்குள்ளாவர்” என்றார் சிறுத்தொண்டன்.

## 20. எல்லார்க்கும் இன்னாதன.

**ஆசை பிறன் கண் படுதலும் பாசம்**
**பசிப்ப மடியைத் கொளலும் - கதித்து ஒருவன்**
**கல்லான் என்றும் எள்ளப் படுதலும் இம்மூன்று**
**எல்லார்க்கும் இன்னா தன.**

அடுத்தவரின் பொருளுக்கு ஆசைப்படுவதும், சுற்றத்தினர் பசியுடன் இருக்க உழைக்கக் கூடியவர்கள் சோம்பற்படுதலும்,

இவன் படிக்காதவன் என்று மற்றவர்களால் இகழப்படுவதும் ஆகிய மூன்றும் துன்பம் தருபவையாகும்.

ஆதவனின் மனைவி சாரதா சிறுத்தொண்டனின் வீட்டுக்கு வந்து சொன்னாள், ‘‘முன்பு எனது கணவன் சோதிலிங்கத்தை ஏமாற்றிப் பிழைப்பு நடத்தினார். இப்போ நீங்கள் காஞ்சனாவை அவனுக்குத் திருமணம் செய்து வைப்பதாகக் கூறியதும் சோதிலிங்கம் எனது கணவரை விரும்புவதில்லை. அதனால் அவரை வெறுக்கிறார். நாங்கள் குற்றம் சொன்னால் உழைக்கச் செல்வதில்லை. அதனால் நாம் பசியோடு இருக்கிறோம். மற்றவர்கள் இவரை இழிவாகப் பேசுகின்றனர். அதனால் உங்கள் பண்ணையில் ஒருவேலை கொடுங்கள். நானும் சேர்ந்து வேலை செய்கிறேன்’’ என்றாள்.

‘‘மற்றவர்களின் பொருட்கள் மீது ஆசைப்படுபவனும் , உழைக்காமல் சோம்பியிருப்பவனும், கற்காததால் தகாத செயல்களைச் செய்வதால் மற்றவர்களால் இகழப்படுபவனும் ஒருபோதும் மகிழ்ச்சியாக வாழ மாட்டான். அவனால் அவனது குடும்பத்தினர் பெரும் துன்பங்களை அனுபவிப்பர். சோம்பற்படாமல் உழைப்பவன் தான் வாழ்க்கையை நல்லமுறையில் அனுபவிப்பான். நல்ல உணவு உண்ணல், நல்ல உடை அணிதல், பெறுமதியான ஆபரணங்களை அணிதல், பிள்ளைகளை மதிப்பு மிக்கவர்களாக்கல் அதனால் மதிக்கப்படுதல் யாவும் உழைப்பால் தான் வரும். எனது தந்தையார் வறியவர். அவரது கடும் உழைப்பால் தான் இக்கிராமம் வளர்ந்தது. அவரைப் பின்பற்றி உழைப்பதால் தான் நான் பலருக்குத் தொழில் கொடுத்துள்ளேன். பிறரை நம்பாமல், பிறரின் பொருளில் ஆசைப்படாமல், கடுமையாக உழைத்தால் முன்னேறலாம். நீ எனது

பண்ணையில் உற்சாகமாக வேலை செய். உனது முயற்சிக்கேற்பச் சம்பளம் தருவேன்'' என்றார் சிறுத்தொண்டன்.

## 21. நல்லவரின் கொள்கைகள்

**வருவாயுள் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்**
**செய்தவை நாடாச் சிறப்பு உடைமை – எய்தப்**
**பலநாடி நல்லவை கற்றல் இம் மூன்றும்**
**நலமாட்சி நல்லவர் கோள்.**

தனது வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை அறச்செயல்களுக்குச் செலவு செய்தலும், செயற்கரிய செயல்களைச் செய்து புகழுடையவனாதலும், கற்பவற்றை நன்கு ஆராய்ந்து கற்றலும் ஆகிய இம் மூன்றும் நற்குணமுள்ளவர்களின் தன்மைகள் ஆகும்.

''ஆதவா, எப்பொழுதும் நல்லவனாக வாழ வேண்டும். சோம்பியிராது கடுமையாக முயற்சிக்க வேண்டும். முயற்சியால் வரும் வேதனத்தின் நான்கில் ஒரு பகுதியை தரும காரியங்களுக்குச் செலவு செய்ய வேண்டும். மற்றவர்கள் முடியாதென்று விலக்கி வைத்த செயல்களை முயன்று செய்தல் வேண்டும். கற்கும் நூல்களை நன்கு விளங்கிக் கற்கவேண்டும். இந்த நடைமுறையைச் சான்றோர் கைக் கொள்வர். தனது உழைப்பில் தானதர்மம் செய்பவன் கடுமையாக உழைப்பான். தான தர்மங்கள் செய்பவனின் வருமானத்தை அதிகரிக்கும், அதி'டத்தை வரவழைக்கும், கடவுளின் கிருபையை உண்டாக்கும். எப்போதும் கடுமையாக முயற்சித்தால் பெரும்தனவந்தனாகலாம். அப்படித் தான் நான் வாழ்ந்து வருகிறேன். அதனால் தான் எனக்குப் பொருள் குவிகிறது. ஊரவர்கள் நான் அதி'ட்டம் செய்தவன் என்றும் தனவந்தன் என்றும் கூற அது தான் காரணம். நீயும் நான் சொன்னபடி வாழ்ந்து பார். சிலவருடங்களில் நீயும் என்னைப்போலப் பெருந்தனவந்தனாவாய். பின் சிறு சிறு

திருட்டுக்கள் செய்து இழிந்த நிலையை அடையத் தேவையில்லை'' என்றார் சிறுத்தொண்டன்.

## வீடு அடையலாம்

**பற்று என்னும் பாசத் தளையும் பலவழியும்**
**பற்று அறாது ஓடும் அவாத்தேரும் - தெற்றெனப்**
**பொய்த்து உரை என்னும் பகை இருளும் இம்மூன்றும்**
**வித்து அறிவீடும் பிறப்பு.**

பற்று எனக்கூறப்படும் வினையும், பொருட்களின் மீது பிடிப்பு, நீங்காமல் ஓடும் அவா என்ற தேரும், தெளிவாகப் பிறருக்குப் பொய்கூறும் தன்மையான இருண்ட பகையும் ஆகிய இம் மூன்றும் பிறவிக்கு வித்தாகும்.

''ஆதவா, பொருள்களின் மீதுள்ள பற்றுத்தான் உன்னைத் திருடச் சொல்கிறது. பொருட்களில் ஏற்படும் பற்றுப் பின் அவாவாக மாறும் அவா என்பது கீழானவற்றை நினைத்து அதை அடைய எடுக்கும் தீய முயற்சியாகும். பொருளின் மீதுள்ள பற்றுத்தான் உன்னைச் செயற்படுத்துகிறது. அதனால் தான் நீ சோதிலிங்கத்துடன் சேர்ந்து செய்யக்கூடாத செயல்களைச் செய்தாய். பொருளின் மீதுள்ள பற்று அவாவாக மாறினால் அது உன்னைப் பொய் பேசவைக்கும். அந்தப் பொய் பஞ்சமா பாதங்களைச் செய்ய வைக்கும். அதனால் பிறவிகள் தொடர்ந்து கொண்டே போகும். பிறந்தவன் வாழ வேண்டும். வாழவேண்டுமானால் கடுமையாக உழைத்தல் வேண்டும். அப்படி உழைத்தாலும் பற்றாக் குறைகள் வரும். பெருந்தனவந்தர்கள் கூடப் பொருட்களின் மீது பற்றுக் கொண்டு அவாவுற்றுப் பொய்பேசி மற்றவர்களை ஏமாற்றுகின்றனர். அதனால் அவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கின்றனர். பிறப்பென்பது துன்பமானதென்று உங்களுக்குத் தெரியும். அதனால் பிறப்பை ஒழியுங்கள். அதற்காகப் பற்றுக்களை அறுத்துக் கடவுளை முழுமனதுடன் வணங்குங்கள். அப்படி

வணங்கினால் பற்றறும். பற்றுத்தான் பிறப்பின் வித்து'' என்றார் சிறுத்தொண்டன்.

## 23. அறப்பயனைக் கட்டும் கயிறு

**தானம் கொடுக்கும் தகைமையும் மானத்தார்**
**குற்றம் கடந்த ஒழுக்கமும் - தெற்றெனப்**
**பல்பொருள் நீங்கிய சிந்தையும் இம்மூன்றும்**
**நல்வினை யார்க்கும் கயிறு**

பிறருக்குப் பொருட்களை மகிழ்வுடன் வழங்கும் தன்மையும், குற்றம் நீங்கிய ஒழுக்கமான வாழ்வும், பிறரின் பொருட்கள் மீது ஆசை கொள்ளாத மனமும் என்ற இம் மூன்றும் அறப்பயனை நீங்காது கட்டும் கயிறாகும்.

சிறுத்தொண்டன் கமத்தில் இருந்து வீட்டுக்கு வந்த போது வீட்டில் நாலைந்து போர் இருந்தனர். சிறுத்தொண்டனைக் கண்டதும் அவர்கள் எழுந்தனர். ஒருமுதியவரும் ஓர் இளைஞனும் அவருக்கருகில் வந்தனர். அவர்களை யார் என்று அவருக்குப் புரியவில்லை.

''ஐயா, நாங்கள் அயலூரவர்கள். இவன் எனது பேரன் அங்குசன். இவன் சிறுவயதாக இருக்கும் போது இவனது தந்தை காலமாகி விட்டார். இதுவரை நான் உழைத்துக் குடும்பத்தைப் பராமரித்ததோடு இவனையும் கற்பித்தேன். இவன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளான். தயவு செய்து இவனைக் கற்பியுங்கள்'' என்றார் அந்த முதியவர்.

அவர்களை இரக்கத்துடன் பார்த்த சிறுதொண்டன் சொன்னார், ''கவனமாகப்படித்து முன்னேறு. நீ கற்று முடிக்கும் வரை நான் உனக்கு உதவி செய்கிறேன். மாதாமாதம் வந்து பணத்தைப் பெறு''

“சரி ஐயா, மிக்க மகிழ்ச்சி” என்ற அங்குசன் அவரது பாதங்களில் விழுந்து வணங்கினான்.

ஊரவனான கதிரேசன் பெரியதொரு வாழைக்குலையைக் கொண்டு வந்து அவரது பாதங்களில் வைத்து விட்டுச் சொன்னான், “நீங்கள் எனக்கு உதவிய பணத்தில் வாழைத்தோட்டம் அமைத்தேன். கடவுள்போல ஊரவர்களுக்கு உதவும் உங்களுக்கு இவ் வாழைக் குலையைக் காணிக்கையாக்குகிறேன்” என்று தழு தழுத்தான்.

“முதல் குலையை விற்றல் வேண்டும். அந்தப் பணத்தில் சிவனுக்குப் பூசை செய்” என்று நூறுரூபா கொடுத்தார் சிறுத்தொண்டன்.

“வேண்டாம் ஐயா, வேண்டாம்”. என்று மறுத்தான் கதிரேசன். அதைக் கவனிக்காத சிறுத்தொண்டன் அடுத்தவர்களை விசாரித்தார்.. அப்போது காமாட்சி உணவு கொண்டு வந்து அங்கிருந்தவர்களுக்குக் கொடுத்தாள்.

“அன்பானவர்களே, பிறருக்குப் பொருட்களைத் தானமாக வழங்கும் பெரும் தகுதியும், குற்றம் நீங்கிய ஒழுக்கமும், பொருட்கள் மீது ஆசை கொள்ளாத மனமும் ஆகிய இம் மூன்றும் அறப்பயனை நீங்காதபடி கட்டும் கயிறாகும்”. என்று மடத்தில் சிறுத்தொண்டன் கூறியது கதிரேசனின் காதில் ஒலித்தது.

## 24. நரகம் போன்றவை

**காண்தகு மென்தோள் கணிகைவாய் இன்சொல்லும்**
**தூண்டிலின் உள் பொதிந்த தேரையும் - மாண்ட சீர்க்**
**காழ்த்த பகைவர் வணக்கமும் இம்மூன்றும்**
**ஆழ்ச்சிப் படுக்கும் அன்று.**

அழகான விலை மகளின் இன் சொல்லும், தூண்டிலில் இடப்பட்ட தவளையும், பலம் பொருந்திய பகைவனின் பணிவும் என்ற மூன்றும் அழிவில் ஆழ்த்தும் நரகம் போன்றவையாகும்.

சோதிலிங்கம் வழக்கமாகச் செல்லும் விலை மகளான கஜேந்தினியின் வீட்டுக்குச் செல்வதில்லை. தான் ஒழுங்காக வாழ்ந்தால் தன்னைக் காஞ்சனா திருமணம் செய்வாள் என நினைத்திருந்தான் அதனால் வருமானமிழந்த கஜேந்தினி ஆதவனை அழைத்து மிகவும் இனிமையாகப் பேசினாள். “ஆதவா, நீ சோதிலிங்கத்தை என்னிடம் அழைத்து வா. நான் உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்வேன். அவரில்லாமல் என்னால் வாழமுடியாது. அழைத்து வருவாயா..?” என்றவள் அவனைத் தழுவினாள். சோதிலிங்கத்தோடு வரும் போது ஏறெடுத்துப் பார்க்காதவள் அன்று அப்படி நடந்தது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவளுடன் உறவாடி விட்டு வீட்டுக்கு வந்தபோது அவனது மனைவி கேட்டாள், “சங்கிலியை அடைவ வைத்து விட்டீர்களா….? என்று அப்போது தான் அவனுக்குச் சங்கிலியின் ஞாபகம் வந்தது. கழுத்தைத் தடவிப்பார்த்தான் அதைக் காணவில்லை. கஜேந்தினியின் இனிமையான வார்த்தைகளின் பலன் அப்போது தான் புரிந்தது. சோதிலிங்கம் பெருந்தனவந்தன். அவன் பணத்தை அள்ளிக் கொட்டுவான். அதனால் கஜேந்தினி மற்றவர்களை மதிப்பதில்லை. ஆதவனைப் பற்றி அடிக்கடி சோதீலிங்கத்திடம் புகாரிடுவாள். அதனால் அவன் ஆதவனைப் பலமாகத் தாக்குவான்… பணம் கொடுக்கமாட்டான். தன்னைப் பரம வைரியாகக் கருதிய கஜேந்தினியின் பணிவின் பலன் அப்பொழுது தான் அவனுக்குப் புரிந்தது. சிறுத்தொண்டன் மடத்தில் கற்பிக்கும் போது கூறியவை அப்போது எதிரொலித்தன, “அன்பானவர்களே,

விலை மகளின் இனிய சொற்களும் , பகைவனின் பணிவும் எப்போதும் சுயநலம் கலந்ததாகத் தான் இருக்கும். அதை உண்மையென நம்புவோர் பெருந்துன்பப்படுவர் . அது போலத் தூண்டிலில் இருக்கும் இரையைக் கௌவும் மீனும் உயிர் இழக்கும். ஆகையால் கவனமாக வாழுங்கள்''.

''நீங்கள் இருக்கும் நிலையைப் பார்க்க எனக்குப் பயமாக இருக்கிறது. கடன்காரன் வந்து கழுத்தைப் பிடிக்கப்போறான். மூத்தவனுக்குப் பரீட்சைக் காசுகட்டவேணும்'' அவள் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். ஆதவன் செயலற்றிருந்தான்.

## 25. கற்றறிந்தார் கொள்ளாத உணவுகள்

**செருக்கினால் வாழும் சிறியவனும் பைத்து அகன்ற**
**அல்குல் விலைபகரும் ஆய்தொடியும் - நல்லவர்க்கு**
**வைத்த அறப்புறம் கொன்றானும் இம் மூவர்**
**கைத்துண்ணார் கற்றறிந் தார்.**

பெரியோரை மதிக்காமல் செருக்குடன் வாழும் சிறுமை உள்ளவனும், தன்பெண்மையை விலை பேசிவிற்றுப் பிழைக்கும் விலை மகளும், துறவிகளின் அறச் சாலையை அழித்தவனும் என்றும் இம்மூன்று செயல்களை உடையவர்கள் கொடுக்கும் உணவைப் பெரியவர்கள் உண்ணமாட்டார்.

அந்தக் கிராமத்தில் யாரையும் மதிக்காமல் மிகுந்த செருக்குடன் வாழ்பவன் நாகராசா. அவன் தனது அறுபதாவது வயது நிறைவைக் கொண்டாடும் முகமாக மடத்தில் உள்ளவர்களுக்கு உணவு கொடுக்க விரும்பினான். அவன் சிறுத்தொண்டனுடனும் சிவன் கோவிற் குருக்களுடனும் முரண்படுவன். அன்று சமைப்பவனான

சிவலிங்கம் சமைக்க மறுத்து விட்டான். சிறுத்தொண்டனின் வற்புறுத்தலுக்காகச் சமைத்தான். அன்று மடத்தில் இருந்த அனைவரும் காலையில் எழுந்து சென்றுவிட்டனர். அவர்களுடன் அங்கு நின்ற நாய்களும் சென்று விட்டன. யாரும் உண்ணாததால் சமைத்த உணவை சிவலிங்கம், நாகராசாவின் வீட்டிற்குக் கொண்டு சென்று கொடுத்துவிட்டான். அன்று காலை உணவைச் கஜேந்தினிக்கு அம்மன் நோய் வந்தமையால் அவள் கொடுக்கத் தீர்மானித்திருந்தாள். அதையும் யாரும் உண்ணவில்லை. இரவு எட்டு மணிக்கு மடத்திற்கு வந்த நாகராசா திமிருடன் பல மணி நேரம் பேசினான்.. யாரும் எதுவும் கூறவில்லை. அவன் பேசி முடித்ததும் மடத்தில் நிரந்தரமாகத் தங்கியிருக்கும் சிவநாதன் என்ற பெரியவர் சொன்னார், “நாகராசா, பிச்சை எடுத்து உண்பவன் பாவம் செய்தவன். அவன் மீண்டும் மீண்டும் பாவம் செய்யக் கூடாது. பட்டினியாக இருந்து செத்தாலும் சாகலாமே தவிரப் பெரியவர்கள் வாங்கீ உண்ணக் கூடாதென்று கழித்து வைத்தவர்களிடம் உணவை வாங்கி உண்டு மேலும் பழியைச் சேர்க்கக் கூடாது. பெரியோரை மதிக்காதவன். தன்பெண்மையை விற்பவள். துறவிகளுடன் பிரச்சினைக்குப் போபவன் ஆகிய மூவரிடமும் இரந்துண்டால் நரகம் தான் கிடைக்கும். அதனால் தான் இன்று காலையும் மத்தியானமும் நாம் உண்ணவில்லை” என்றார்.

## 26. உயர்ந்தவர்

**ஒல்வது அறியும் உறவினனும் ஆருயிரைக்**
**கொல்வது இடை நீக்கி வாழ்வானும் - வல்லிதின்**
**சீலம் இனிது உடைய ஆசானும் இம்மூவர்**
**ஞாலம் எனப்படுவார்.**

செய்ய வேண்டியவற்றைச் செய்யும் உறவினனும், அரிய உயிர்களை அழிப்பதை முன்நின்று தடுப்பவனும்,

ஒழுக்கத்துடன் உயிர்களுக்குக் கற்பிக்கும் ஆசானும் ஆகிய மூவரும் உலகத்தைப் போல உயர்வானவரகள். அவர்கள் என்றும் பெருமைக்குரியவராவர்.

“சிவநாதன் தொடர்ந்து சொன்னார், “ செய்ய வேண்டிய கருமங்களைப் பிறர் அறிவுறுத்தாது செய்யும் சிறுத்தொண்டனைப் போன்ற பெரியவர்களும், உயிர்க்கொலைகளை முன்நின்று தடுக்கும் நெஞ்சுறுதியுள்ளவர்களும், ஒழுக்கத்துடன் தனது மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களும் தான் உலகத்தில் பெருமை உள்ளவர்கள். உனது தங்கையின் கணவன் இறந்தும் நீ அக்குடும்பத்தைக் கவனிப்பதில்லை. ஆசிரியனான நீ வகுப்புக்குச் செல்வதில்லையென்றும் தனியார்கல்வி நிலையம் வைத்துச் சம்பாதிக்கிறாய் என்றும் மக்கள் பேசுகிறார்கள். அப்படியான பாவங்களைச் செய்யும் உன்னிடம் கையேந்தியுண்டால் உனது பழிதீரும்.. அப்பழி எம்மைச் சூழ்ந்து கொள்ளும். பஞ்சமா பாதங்களை மனம் கூசாது செய்யும் உன்னைப்போலக் கேவலமானவர்கள் யாரும் இல்லை. தீயவர்களுடன் சேர்ந்து மிருகங்களைக் கொலை செய்கிறாய். நீயும் ஒரு மனிதனா?” என்று கேட்டார் சிவநாதன்.

## 27. தூய்மையானவரின் செயல்கள்

**உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்**
**பால்பற்றிச் சொல்லா விடுதலும் - தோல்வற்றிச்**
**சாயினும் சான்றாண்மை குன்றாமை இம் மூன்றும்**
**தூஉய மென்பார் தொழில்.**

நீராடி விட்டு உண்ணுதலும், எத்தகைய நன்மைகள் கிடைத்தாலும் அதற்காகப் பொய்ச் சாட்சி கூறாமல் இருப்பதும், உணவின்றி இறக்கும் நிலையிலும் பெருந்தன்மையில் சிறிதும்

குறைவுபடாது வாழ்வதும், ஆகி மூன்றும் மனம், பேச்சு, செயல் என்பவற்றால் தூய்மையாக இருப்பவர்களின் செயல்களாகும்.

‘‘மனம், வாக்கு செயல்களில் தூய்மையாக இருப்பவர்கள் நீராடமல் உணவு உண்ண மாட்டார்கள், எவ்வளவு நன்மைகள் கிடைத்தாலும் அதற்காகப் பொய்ச்சாட்சி கூறமாட்டார்கள், உணவின்றி இறக்கும் நிலை ஏற்பட்டாலும் கேட்கக் கூடாதவர்களிடம் இரந்து உணவு பெற்று உண்ணமாட்டார்கள். நான் பிள்ளைகள் இல்லாததால் அடுத்தவர்களுக்குச் சுமையாக இருக்கக் கூடாதென்று நினைத்து எனது சொத்துக்களையெல்லாம் விற்று இந்த மடத்தின் பேரில் போட்டு விட்டுத் தங்கியிருக்கிறேனே தவிர உன்னைப்போலப் பொய்ச்சாட்சி கூறுபவனும் அல்ல, உண்மைக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபடுபவனும் அல்ல’’ என்றார் சிவநாதன் ஆத்திரமாக.

நாகராசா எதுவும் பேசவில்லை. ஏதாவது பேசினால் சிவநாதன் தான் செய்த தீய செயல்களைப் பட்டியலிட்டுச் சொல்வார். அதனால் அவமானம் தான் உண்டாகும் என்று நினைத்துப் பேசாமச் சென்றார்.

‘‘நெடுக இவர் கேலியும் கிண்டலுமாக கதைப்பார் அதைநாம் கேட்கவேண்டும். பொறுத்துப் பொறுத்து பொறுமை இழந்தமையால் தான் ஏசினேன்’’ என மனவருத்தப்பட்டார் சிவநாதன்.

## 28. உமி குத்திக் கை வருந்துவார்.

**வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும் நோன்பிலியும்**
**இல்லது காமுற்று இருப்பானும் - கல்வி**
**செவிக்குற்றம் பார்த்திருப் பானும் இம்மூவர்**
**உமிக்குத்திக் கை வருந்து வார்.**

தனது வெற்றிக்காக உண்மை சொல்வோரைச் சினக்கும் தீயவனும், தன்னிடம் இல்லாத பொருள் மீது தீராத ஆசை கொண்டு அலைபவனும், சான்றோரின் கல்வி சம்பந்தமான பேச்சில் குற்றத்தை வேண்டுமென்றே கூறுபவனும் என்ற இம் மூவரும் உமியைக் குற்றிக் கைவருந்துவாரைப் போன்றவர்களாவர்.

‘‘நீங்கள் சொன்னது சரி. அதற்காக ஏன் துக்கப்படுகிறீர்கள். அவன் தூய்மையாக வாழும் சிறுத்தொண்டன் ஐயாவைப் பற்றியும் அவர் கற்ற கல்வியைப் பற்றியும் குறை சொல்பவன்.இருப்பினும் தனது காரியம் பார்ப்பதற்காகச் சிறுத்தொண்டன் ஐயாவின் காலிலும் பல தடவைகள் விழுந்திருக்கிறான். தனவந்தன், இருப்பினும் பொருளாசை மிக்கவன். அகல்யாவின் புரிசன் அகல்யாவுக்கு வெளிநாட்டில் இருந்து அழகான அட்டியல் ஒன்று கொண்டு வந்து கொடுத்தவன். அதன் அழகில் மயங்கி அகல்யாவின் கணவனுக்கு ஓயாமல் தொல்லை கொடுத்து அதை வாங்கித் தனது மகளுக்குக் கொடுத்தவன்.. இப்படித் தனது காரியத்தைப் பார்ப்பதற்காக எதையும் செய்யும் அவனை ஏசியதற்காக ஏன் கவலைப்படுகிறாய்’’ என்று கேட்டார் மடத்தில் அவரோடு தங்கியிருக்கும் சுந்தரம்.

‘‘அவன் உமியைக் குற்றிக் கைவேதனைப்படுகிறதே என்று வருந்துபவன் தான். இருப்பினும் வீணாகக்கதைத்து அவனது மனதைச் சீண்டிவிட்டேன். அதற்காக எனது மனம் குழம்பித் தவிக்கிறது’’ என்றார் சிவநாதன்.

## 29. கற்றவர் கருத்து

**பெண்வீழைந்து பின் செலினும் தன்செலவிற் குன்றாமை**
**கண்விழைந்து கையுறினும் காதல் பொருட்கின்மை**
**மண்விழைந்து வாழ்நாண் மததியாமை இம் மூன்றும்**
**நுண்விழைந்த நூலவர் நோக்கு.**

ஒரு பெண்ணே தன்னை விரும்பி வந்தாலும் மனம் மாறாத தன்மையும், தானாகவே வலிய வந்த பிறரின் பொருளை விரும்பித் தனதாக்கிக் கொள்ளாத தன்மையும், பொருள் மண் முதலியவற்றை மதியாமல் வாழ்கின்ற தன்மையும் ஆகிய இம் மூன்றும் சிறப்புக்கள் அனைத்திலும் சிறந்தவையாகும்.

சிவநாதன், சிறுத் தொண்டனின் இரத்த உறவினர். அவருக்குப் பிள்ளைகள் இல்லை. மனைவி இறந்ததும் அவர் அனாதையானர். அதனால் தனது பொருட்களையும், பெருந்தொகையான நிலத்தையும் அவர் சிறுத்தொண்டனின் பெயரில் எழுதி வைக்க விரும்பினார்.. ஆனால் அதைச் சிறுத்தொண்டன் விரும்பவில்லை. அதனால் தூரத்து உறவினர்களும் அவரது மனைவியின் உறவினர்களும் அப்பொருளைத் தமதாக்க விரும்பிப் பிரச்சினைப் பட்டனர். அப்போது சிவநாதன், சிறுத்தொண்டனுக்குச் சொன்னார், ‘‘நீதான் எனது இரத்த உறவினன். என்னை நீதான் கடைசிவரையும் பார்ப்பாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஏனையவர்கள் இப்பொழுது பொருளுக்காகப் பிரச்சினைப் படுகின்றனர். அதனால் உன்னிடம் எனது செல்வத்தை ஒப்படைக்ககிறேன்’’ என்றார்.

‘‘இல்லை. இரத்த உறவினரானாலும், தாமே விரும்பித்தந்தாலும் தமக்கல்லாத பொருட்களின் மீது ஆசைப்படக்கூடாது. அத்துடன் தனது செல்வம், தனது நிலமென்றாலும் அதில் பற்று

வைக்கக்கூடாது. அதோடு ஒரு பெண் வலியவந்து காதல் கொண்டாலும் மனைவியைத் தவிர வேறு எவரையும் உறவாகக்கருதக்கூடாது. அப்படி வாழ்வது தான் சிறப்புக்கள் எல்லாவற்றிலும் மேலான சிறப்பு. அதனால் நீ உனது மறுமை வாழ்விற்காக உனது செல்வத்தைச் செலவு செய். அதற்காக உனக்கு உரிமையான நிலத்தை விற்று உனது பெயரில் வைப்பிலிடு. நீ இல்லாத காலத்தில் அப்பணத்தால் வரும் வட்டிப்பணத்தில் ஏழைகளுக்கு உணவு உடை கல்வி முதலியவற்றிற்குச் செலவு செய்யச்சொல்'' என்றார். அதை நினைக்கச் சிவநாதனுக்குப் புல்லரித்தது.

## 30. நிலைத்த புகழை உடையவர்

**தன்நச்சிச் சென்றாரை எள்ளா வொருவனும்**
**மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்**
**என்று மழுக்காறி கந்தானும் இம்மூவர்**
**நின்ற புகழுடை யார்.**

தன்னை விரும்பி வந்தவரை இகழாதவன், நிலையான செல்வம் சேர்த்த பின்பு தான் முன்பு இருந்த நிலையை மறவாதவன், என்றும் பிறர் மீது பொறாமை கொள்ளாதவன் ஆகிய இம் மூவரும் அழியாத புகழை உடையவராவர்.

குலேந்திரன் வெளிநாட்டில் இருந்து வந்து பெரியதொரு ஆடைத்தொழிற்சாலையை அன்று திறக்கவிருந்தான். அதற்குச் சிறுத்தொண்டன் ஆடைத்தொழிற்சாலை என்று பெயரிட்டிருந்தான். அன்று திறப்புவிழா. ஏராளமான வெளிநாட்டுப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். சிறுத்தொண்டன் நாடாவை வெட்டி, இயந்திரத்தை தொழிற்படச் செய்து தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்தார். பல பிரமுகர்கள் உரையாற்றினர். இறுதியாகக் குலேந்திரன் உரையாற்றினான்.

“அன்பானவர்களே, இந்தக் கிராமத்திற்கு எல்லா வழிகளாலும் உதவுபவர் சிறுத்தொண்டன் ஐயா, தந்தையை இழந்த என்னையும் எனது தாயாரையும் உறவினர்கள் ஏற்காது இகழ்ந்தனர். அப்பா ஒரு குடிகாரனாக இருந்து செய்த அநியாயங்களுக்காக எம்மை வெறுத்துப் பழிவாங்கினர். ஆனால் சிறுத்தொண் ஐயா எம்மை ஆதரித்துக் கல்வியூட்டி வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்தார். அதனால் தான் நான் இன்று இந்த நிலையை அடைந்துள்ளேன். சிறுத் தொண்டன் ஐயா, யாரையும் தன்னைப்போல மதிப்பவர். யாரின் மீதும் பொறாமைப்படாதவர். யாரையும் கோபிக்காதவர். தனது செல்லச் செருக்கை வெளிப்படுத்தாது எளிமையானவராக வாழ்பவர். அதனால் தான் நான் இத்தொழிற்சாலைக்கு அவரின் நாமத்தைச் சூட்டினேன்” என்றான்.

நன்றியுரை கூறிய அவனின் தாயார், “எனது மகன் கூறிய அனைத்தும் உண்மை. ஐயா உதவாவிட்டால். எம்மைப் புதைத்த இடத்தில் புல்முளைத்திருக்கும். உயிருள்ள வரை நாம் அவரை மறக்கமாட்டோம்” என்றாள்.

## 31. தலை சிறந்தவை

**பல்லவையுள் நல்லவை கற்றலும் பாத்துண்டாம்**
**இல்லற முட்டாதியற்றலும் - வல்லிதின்**
**தாளி னொருபொரு ளாக்கலும் இம் மூன்றும்**
**கேள்வியுள் எல்லாம் தலை.**

பல அவைகளுக்கும் சென்று நல்ல கருத்துக்களை அறிந்து கொள்ளுதலும், உள்ளதைப் பகுத்துண்டு இல்லறத்தை நல்ல படி நடத்துதலும், ஊக்கத்துடன் முயற்சி கொண்டு செயற்கரிய செயல்களைச் செய்தலும் ஆகிய இம் மூன்றும் சிறப்புக்களின் மேலான சிறப்பாகும்.

அன்று மத்தியானம் குலேந்திரன் மடத்திற்கு வந்த போது அங்கு தங்கியுள்ளவர்கள் உணவு உண்டு கொண்டிருந்தனர். அவன் சிவநாதனுக்கருகில் சென்று அமர்ந்தான். முன்பு அவன் அங்கு உணவு உண்டு வளர்ந்தவன். இப்போ பெருந்தனவந்தன். அதனால் சமையற் காரணமாக சிவலிங்கம் அவனை உணவு உண்ணுமாறு கேட்கப் பயந்தான்.

“என்ன சிவலிங்கண்ணனை எனக்கு உணவு தரமாட்டீர்களா…? இந்தச் சாப்பாடு தான் எனக்கு உயிர்தந்து மூளையை வளர்த்து விட்டது. சிறுத்தொண்டன் ஐயா, கற்றவர். அதற்கு மேலாகக் கற்றவர்களின் சபைகளுக்குச் சென்று நல்ல கருத்துக்களை அறிந்தவர். உள்ளதைப் பகுத்துண்டு இல்லறத்தை நல்லறமாக்கியவர், ஊக்கத்துடன் முயற்சித்துப் பிறர் செய்வதற்கரிய செயல்களைச் செய்து வரும் மேன்மை உள்ளவர். அவரது கைக்குள் வளர்ந்த நான் அவரைப் போலவே வாழ விரும்புகிறேன் கொண்டு வா சோற்றை” என்றான் குலேந்திரன்.

சிவலிங்கமும் அங்கிருந்தவர்களும் திகைத்துப் போனார்கள் சிவலிங்கம் பெருமகிழ்ச்சியுடன் வாழை இலையில் சோற்றைப் படைத்தான். தடை உண்ட குலேந்திரன் சொன்னான், “பல காலத்தின் பின் இன்று தான் சுவையான அமிழ்தை உண்கிறேன்”.

## 32. கற்றவர் கடன்

**நுண்மொழி நோக்கிப் பொருள் கொளலும் நூற்கு ஏலா**
**வெண்மொழி வேண்டினும் சொல்லாமை – நன்மொழியைச்**
**சிற்றின மல்லார் கண் சொல்லலும் இம்மூன்றும்**
**கற்றறிந்தார் பூண்ட கடன்.**

நூல்களில் உள்ள நுண்மையான பொருளை ஆராய்ந்து பொருள் சொல்லலும், நூல்களில் உள்ள பொருத்தமற்ற கருத்துக்களைப் பிறர் வேண்டினாலும் சொல்லாதிருத்தலும், பயனள்ள கருத்துக்களை சிறுமைக் குணம் இல்லாதவர்களுக்குக் கூறுதலும் ஆகிய இம் மூன்றும் சிறந்த முறையில் கற்றவர்களின் பண்பாகும்.

“கற்றவர்கள் எல்லோரும் கற்றவர்களாகார். கற்றவன் கற்ற படி நடத்தல் வேண்டும். நூல்களில் உள்ள நுண்மையான பொருளைக் கற்காதவர்களும் பயன்பெறுமாறு கூறுதல் வேண்டும். பொருத்தமற்ற கருத்துக்களைச் சபையிலோ, அல்லது யாராவது கேட்டாலோ கூறக் கூடாது. பயனுள்ள கருத்துக்களைச் சிறுமையாளர்களுக்குக் கூறக்கூடாது. இதையெல்லாம் நீயும் சிறுத்தொண்டனும் கடைப்பிடிக்கிறீர்கள். மேடைகளில் பேசுவோர் கூட்டம் சேர்வதற்காகவும், வருமானத்திற்காகவும் பொருத்தமில்லாத பல கருத்துக்களை கூறுகின்றனர். நூல்கள் உண்மையான கருத்துக்களைக் கூறச் சிலர் வர்ணனைகளைப் பயன்படுத்துகின்றன. ஆனால் பேசுவோர் நுண்மையான கருத்துக்களை விட்டு விட்டு வர்ணனைகளைத் தூக்கிப்பிடிக்கின்றனர்.. அவற்றைச் சிறுமையானவர்கள் கேட்டுவிட்டு நடைமுறைப் படுத்துகின்றனர். சமண நூல்கள் கூடப் பெண்களை அளவுக்குமீறி வர்ணிக்கின்றன. அதற்கு நுண்மையான பல கருத்துக்கள் உண்டென்பதைப் பலர் உணர்வதில்லை” என்றார் சிவநாதன்.

“நீங்கள் சொல்வது உண்மை” என்றான் குலேந்திரன்.

## 33. மன்னன் கைவிடலாகாதவை

**கோலஞ்சி வாழும் குடியும் குடிதழீஇ**
**ஆலம்வீழ் போலும் அமைச்சனும் - வேலின்**
**கடைமணிபோல் திண்ணியான் காப்பும் இம்மூன்றும்**
**படைவேந்தன் மற்று விடல்.**

மன்னனின் செங்கோலுக்கு அடங்கி வாழும் மக்களும், அரசையும் குடிகளையும் ஆலம்விழுதைப் போலத் தாங்கிக் காப்பாற்றக்கூடிய அமைச்சனும், சிறந்த வேற்படை வீரர்களின் காவலும் என்ற இம் மூன்றும் நாட்டை ஆளும் அரசர்களுக்கு இன்றியமையாதவையாகும்.

"சிறந்த மக்கள், அறிவும் பலமும் உள்ள அமைச்சன், சிறந்த பாதுகாப்புப் படை என்பன ஓர் அரசனுக்கு இன்றியமையாதவை என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதுபோல மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்பவர்களுக்கும் ஆலோசனை கூறக் கற்றுணர்ந்தவர்கள் தேவை. நீங்கள் உங்கள் செல்வத்தை யாரிடம் ஒப்படைக்கலாம் என்று தடுமாறிய போது சிறுத்தொண்டன் ஐயா உங்கள் இம்மைப் பயன் கருதியும் மறுமைப் பயன் கருதியும் தகுந்த ஆலோசனையை வழங்கினார் அத்துடன் உங்களுக்குப் பாதுகாப்பாகவும் இருக்கிறார். அவரது செயல்களைப் பார்த்த பலர் அவரைப் போல வாழ வேண்டும் என்று விரும்புகின்றனர். உதவிகள் செய்வதில் அரசனைப் போலவும், ஆலோசனைகள் வழங்குவதில் அமைச்சரைப் போலவும், பாதுகாப்பு வழங்குவதில் வீரனைப் போலவும் செயற்படுகிறார். மக்களை நல்வழிப்படுத்தும் ஒரு தலைவனுக்கு இம் மூன்றும் தேவை என்றான்" குலேந்திரன்.

“உண்மை, நீ சரியாகச் சொன்னாய். சிறுத்தொண்டனின் வளர்ப்பின் தன்மை முழுமையாக உன்னிடத்தில் தெரிகிறது” என்றார் சிவநாதன்.

## 34. உலகம் எனபப்பாடுவார்

**மூன்று கடன்கழித்த பார்ப்பானும் ஓர்ந்து**
**முறைநிலை கோடா அரசம் - சிறைநின்று**
**அலவலை இல்லாக் குடியும் இம் மூவர்**
**உலகம் எனப்படுவார்.**

மூன்று வகையான கடமைகளைச் செய்து முடித்த அந்தணர்களும் , நீதி நூல், அரசியல் நூல் என்பவற்றைக் கற்றுணர்ந்து அதன்படி ஆட்சி செய்யும் மன்னனும், மகிழ்வோடு வாழும் குடிமக்களும் என்ற மூன்று வகையானவர்களும் உயர்ந்தவரக்ளாவர்.

“நான் என் மனைவியே உலகம் என்று நினைத்து வாழ்ந்து விட்டேன். அவள் ஒரு பிள்ளையைத் தத்து எடுத்து வளர்ப்போம் என்றாள். நான் விரும்பவில்லை. ஆனால் இப்போது அப்படிச் செய்திருக்கலாம் என்று நினைக்கிறேன்” கவலைப்பட்டார் சிவநாதன்.

“முடிந்ததை எண்ணிக் கவலைப்படுவதால் பயன் இல்லை. மூன்று கடமைகளையும் செய்யும் அந்தணர்கள், நீதி நூலையும் அறநூல்களையும் கற்று அறப்படி ஆளும் அரசன், நல்ல குடி மக்கள் ஆகிய மூவரும் உயர்ந்தவர்களாவர்” என்று நூல்கள் கூறுகின்றன. எமது கோவிற்குருக்கள் மூன்று வகையான கடமைகளையும் விதிமுறை வழுவாது செய்பவர். உங்களைப் பாதுகாக்கும் சிறுத்தொண்டன் அறநூல்களையும் நீதிநூல்களையும் கற்று அதன் படி வாழ்பவர். நீங்களும் வாழ்பவர். நீங்களும் மகிழ்வுடன் இருக்கிறீர்கள். அதனால் நீங்கள் உயர்ந்தவர். ஏன்

வீணாகக் கவலைப் படுகிறீர்கள். சிறுத்தொண்டன் ஐயா இருக்கும் வரை உங்களுக்கு எந்தக்குறையும் வராது'' என்றான் குலேந்திரன்.

''உண்மை'' என்று முகம் மலரச் சிரித்தார் சிவநாதன். அவரது மனத்தில் இருந்த பாரம் முழுவதும் குறைந்து அந்த இடத்தை மகிழ்ச்சி நிரப்பியது.

## 35. முத்தியுலகை அடைபவர்

**முந்நீர்த் திரையின் எழுந்தியங்கா மேதையும்**
**நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்**
**மைந்நீர்மை இன்றி மயலறுப்பான் இம் மூவர்**
**மெய்ந்நீர்மை மேல்நிற் பவர்.**

ஆற்று நீர், ஊற்றுநீர் மழை நீர் என்றும் மூன்று வகையான நீரைக்கொண்ட கடலின் அலையைப் போல மனம் அலையாத அறிவுள்ளவனும், நுண்ணிய அறிவால் நூல்களின் பொருளை உணர்ந்தவனும், மனக் கலக்கத்தை நீக்கியவனும் ஆகிய இம் மூவரும் உண்மை நிலையான முத்திநிலை அடைந்தவராவர்.

சிறுத் தொண்டனின் மூத்த மகன் வாகீசன் வாகனத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது விபத்தேற்பட்டு மரணமானான். அதைக்கேள்விப்பட்ட ஊர் செயலிழந்து விட்டது. சிவநாதன் சிறுத்தொண்டனின் வீட்டுக்குச் சென்றார். சிறுத்தொண்டனது மனைவி விசர் பிடித்தவள் போலப் புலம்பிக் கொண்டிருந்தாள். வாகீசனின் மனைவி மயக்கமடைந்தாள். ஊர்மக்கள் பெருங்குரலெடுத்து அழுதனர்.

ஒருவாரம் கழிந்ததும் மீண்டும் சிறுத்தொண்டனின் வீட்டுக்குச் சிவநாதன் சென்றார். ''கண்கெட்ட கடவுள், நாம் கடவுளுக்கு என்ன செய்யவில்லை? அப்படி இருந்தும் எனது மகனை இந்த வயதில் கொண்டு சென்று விட்டார். அவரோடு சேர்ந்து நானும் தான

தர்மமங்கள் செய்தேன். இது தானா அதற்கான பயன்...? இனி நான் யாருக்கும் ஒரு பிடி அரிசி கூடக் கொடுக்கமாட்டேன்'' என்று அழுதாள் காமாட்சி.

சிறுத் தொண்டன் வந்தவர்களுடன் வழக்கம் போலப் பேசிக்கொண்டிருந்தார். அங்கு சென்றவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. அதைக் கண்ட சிவநாதன் ஆச்சரியப்பட்டார். குலேந்திரன் சொன்னான், ''சிறுத்தொண்டன் ஐயா கற்றதினாலும், தனது நுண்ணறிவினாலும் கேள்விகளினாலும் நூல்களின் முடிவைக் கண்டுணர்ந்தவர். அதனால் அவருக்கு முக்காலம் பற்றித் தெரியும், விதியை மாற்ற முடியாதென்றும் தெரியும். அதனால் தான் அவர் தனது மனைவியைப் போல மனத்தை அலையவிடவில்லை. உலகவாழ்வின் உண்மை நிலையை உணர்ந்தமையால் அவர் மனக்கலக்கமடையவில்லை. அதனால் தான் அவர் என்றும் போல வந்தவர்களுடன் நடந்து கொள்கிறார். உலகவாழ்வின் தத்துவத்தை உணராதவர்கள் தான் வாழ்வு நிலையானதென்றும் தொண்டுகள், உதவிகள், பிரார்த்தனைகள் யாவும் பலனளிக்கவில்லையென்றும் கலங்குவர்'' என்றான் குலேந்திரன். சிவநாதனுக்கு அவன் சொன்னது சரியெனப்பட்டது.

## 36. நூல்களின் உண்மை உணராதார்

**ஊனுண் டுயிர்கட் கருளுடையேம் என்பானும்**
**தானுடன் பாடின்றி வினையாக்கு மென்பானும்**
**காமுறு வேள்வியில் கொல்வானம் இம் மூவர்**
**தாமறிவர் தாங்கண்ட வாறு.**

புலால் உண்பவன், தான் உயிர்களின் மீது அன்புள்ளவன் என்று சொல்வதும், முயற்சிகள் எதுவும் செய்யாமல் தனது வாழ்வு வினைப்படி தான் எல்லாம் நடக்கிறது என்பனும், தாம்

விரும்புபவற்றைப் பெற ஓர் உயிரைப் பலியிடுபவனும் ஆகிய இந்த மூவரும் தாங்கள் அறிந்தபடியே நடப்பவர்களாவர்.

‘‘உலகமே நாடகமேடை என்று பெரியார்கள் கூறியிருக்கிறார்கள். அது உண்மை. நடிப்பவனின் திறமையைப் பொறுத்தது தான் அவன் மேற்கொள்ளும் செயல்களின் வெற்றி. நேற்றுச் சனசமூகநிலையத்தில் ‘‘நேசம் கொள்வோம்’’ என்ற அமைப்பை வெளிநாட்டில் இருந்து வந்த திருமாறன் அங்குராற்பணம் செய்து வைத்தான். அந்த அமைப்பின் உயிர்களை வதைக்காமையாகும். வயது சென்ற கிழப் பசுக்களை மக்கள் கசாப்புக் கடைக்காரர்களுக்கு விற்பனை செய்கிறார்கள். அவற்றை விலை கொடுத்து வாங்கி ஒரு காப்பகம் அமைத்து பாதுகாப்பதே அந்த அமைப்பின் நோக்கம். அதில் இலாபம் பெறலாமென்று நினைத்த சிங்காரம் ஆட்களைப் பிடித்துத் தலைமைப் பதவியைப் பெற்றுள்ளான். அவன் மாட்டு இறைச்சி உண்பவன். இவன் எப்படிப் பசுக்களைக் காப்பாற்றுவான். சுந்தரலிங்கம் பொருத்தமானவன். ஆனால் அவன் முயற்சி எதுவும் செய்யாமல் எனது திறமையை உணர்ந்து தலைவர் பதவியைத் தந்தால் செய்வேன் என்றான். நான் பலமுறை எடுத்துக் கூறியும் அவன் கேட்கவில்லை. விதியிருந்தால் வரும்’’ என்றான். சில முக்கியமான பதவிகள் பொருத்தமானவர்களை விட்டுப் போவதற்குக் காரணம் முயற்சிக்காமை தான்’’ என்றார் சிவநாதன்.

‘‘சுந்தரலிங்கம் பிற்போக்கான கொள்கையை உடையவன். சென்றவாரம் தனக்குக் கிரகதோசம் என்பதால் நன்மைகள் எதுவும் நடக்குதில்லை என்று கூறி மூன்று சேவல்களைப் பலியிட்டுக் கிரியை செய்தவன்’’ என்றான் குலேந்திரன்.

“அப்படியா….? உயிர்களைக் காப்போம் என்றுகூறி உயிர்கள் மீது அன்பு கொண்டுள்ளதாய் நடிப்பவனும், முயற்சிகள் எதுவுமில்லாமல் விதியை நம்புபவனும், தனது நன்மைக்காக உயிர்களைப் பலியிட்டுக் கிரியை செய்பவனும் தான் அறிந்ததைச் செய்யாதுவிடான். அது தான் இயல்பு என்பான்” என்றார் சிவநாதன்.

## 37. வாய்மையாளர் வழக்கம்

**குறளையுள் நட்பளவு தோன்றும் உறலினிய**
**சால்பினில் தோன்றும் குடிமையும் - பால்போலும்**
**தூய்மையுள் தோன்றும் பிரமாணம் இம்மூன்றும்**
**வாய்மை யுடையார் வழக்கு.**

ஒருவன் வறுமைப்படும் போது அவனது நட்பின் அளவை அறிந்து கொள்ளலாம். ஒருவன் துன்பப்படும் போது, அவனது குடிப் பிறப்பின் பெருமையை அறிந்து கொள்ளலாம். ஒருவனது நடத்தையில் இருந்து அவனது உண்மை நிலையைப் புரிந்து கொள்ளலாம். இம் மூன்று தன்மைகளும் சான்றோரின் இயல்புகளை விளக்கும்.

சுந்தரசிவம் ஒரு காலத்தில் மிகப்பெரிய தனவந்தன். அவன் தனவந்தனாக இருந்தபோது கேட்போர்க்கெல்லாம் அள்ளிக் கொடுப்பவன். கோவில்களில் அன்னதானம் செய்பவன். பாடசாலையின் பரிசளிப்பு விழாச் செலவு முழுவதையும் கொடுப்பவன். திடீரென்று வியாபாரத்தில் பெரும்நட்டமடைந்தான். அதனால் அவனால் தான தர்மங்கள் செய்ய முடியவில்லை. மடத்தில் உணவு கொடுப்பதையும் பாடசாலைக்கு உதவுவதையும் நிறுத்தாது மிகவும் சிரமப்பட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தான். சிறுத்தொண்டன் அவரது நண்பர் . பாடசாலைப் பரிசளிப்பு விழா அடுத்தமாதம் வரவிருந்தது. அதற்கு

உதவச் சுந்தர சிவத்தால் முடியாது என உணர்ந்து கொண்ட சிறுத்தொண்டன் சுந்தரசிவத்தின் வீட்டுக்கு வந்தார்.

‘‘நண்பா, நீ தனவந்தனாக இருந்தபோது பலருக்கும் உதவினாய். இப்போது உதவுவது சிரமமென்று நினைக்கிறேன். நாமிருவரும் உயிர் நண்பர்கள் . பாடசாலைக்கு கொடுக்கவேண்டிய பணம் முழுவதையும் நான் தருகிறேன். அதைப்பற்றி நான் யாருக்கும் சொல்லமாட்டேன் . நீ வாங்கமாட்டாய். நீ முயற்சி செய்தால் மீண்டும் தனவந்தனாவாய். அதனால் நான் இப்போது தருவதை வாங்கு பின்பு தா’’ என்றார்.

‘‘சுந்தரசிவத்தால் மறுக்கமுடியவில்லை, ‘‘நண்பா, எனது தொழிலை ஆரம்பிக்கும் படி நீ ஓயாது தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கிறாய். இப்போ எனக்குக் கிரகநிலை சரியில்லை. இன்னும் மூன்று மாதங்களின் பின் தொடங்கலாமென்று நினைக்கிறேன். நான் வறுமைப்பட்ட பின்பு பலர் என்னுடன் பேசுவது கூட இல்லை. உன்னுடைய உதவியும், அன்பும் தான் என்னை வாழவைக்கிறது. நீயில்லா விட்டால் நான் இறந்திருப்பேன்’’ என்று அழுதார் சுந்தரசிவம்.

## 38. செல்வம் உடைக்கும் படை

**தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்**
**கொன்னே வெகுளி பெருக்கலும் - முன்னிய**
**பல்பொருள் வெ.ஃ.கும் சிறுமையும் இம் மூன்றும்**
**செல்வமுடைக்கும் படை.**

ஒருவன் தன்னை மற்றவர்களிலும் பார்க்க மேலானவன் என்று நினைத்துச் செருக்கடைவதும், அடக்கமின்றிப் பேசுதலும்,

தனக்கு விரும்பிய பொருட்களைத் தீய வழியில் அடைய முயற்சிப்பதும் ஆகிய இம் மூன்றும் ஒருவனின் செல்வத்தை அழிக்கும் ஆயுதங்களாகும்.

‘‘பணிவு, அடக்கமின்மை, கடுஞ்சினம், பொருட்கள் மீதுள்ள அவா போன்றன தான் ஒருவனை அழிப்பவை. இவை எல்லாம் என்னிடம் இருந்தன. வணிகனான தனசேகரனை எனக்குப் பிடிக்காது. அவனை விட மேலானவன் நான் என்று நினைத்துச் செருக்கடைந்தேன். அவன் நல்லவன், ஒழுக்கமானவன், நீதியானவன், அதை உணராது நான் செருக்கடைந்து அடக்கமில்லாது தீய செயல்கள் பலவற்றைச் செய்தேன். அவனின் வியாபாரப் பங்காளிகளை விலை கொடுத்து வாங்கினேன். அவ் வேளையில் நீ எனக்கு உண்மையானவற்றைக் கூறினாய். தீய வழிகளை நாடாதே என்றாய். நான்கேட்காததால் தான் அழிந்தேன். செருக்கும், ஆணவமும் அவாவும் தான் ஒருவனை அழிக்கும் ஆயுதங்கள் என்று நீ கூறியபோது பரிகசித்தேன். இப்போது தான் உண்மையான நிலை எனக்குப் புரிகிறது. ஒருவன் ஒழுக்கமாக வாழ்ந்தால் உன்னைப்போல உயர்வடையலாம் என்றும் ஒழுக்கம் தவறித் தீய வழிகளில் மனதை ஈடுபடுத்திச் செயற்பட்டால் என்னைப்போல ஆகலாம் என்றும் உணர்ந்து கொண்டேன். இனி நான் அவ்வாறு நடக்க மாட்டேன்’’ என்று அழுதார். சுந்தரசிவம்.

## 39. அறம் அற்றவரின் செயல்கள்

**புலைமயக்கம் வேண்டிப் பொருட்பெண்டீர்த் தோய்தல்**
**கலமயக்கம் கள்ளுண்டு வாழ்தல் - சொலைமுனிந்து**
**பொய்ம்மயக்கம் சூதின் கண்தங்கால் இம் மூன்றும்**
**நன்மையி லாளர் தொழில்.**

பொருளை விரும்பும் விலை மகளோடு உறவு கொள்ளுதல் இழிவான இன்பம். பிறர் குடித்த கள்ளை வாங்கிக் குடித்தல் என்பது எச்சில் பாத்திரத்தை விரும்புதல் என்றும், சூதாட்டத்தை விரும்புவது பொய்யில் கலத்தல் என்றும் பெரியவர்கள் கூறியுள்ளனர். இம் மூன்று செயல்களும் அறமில்லாதவர்களின் செயல்களாகும்.

‘‘நண்பா, நீ என் மீது உயிரையே வைத்திருக்கிறாய். ஆனால் நீ நினைப்பதைப்போல நான் நல்லவனுமல்ல, உன் மீது விசுவாசங் கொண்டவனும் அல்ல. அதனால் தான் நான் கெட்டழிந்தேன்.. எனது அழிவுக்கு முக்கியமான காரணம் இழிவான இன்பத்தைத் தரும்விலை மகளின் உறவு. அத்துடன் விலை மகளின் வீட்டுக்குச் சென்றால் மது அருந்துவேன். அவளும் அவளது தகப்பனும் சகோதரர்களும் மது அருந்துவார்கள். அவர்கள் குடித்த மிச்சத்தை நானும் நான் குடித்த மிச்சத்தை அவர்களும் குடிப்பார்கள். மது கொடுக்கும் மயக்கத்தின் அவள் தாயம் விளையாட அழைப்பாள். அதுவும் ஒரு வகைச் சூது தானே. ஆரம்பத்தில் விளையாட்டாக ஆரம்பித்துப் பின் பொருள் வைத்து ஆடும் அளவிற்குத் தள்ளப்பட்டேன். அதுவும் எனது வியாபாரம் அழியக் காரணமாகியது’’ மனம் வருந்தினார் சுந்தரசிவம்.

‘‘எல்லாம் எனக்குத் தெரியும். உனது தந்தையார் உனக்கு எவ்வேளையிலும் உதவி செய்யும்படியும், திருத்தும் படியும் கூறிவிட்டுத்தான் இறந்தார்.. அந்தப் பெரியவரின் வாய்ச் சொல்லை என்னால் மீற முடியவில்லை’’ என்றார் சிறுத்தொண்டன்.

## 40. தொல்லறிவாளர் தொழில்

**வெகுளி நுணுக்கும் விறலு மகளீர்கட்கு**
**ஒத்த வொழுக்க முடைமையும் - பாத்துண்ணும்**
**நல்லறி வாண்மை தலைப்படலும் இம் மூன்றும்**
**தொல்லறி வாளர் தொழில்.**

தனக்குள் ஏற்பட்ட பெருஞ்சினத்தைக் குறைக்கும் வல்லமையும், மங்கையர்க்கு இசைந்த ஒழுக்கம் உடைமையும், பகுத்து உண்கின்ற தன்மை எவ்வேளையிலும் இருத்தலும் ஆகிய இம் மூன்றும் பழம்பெரும் நூல்களைக் கற்றுணர்ந்தவர்களின் இயல்பு ஆகும்.

‘‘நண்பா, நீ பழந்தமிழ் நூல்கள் பலவற்றைக் கற்று அதில் உள்ளபடி நடந்து வருகிறாய். நான் உன்னுடன் பலமுறை முரண்பட்டிருக்கிறேன். அதனால் பெருங் கோபங்கொண்டு திட்டியும் இருக்கிறேன். அதற்கெல்லாம் நீ துக்கப்பட்டதில்லை. என் மீது கோபங் கொண்டதில்லை. என்னை வெறுத்ததில்லை. ஆனால் நீ சென்றபின்பும் நான் கோபப்படுவேன். பல நாட்களுக்கு அக் கோபம் மனதில் இருக்கும். அதனால் வெறுப்பும், காழ்ப்புணர்ச்சியும், பழிவாங்கும் எண்ணமும் உண்டாகும். என்னால் கோபத்தை அடக்க முடிதில்லை. அதனால் மனைவியுடன் பிரச்சினைப்படுவேன். அவளைப்பலமாகத் தாக்குவேன். அதனால் அவள் என்னுடன் பேசமாட்டாள். அதற்காகவும் தாக்குவேன். இதனால் எனது சகோதரிகளும் அவளது சகோதரிகளும் எனது தாயும் என்னைக் கண்டு அஞ்சுவர். ஆனால் உனது மனைவியும் சகோதரிகளும் பெற்றோரும் ஏனையோரும் உன்னில் பெரும் பாசம் வைத்துள்ளனர். பெண்கள் மென்மையானவர்கள் அதனால் அவர்களுடன் அன்பாகவும் மென்மையாகவும் நட என்று சொல்வாய். அதையும் நான் கேட்பதில்லை. அதைவிட எந்நேரமும் அன்பும் இரக்கமும் உன் நெஞ்சில் உண்டு. அதனால் எப்போதும் இனிமையானவனாக,

பிறர்க்குக்கொடுத்துதவுபவனாக வாழ்கிறாய். இது என்னால் முடியவில்லை'' என்று கலங்கினார் சுந்தசிவம்.

## 41. அறங்களுள் சிறந்தவை

**அலந்தார்க் கொன்று ஈந்த புகழும் துளங்கினும்**
**தன்குடிமை குன்றாத் தகைமையும் - அன்போடி**
**நாள்நாளும் நட்டார்ப் பெருக்கலும் இம் மூன்றும்**
**கேள்வியு ளெல்லாந் தலை.**

வறியவர்களுக்குக் கொடுப்பதால் வந்தடையும் புகழும், வறுமை வந்தடைந்த போதும் தன் குடிப்பிறப்பிற்குரிய இயல்பில் மாறாத தன்மையும், அன்புடன் நடந்து நண்பர்களை பெருக்கிக் கொள்ளும் தன்மையும் ஆகிய இம் மூன்றும் நரம் கேட்கின்ற அறங்கள் பலவற்றிலும் சிறந்தவையாகும்.

''ஒருவன் பல வழிகளாலும், புகழை சேர்க்கலாம். வறியவர்களுக்குக் கொடுப்பதால் வரும் புகழ் தான் அழியாது நிற்கும். அத்துடன் மறுமைக்கும் உதவும். அதை நீ செய்யாது ஆடம்பரமாக வாழ்ந்து தனவந்தர்களுக்கும் மதிப்புள்ளவர்களுக்கும் கொடுத்துதவினாய். அதனால் எந்த விதமான பயனும் இல்லை. பொருள் உள்ளவன் பொருளில்லாத போது விலகிவிடுவான். அவனுக்கு கொடுப்பது விருந்து, ஏழைகளுக்குக் கொடுப்பது அமிழ்து. இதை நான் முன்பு கூறியபோது நீ ஏற்கவில்லை. ஆனால் நீ வறுமையடைந்த போதும் குடிப்பிறப்பிற்கு கேடு வரும்படி நடக்கவில்லை. அதனால் தான் நான் உன்னை விரும்பினேன். வறுமை போய்விடும். வறுமையில் பட்ட வடு நீங்காது. அதை உணர்ந்துள்ளாய். அன்பைப் பெருக்கிச் சுற்றத்தை சேர்ப்பவன் எவ்வேளையிலும் இன்பமாக வாழ்வான். அதையும் நீ செய்யவில்லை. இனியாவது முன் செய்த தவறுகளை உணர்ந்து பெரியவர்கள் கூறியபடி வாழ். அப்படி

வாழ்ந்தால் இழந்த செல்வங்களையெல்லாம் பெறுவாய்'' என்றார் சிறுத்தொண்டன்.

## 42. வேளாண் குடிக்கு அழகு

**கழகத்தால் வந்த பொருள்கா முறாமை**
**பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் - ஒழுகல்**
**உழவின்கண் காமுற்று வாழ்ததல் இம்மூன்றும்**
**அழகென்ப வேளாண் குடிக்கு.**

சூதாட்டத்தின் மூலம் வரும் பொருளை விரும்பாமையும், பல காலம் தொடர்ந்து பழகினாலும் அந்தணர்களுக்கு கொடுக்கும் மதிப்பைக் குறைக்காமலும், பயிர்த்தொழிலில் விருப்பங்கொண்டு வாழ்தலும் ஆகிய இம் மூன்றும் வேளாளர் குலத்திற்கு அழகு என்று சான்றோர் கூறுவர்.

''சூதாடுவதன் மூலம் பெரும்பொருள் சில சமயம் வரும்.. அதை விரும்பி மீண்டும் சூதாட்டத்தில் ஈடுபட்டால் வந்து பொருளும் உள்ள பொருளும் போய்விடும். இது இயல்பு. நீ சூதாட்டத்தின் மீது விருப்புக் கொண்டு பயிர்ச் செய்கையைக் கை விட்டாய். உனது விளைநிலங்களை விலை மகளின் விருப்பத்திற்கேற்ப அவள் கூறியவர்களுக்குக் கொடுத்தாய். மண்ணுள் ஒன்றைப் போட்டால் அது பத்தாய் நூறாய் தரும் என்று உனது தந்தை கூறியபோது நீ கேட்கவில்லை. அத்துடன் எமது பரம்பரைக்குக் கிரியைகள் செய்பவர் சண்முகநாதக் குருக்கள். அவர் மக்களுடன் மிகவும் அன்பாகப் பழகுபவர். அதனால் அவர் உனக்குப் புத்திமதிகள் கூற, நீ அவரைப் பழகியவராகக் கருதிப்பலமுறை அவமதித்தாய். இவை யாவும் நீ அறிந்து செய்த பாவங்கள். சூதாடுவதை விரும்பாதவன், பயிர்ச்செய்கையை ஆர்வத்துடன் செய்பவன், அந்தணர்களை மதிப்பவன் ஆகிய இவ் மூவரும் வேளான்

குலத்தின் சிறப்பை பேணுபவர்கள். இவர்கள் எப்போதும் இன்பமாக வாழ்பவர்கள். அதனால் நீ பிறருக்குக் கொடுத்த விளை நிலத்தை முதலில் பெற்று பயிர்ச்செய்கையிலிடுபடு'' என்றார். சிறத்தொண்டன்.

## 43. உண்மையான உயர்வு நிலை

**வாயின் அடங்குதல் துப்புரவாம் மாசற்ற**
**செய்கை அடங்குதல் திப்பியமாம் - பொய்யின்றி**
**நெஞ்சம் அடங்குதல் வீடாகும் இம்மூன்றும்**
**வஞ்சத்தின் தீர்ந்த பொருள்.**

தீயவற்றை எண்ணாதிருத்தலே மனத்தூய்மையாகும். குற்றமற்ற செயல்களைச் செய்தலே மேலான பிறவியை தருவதாகும். பொய்மை இல்லாமல் மனம் அடங்குதலே மேலான வீட்டின்பத்தைத் தருவதாகும். இவை மூன்றும் பொய்யினின்றும் நீங்கியவையாகும்.

''எவ்வேளையிலும் நான் தீயவற்றையே எண்ணினேன். அதனால் மனம் அதைச் செய்யுமாறு ஏவிக்கொண்டேயிருந்தது. இதனால் எனது மனம் எவ்வேளையிலும் அசுத்தமாகவே இருந்தது. தீயவற்றைச் சற்றும் யோசிக்காது திமிருடனும் மகிழ்வுடனும் செய்தேன். அதனால் தான் நான் வர்த்தகத்தில் நட்டமடைந்தேன். பொய் பேசாது வாழ்வது தான் முத்தியின்பம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நான் பொய்பேசாத நாள் இல்லை. கலப்படப் பெருட்களை மிக நல்ல பொருட்கள் என்று சத்தியம் செய்வேன். அந்தச்சத்தியம் தான் எனது வாழ்க்கையைச் சீர்குலைத்தது. தீயவற்றை எண்ணாமல், தீயவற்றை செய்யாமல், பொய்பேசாமல் வாழ்ந்து வரும் நீங்கள் இன்பமாக வாழ்கிறீர்கள் பணம் மலை போலக்குவிகிறது. இப்போது கெட்டவனான எனக்கு மனமுவந்து உதவி செய்து விட்டு வெளியே சொல்ல மாட்டேன் என்கிறீர்கள். இப்படியான அறவாழ்வை நானும் வாழ்ந்திருக்கலாம்

என்று இப்போது தான் தோன்றுகிறது. கண்கெட்ட பின்பு செய்யும் சூரிய நமஸ்காரம் போன்றது தான் எனது எண்ணங்கள்'' என்று கலங்கினார் சுந்தரசிவம்.

## 44. அறிவுடையார்க்கு நோய் ஆவன

**விருந்தின்றி யுண்ட பகலும் திருந்திழையார்**
**புல்லப் புடைபெயராக் கங்குலும் - இல்லார்க் கொன்று**
**ஈயா தொழிந்தகன்ற காலையும் இம்மூன்றும்**
**நோயே யுரனுடையார்க்கு.**

விருந்தினர் இன்றித் தனித்திருந்து உண்டு கழித்த பகற்பொழுதும் அழகிய அணிகலங்களை அணிந்த மனைவியைத் தழுவிக்கழிக்காத இரவும், வறியவர்களுக்கு பொருள் கொடுக்காது விட்ட நாளும் என்ற இம் மூன்றும் அறிவுடையவர்கள் எண்ணுந்தோறும் நோய்கள் ஆகும்.

''விருந்தினர்கள் இன்றி தனித்திருந்து உண்பது தான் எனக்கு விருப்பம். அதனால் தான் உறவினர்கள், நண்பர்களைத் தவிர்ப்பேன். இதை விடச் சில வேளைகளில் வெளியூரில் வேலைகள் இருப்பதாகக் கூறிவிட்டு விபச்சாரிகளின் வீடுகளுக்குச் சென்று விடுவேன். விபச்சாரிகளுக்குப் பொருட்களை அள்ளி அள்ளிக் கொடுப்பேனே தவிர ஏழைகளுக்கு கொடுக்க மாட்டேன். இதெல்லாம் பெருநோய்கள் என்று பெரியவர்கள் கூறியிருப்பதைக் கேட்டும் நான் அதன் உண்மையை உணரவில்லை. எல்லாவற்றையும் இழந்த பின்பு இவற்றை யோசித்துப் பார்க்கும் போது அவை எல்லாம் பெரும் நோயைப்போலத் துன்பம் தருகின்றன. எனது மனைவி இரவு உணவு தரும் போது தனது விருப்பத்தை குறிப்பால் உணர்த்துவாள். அதைப்புரிந்தும் விலைமகளின் மீதுள்ள மோகத்தால் அவளைத் தவிர்க்க விட்டுச்சென்ற நாட்களை நினைத்துப்பார்க்க வேதனையாக

உள்ளது. விலைமாதர் எனது பொருளாதாரத்தை மட்டும் இழக்கப்பண்ணவில்லை. மானம், மரியாதை, குடும்பக் கௌரவம் ஆகியவற்றையும் இழக்கப்பண்ணியதோடு மனதைக்குழப்பி உடலை வருத்தி நோயாளியாக்கிவிட்டனர்'' என்றார் சுந்தரசிவம்.

## 45. நரகத்தில் வீழ்பவர்.

**ஆற்றானை ஆற்றென் றலைப்பானும் அன்பின்றி**
**ஏற்றார்க்கு இயைவ கரப்பானும் - கூற்றம்**
**வரவுண்மை சிந்தியா தானுமிம் மூவர்**
**நிரயத்துச் சென்று வீழ் வார்.**

ஆற்றலில்லாதவனைச் செயலைச் செய்யச்சொல்லி வருத்துவதும், தன்னிடம் இரப்பவர்களுக்குக் கொடுக்காமல் மறைத்து வைப்பவனும், எமன்வருவான் என்பதை எண்ணிப்பாராதவனும் ஆகிய இந்த மூவரும் நரகத்தின் போய் விழுபவர் ஆவர்.

''எனது மனங்கவர்ந்த விலை மகளின் இனத்தவன் ஒருவனுக்கு எனது வர்த்தகநிலையத்தில் முகாமையாளர் பதவி வெற்றிடமானது, அதை அவனுக்குக் கொடுக்கும் படி அவள் வற்புறுத்தினாள். அவன் முழுச்சோம்பேறி. எந்த ஒரு செயலையும் செய்து பழக்கப்படாதவன். அதனால் அப்பதவியை நான் அவனுக்குக் கொடுக்க மறுத்தேன். அதனால் அவள் எனது உறவே வேண்டாமென்றாள். பலநாட்களாக அவள் என்னுடன் கதைக்கவில்லை. அதனால் துன்பப்பட்டநான் அவள் விரும்பியவாறு நடந்தேன். அவன் தவறுகள் விடும்போது இடித்துச் சொன்னேன். அனுபவம் உள்ளவர்களோடு சேர்த்து வைத்தேன். அவன் வேலையைக் கறகவில்லை. சும்மா இருந்து சம்பளம் பெற்றான். நான்நட்டமடைய அதுவும் ஒரு காரணம். அதைவிட எனது சகோதரி தனது கணவனின் நோய்க்கு சிகிச்சை பெறப்பணம் கேட்டாள். நான் கொடுக்கவில்லை. அதனால் எனது

மைத்துனன் காலமானான். அவன் காலமான பின்பும் நான் இரக்கப்படவில்லை. அது தான் விதி என்று நினைத்தேன். என்னிடமுள்ள பணத்தின் மூலம் நான் யமனையும் வெல்வேன் என்று நினைத்தேன். ஆனால் இப்போ கையில் பணமில்லாத போது தான் நான் செய்த செயல்கள் மூலம் நரக வேதனையை அனுபவிக்கிறேன். என்றார் சுந்தரசிவம்.

## 46. அறிவுடையோர் அணுகாதவை

**கால்தூய்மை யில்லாக் கலிமாவும் காழ்கடிந்து**
**மேல்தூய்மை யில்லாத வெங்களிறும் - சீறிக்**
**கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளி இம்மூன்றும்**
**குறுகார் அறிவுடை யார்.**

பலமான கால்களைக் கொண்டிராத குதிரையும், கட்டுத் தடியை முறித்துக் கொண்டு ஓடும் மதயானையும், மாணவனின் நலனில் அக்கறை கொள்ளாத ஆசிரியரும் என்ற இம் மூவரையும் சான்றோர் விரும்பமாட்டார்.

‘‘பலமான கால்கள் அமையாத குதிரையையும், கட்டுத்தறியை முறித்துக்கொண்டு ஓடும் மதயானையையும் அரசன் விரும்பமாட்டான். அவற்றிற்குச் செலவு செய்து தீன் கொடுப்பதே நட்டம் என்று நினைப்பதால் தான் அரசன் விரும்புவதில்லை. அத்துடன் மாணவனின் நலனில் அக்கறைப்படாத ஆசிரியர்களாலும் மாணவர்கள் பயன்பெறமாட்டார்கள். நான் எனது ஆசை நாயகியின் விருப்பத்திற்கேற்றபடி நடந்ததால் அவளால் நியமிக்கப்பட்ட முகாமையாளன் பலமில்லாத கால்களை உடைய குதிரையைப் போலவும் கட்டுத் தறியை முறித்துச் செல்லும் யானையைப்போலவும், மாணவனின் நலனில் அக்கறை கொள்ளாத ஆசிரிரைப் போலவுமே நடந்து கொண்டான்.

பலமில்லாத குதிரையைப் போல எந்நேரமும் படுத்திருப்பான். இல்லாவிட்டால் மதயானையைப் போல இலக்கில்லாமல் செயலாற்றுவான். கல்வியறிவில்லாததால் அவனால் சிந்தித்து நடக்கமுடியவில்லை. அதனால் தொழிலாளர்கள் தாம் நினைத்தபடி நடந்தனர், அதுவும் எனது சரிவுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். அவனுக்கு வேலை தெரியாததால் அவனால் திருடவும் முடியவில்லை. திருடரைப் பிடிக்கவும் முடியவில்லை'' என்று பெரு மூச்சுவிட்டார் சுந்தரசிவம்.

## 47. காக்கப்பட வேண்டியவை

**சில்சொற் பெருந்தோள் மகளிரும் பல்வகையும்**
**தாளினால் தந்த விழுநிதியும் - நாடோறும்**
**நாத்தளிர்ப்ப ஆக்கிய உண்டியும் இம்மூன்றும்**
**காப்பிகழல் ஆகாப் பொருள்.**

குறைவான இனிய சொற்களைப் பேசும் நற்குணமுள்ள பெண்களும், முயற்சியினால் தேடிய சிறந்த பொருளும், தினமும் நாவில் நீர் சுரக்கும்படி சுவையாகச் சமைக்கப்பட்ட உணவும் என்னும் இம் மூன்றும் காத்துக்கொள்ள வேண்டிய பொருட்களாகும்.

''எனது மனைவி மிகவும் குறைவாகவே பேசுவாள். என்னைத் தன் உயிரிலும் மேலாகக் கருதுவாள். நாவிலே நீர் சுரக்கும்படி தினமும் சுவையான உணவுவகைகளைச் சமைப்பார். அவள் எனது மாமன் மகள். தேடுதற்கரிய செல்வம். இருந்தும் அவளை ஒதுக்கிவிட்டு நான் எந்நேரமும் பேவசிக் கொண்டேயிருக்கும் அவ்விபச்சாரியை விரும்பினேன். ஆரம்பத்தில் அவளது பேச்சுக்கரும்பாக இனித்தது. பின் அவள் தனது தேவைகள் குறித்து அதிகமாகப் பேசுவாள். அதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அருமையான அறுசுவைமிக்க உணவை விட்டு விட்டு

அவள் ஊட்டி விடும் உப்புச் சப்பற்ற உணவை அமிர்தமாக நினைத்து உண்டேன். அத்துடன் பலரும் விரும்பி உறவாடும் பொதுமகளான அவளை தேடுதற்கரிய பொருளென நினைத்து மயங்கினேன். காக்கவேண்டியவற்றைக் காக்காமலும், கேட்க வேண்டியவற்றைக் கேட்காமலும், உண்ண வேண்டியவற்றை உண்ணாமலும் விட்டதால் தான் நான் இந்த நிலைக்காட்பட்டேன். எல்லாவற்றையும் இழந்த பின்புதான் ஞானோதயம் வந்திருக்கிறது. இனி நான் எந்தத் தவறும் விடமாட்டேன்'' என்றார் சுந்தரசிவம். அவரது வார்த்தைகளில் உறுதி தென்பட்டது.

## 48. மெய்ப்பொருள் உணர்ந்தவர்

**வைத்ததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த**
**சோறென்று கூழை மதிப்பானும் - ஊறிய**
**கைப்பதனைக் கட்டியென்று உண்பானும் இம்மூவர்**
**மெய்ப்பொருள் கண்டு வாழ் வார்.**

ஒருவன் இகழ்ந்து பேசிய சொற்களை இனிய சொற்களாக எண்ணுபவனும், தான்பெற்ற கூழை நெய்யிட்ட சோறு என்று நினைப்பவனும், கசப்பான உணவை இனிப்பான உணவென்று நினைத்து உண்பவனும் ஆகிய இம் மூவரும் மெய்யுணர்வைப் பெற்றவர்களாவர்.

''ஒருகாலத்தில் மனைவி தரும் சுவையான உணவுகளே எனக்குக் கசந்தன. பொய்யானவர்கள் கூறும் சுயநலன் கலந்த வார்த்தைகள் தேனாக இனித்தன. கசப்பான வார்த்தைகளை யாராவது விளையாட்டாகக் கூறினாலும் அவர்களைச் கொல்லவேண்டும் என்ற வெறி மனதில் உருவானது. பல சமயங்களில் அது செயற்பட்டுப் பலரை வருத்தியது. இப்போ உலகத்தைப் பற்றிப் புரிந்து கொண்டேன். பணம் பொருளை

இழந்தாலும் சரியான பாடத்தைக்  கற்றுள்ளேன். உங்களைப் போன்ற மெய்மையை உணர்ந்த ஞானிகள் தான் யார் இழிவாகப் பேசினாலும் கவலைப்படமாட்டார்கள். உண்பது கூழானாலும் அது சுவையான அமிழ்து என்று நினைத்துக் குடிப்பார்கள். உண்ணும் உணவு கசப்பானாலும் அது இனிமையானது என்பீர்கள். அது மெஞ்ஞானம். அந்த நிலைக்குத் தான் நானும் வந்துள்ளேன். அதற்குக் காரணம் இயலாமை, வறுமை, இரக்க வெட்கப்படுதல் போன்றனவாகும்.''

''நான் செய்த தீமைகள் என்னை எல்லாவழிகளாலும் தாக்கிச் செயலிழக்கச் செய்து விட்டன. அப்படியான நிலையில் உங்களது ஆதரவும் அன்பும் தான் என்னை வாழவைக்கிறது'' என்றார் சுந்தரசிவம்..

## 49. எவருக்கும் பயனற்றவர்.

**ஏவாது மாற்றும் இளங்கிளையும் காவாது**
**வைதெள்ளிச் சொல்லும் தலைமகனும் - பொய்தெள்ளி**
**அம்மனை தேய்க்கும் மனையாளும் இம்மூவர்**
**இம்மைக் குறுதியில் லாள்.**

பெற்றோரால் ஏவப்பட்ட செயலைச் செய்யாத மகனும், மனைவியை அன்புடன் நேசிக்காது இகழும் கணவனும், பண்புள்ளவரின் வீட்டுச் செல்வத்தை அழிக்கும்  மனைவியும் ஆகிய இம் மூவரும்  பயனற்ற பிறவிகளாவர்.

''நான் ஒரு பயனற்ற பிறவி. பெற்றோரால் ஏவப்பட்ட எந்தவிடயத்தையும் செய்யவில்லை. நான் முகாமையாளரை நியமிக்கும் போது எனது தந்தை எனக்கு அறிவுரை கூறினார். அவனைப் பற்றிய தகவல்களை அறிந்து சொன்னார். அவனை நியமிக்க வேண்டாம் என்று கூறினார். நான் அவர் கூறியவற்றைக்

கேட்கவில்லை. அத்துடன் நற்குணவாதியான எனது மனைவியை அலட்சியப்படுத்தினேன், இகழ்ந்தேன், கண்டபடி ஏசினேன். சிலவேலைகளில் அவளைத் தாக்கினேன். ஒரு பண்பான குடும்பத்தில் இருந்து அக் குடும்பத்தின் செல்வத்தை அழிப்பவள் தான் பயனில்லாத பிறவி, துன்பப் பிறவி என்று சான்றோர் கூறியுள்ளனர். ஆனால் எனது மனைவி திருமகள். அவள் ஆரம்பித்து வைக்கும் தொழில்களால் பணம் குவியும். அவளை விட்டு விட்டு எனது ஆசை நாயகியாக இருந்தவளைக் கொண்டு புதிய தொழில் ஒன்றை ஆரம்பித்தேன். அது உள்ள தொழிலையும் அழித்துவிட்டது. நான் பயனில்லாதவன், வாழ்ந்தாலென்ன, மாண்டலென்ன? இப்போது வாழ்க்கையில் பிடிப்பை நீங்கள் உண்டாக்கியிருக்கிறீர்கள். அது நான் செய்த முற் பிறவிப் பயன்'' என்றார் சுந்தரசிவம்.

## 50. மழையைக் குறைப்பவர்

**கொள்பொருள் வெ.ஃகிக் குடியலைக்கும் வேந்தனும்**
**உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்**
**இல்லிருந்து எல்லை கடப்பாளும் இம்மூவர்**
**வல்லே மழையறுக்கும் கோள்.**

வரிப்பணத்தை மக்களை வருத்திப்பெறும் அரசனும், உறவினரிடம் பொய் கூறி வாழும் மனிதரும், வீட்டில் எல்லை மீறிச் செல்லும் மனைவியும் என்ற இம் மூவரும் மழையைக் குறைக்கின்ற கோள்களாவர்.

‘‘மக்களைக் கொடுமைப்படுத்திக் கொடுங்கோல் அரசன்வரி சகூலிப்பதைப்போல நானும் எனது வாடிக்கையாளரை வருத்தித் தரவேண்டிய பணத்தை வசூலிப்பேன். நான் மொத்த வியாபாரியாக இருந்தமையால் கிராமங்களில் உள்ள சில்லறை வியாபாரிகள் என்னிடம் கடனாகப் பொருட்களைப் பெறுவார்கள். முன்பு அவர்கள்

தரும்போது வாங்கிய நான் பின்பு தவணை கொடுத்தேன். அத் தவணைக்குள்த் தராதவர்களுக்கு தண்டப்பணம் வாங்கினேன். சிறு வியாபாரிகள் என்னிடம் பொருட்களை வாங்காது விட்டனர். அத்துடன் உறவினர்கள் என்னிடம் பொருள் கேட்டால் பொய்க் காரணங்கள் கூறிக் கொடுக்காமல் விட்டேன். அத்துடன் அவர்களுக்குப் பொய்க்காரணம் கூறிப்பணம் பெற்றுவிட்டு ஏமாற்றினேன். எனது நண்பன் வரோதயன். அவனது மனைவி கொடியவள். அவள் தனது விருப்பப்படி வரோதயனை ஆட்டிப் படைப்பாள். அவள் சொல்வதைக் கேளாவிட்டால் உணவு கொடுக்கமாட்டாள். அப்படியான பெண்ணும், உறவினரிடம் பொய்யான வார்த்தைகளை கூறி ஏமாறுபவனும், கொடுமையாக வரி வசூலிக்கும் அரசனும் உள்ள நாட்டில் மழை பெய்யாதென்றும் பெரியவர்கள் கூறுவார்கள். எனது வீட்டிலும் வரதோயன் வீட்டிலும் மகிழ்ச்சியே இல்லை. மழைபெய்யாத பாலைவனம் போலத்தான் எமது மனங்கள் உள்ளன'' என்றார் சுந்தரசிவம்.

## 51. ஆராய்ந்து சொல்லப்பட வேண்டியவை

**தூர்ந்து ஒழுகிக் கண்ணும் துணைகள் துணைகளே**
**சார்ந்தொழுகிக் கண்ணும் சலவர் சலவரே**
**ஈர்ந்தகல் இன்னாக் கயவர் இவர்மூவர்**
**தேர்ந்தக்கால் தோன்றும் பொருள்.**

ஒருவர் வருமானம் இன்றித் துன்பப்படும் போது உதவி செய்பவர் என்றும் நல்ல உறவினராகவே இருப்பர். மனம் மகிழ்ந்து பேசிய போதும் பகைவர் பகைவராகவே இருப்பர். உதவிகள் எதுவும் செய்யாத கயவர் பிளக்கப்பட்ட கருங்கல்லைப் போலவே இருப்பர். இம் மூவர்களும் தம் இயல்பை மாற்றமாட்டார்கள்.

''ஒருவரின் இயல்பை மாற்றமுடியாது. ஒருவர் வறுமையால் வாடும்போது பயனை எதிர்பாராது கொடுத்துதவி செய்பவர்கள் என்றும்

யாருக்கும் கொடுத்து உதவுவார்கள். பகைவர் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடப்பர். தமது காரியங்களைச் செயற்படுத்துவதற்காகப் பகைவர் நட்புரிமையைப் பாராட்டினாலும் சந்தர்ப்பம் வரும்போது தம்பகையைத் தீர்த்துக் கொள்வார்கள். கயவர்கள் கருங்கல்லுப் போன்றவர்கள். அவர்களது மனதில் ஈரமே இராது. கருங்கல்லைப் பிளந்தாலும் அதில் ஈரம் இருக்காதது போல உறவினர் கொடுந் துன்பப்பட்டாலும் அவர்கள் இரங்கமாட்டார்கள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். நான் மிகவும் வறுமைப்பட்ட நிலையிலும் எனது பகைவர் சதா தொல்லை தந்து கொண்டே இருக்கிறார்கள். எனது சகோதரனுக்கு நான் எவ்வளவோ உதவிகள் செய்துள்ளேன். அவனைக் கெஞ்சிக் கேட்டாலும் ஒருவயிறு உணவு தரமாட்டான். வாழ்க்கையில் ஏற்பட்ட சரிவு என்னைப் பல வகையாலும் உணரச் செய்துள்ளது'' என்றார் சுந்தரசிவம்.

## 52. அணிகலன்கள்

**கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம் காமுற்ற**
**பெண்ணுக் கணிகலம் நாணுடைமை – நண்ணும்**
**மறுமைக் கணிகலம் கல்வி இம்மூன்றும்**
**குறியுடையார் கண்ணேயுள.**

கண்ணுக்கு அழகு தருவது இரக்கம். குலப்பெண்ணுக்கு அழகு தருவது நாணம். மறுபிறப்புக்கு அழகுதருவது கல்வி. இது மூன்றும் மெய்யுணர்வு பெற்றவனிடம் இருக்கும்.

சோதிலிங்கம் சிறுத்தொண்டனின் வீட்டுக்குக் வந்தபோது அவர் இருக்கவில்லை. அவரது மனைவி வந்து இருக்குமாறு கூறினாள்.. அவன் முதல் நாள் சுவாமியார் சொன்னதை நினைத்துப் பார்த்தான். ''கண்கள் எல்லாம் கண்கள் அல்ல. ஓர் ஏழையின் துயரைக்கண்டு இரக்கப்படும் கண்களே உண்மையான

கண்கள்... இரக்கம் தான் கண்களுக்கு அழகையும், பார்வையையும் தருவது. குலப்பெண்களின் கண்களில் இரக்கமும் நாணமும் கலந்திருக்கும்'' சோதிலிங்கம் காமாட்சியைப் பார்த்தான் அவளது கண்கள் அழகாக இருந்தன. ''சிறுத்தொண்டன் ஐயாவால் தான் நான் திருந்தினேன். பணம் இருக்கிறதென்ற திமிரில் காட்டு விலங்குகளைப் போல கொடுமை செய்த என்னைத் திருத்திய கடவுள் அவர்'' என்று அவன் கூறும் போது காமாட்சியின் முகம் நாணத்தால் சிவந்ததை அவன் கண்டு கொண்டான். குலப்பெண்கள் தமது கணவனை நினைத்ததும் நாணமுறுவர். பிறர் கணவனைப் பற்றிக் கதைத்தாலும் நாணப்படுவர் என்று அவன் படித்திருக்கிறான். அது உண்மை என்று அன்று உணர்ந்து கொண்டான், கண்ணுக்கு அழகு தருவது இரக்கம், குலப்பெண்களுக்கு அழகு தருவது நாணம் அதுபோல மறு பிறப்புக்கு அழகு தருவது கல்வி. கல்வி கற்றவன் கற்றபடி வாழ்ந்தால் இம்மையிலும் மறுமையிலும் இன்பமடைவான்'' என்று நமசிவாயம் சுவாமியார் பேசியது அவனது காதில் ஒலித்தது.

## 53. தெரியாதவை

**குருடன் மனையாள் அழகும் இருள்தீரக்**
**கற்றறிவு இல்லான் கதழ்ந்துரையும் - பற்றிய**
**எண்ணின் தெரியாப் பொருள்**
**பண்ணின் தெரியாதான் யாத்கேட்பும் இம்மூன்றும்.**

குருடன் ஒருவனின் மனைவியின் பேரழகும். ஐயம்திரிபறக் கற்காத அறிவில்லாதவனின் குதர்க்கமான பேச்சும், இசையைப் பற்றித் தெரியாதவன் யாழின் இசையை விமர்சித்தலும் என்ற இம் மூன்றும் அவரவர் அறியாதவையே.

‘‘நமசிவாயம் சுவாமிகள் பேரறிவாளன். முற்றும் உணர்ந்தவர். அதனால் ஊரவர்கள் அவரைத் தெய்வமாகக் கருதித் தமது அறியாமையைப் போக்கிக் கொள்கின்றனர். ஆனால் நான் அவரை அறியாமல் விமர்சித்துப் பாவத்தைத் தேடிக் கொண்டேன். அதையும் எனக்கு அறிவித்தவர் சிறுத்தொண்டன் ஐயா, ‘‘சோதிலிங்கம். நீ கற்றவன். அதனால் அறியாதவற்றைப் பற்றிப் பேசலாகாது. ஒரு குருடன் தனது மனைவியின் அழகை அறிய மாட்டான். தெளிவில்லாமல் ஒரு நூலைக்கற்றவன் அதன் உட்பொருளை உணரமாட்டான். இசையைப் பற்றிய அறிவில்லாதவன் இசையை ரசிக்கமாட்டான். அது போல நீ கற்றாலும் கற்றபடி நடப்பதில்லை. உன்னோடொத்த இளைஞர்களுடன் நீ எப்படி வேண்டுமானாலும் கதைக்கலாம். ஆனால் அறிஞர்களோடு கதைக்கக் கூடாது. நமசிவாயம் சுவாமிகள் பேரறிஞர். அவரை ஊரவர்கள் தெய்வமாக மதிக்கின்றனர். அப்படியானவரைப் பற்றி நீ அறிந்த பின்பு தான் பேசுதல் வேண்டும். நீ அவரைப் பற்றி அறியாது குருடன் தனது மனைவியின் அழகைப் பற்றிப் பேசுவது போலப் பேசிவருவது சரியல்ல’’ என்று சிறுத்தொண்டன் கூறியது அவனது காதில் ஒலித்தது.

## 54. அறிவற்ற செயல்கள்

**தன்பயம் தூக்கரைச் சார்தலும் தாம் பயவா**
**நல்பயம் காய்வின் கண் கூறலும் - பின்பயவாக்**
**குற்றம் பிறர்மேல் உரைத்தலும் இம் மூன்றும்**
**தெற்றெனவு இல்லார் தொழில்.**

தனக்கு உதவி செய்யாதவரைத் தனக்குதவி செய்பவர் என்று நினைத்து நட்புக்கொள்ளலும், ஒருவன் கோபம் கொண்டபோது வேண்டாத சொற்களைக் கூறுதலும், பயன்தராத குற்றங்களை மற்றவர்களின் மேற்கூறலும் இம் மூன்றும் அறிவற்றவர்களின் செயல்களாகும்.

“உன்னைப் பற்றிக் கேவலமாகக் கதைக்கும் நிர்மலனை உனக்கு நன்மை செய்யும் நல்ல நண்பன் என்று நினைக்கிறாய். அவன் கடுங்கோபங் கொண்டு ஏசினாலும் அதைப் பெரிதாக எண்ணாது கேலி பண்ணிச் சிரிக்கிறாய். அதனால் அவன் உனக்கு முன்னால் அடங்கியவன் போலச் செயற்படுகிறான். ஆனால் நீ இல்லாத இடத்தில்உன்னைத் தூற்றுகிறான். நீயும் உனது தீய நண்பர்களும் எப்போதும் அடுத்தவர்களைப் பற்றியே கதைக்கிறீர்கள். சுவாமியார் அடுத்தவர்களின் பொருளுக்கு ஆசைப்படுவதில்லை.. எல்லோரையும் வேறு பாடின்றி நேசிக்கிறார். ஆனால் நீ அவரின் மேல் பல குற்றங்களைச் சுமத்துகிறாய். குற்றங்கள் உண்மையானவையானால் அவை திருத்தப்பட வேண்டியவை. அத்துடன் அவை பற்றிச் சம்பந்தப்பட்டவர்களுடன் தான் பேச வேண்டும். கள்ளைக் குடித்து விட்டு என்ன செய்கிறோம், என்ன பேசுகிறோம் என்று புரியாது பேசுகிறீர்கள். இப்படிப் பேசுவது அறிவுத் தெளிவு இல்லாதவர்களின் செயலாகும். உனது தந்தை பெரியவர். அவரின் மதிப்பைக் குறைக்காதே” என்று சிறுத்தொண்டன் கூறியது அவனின் காதில் ஒலித்தது.

## 55. ஒற்றற் போன்றவர்.

**அருமறை காவாத நட்பும் பெருமையை**
**வேண்டாது விட்டு ஒழிந்த பெண்பாலும் யாண்டானும்**
**செற்றம்கொண் டாடும் சிறுதொழும்பும் இம்மூவர்**
**ஒற்றாள் எனப்படு வார்.**

வெளிப்படுத்தக் கூடாத இரகசியத்தை வெளிப்படுத்தும் நண்பனும், கணவனையும், உறவினர்களையும் விரும்பமால் குறைகள் கூறும் மனைவியும், எப்பொழுதும் பகை உணர்வுடன் குறை கூறும் வேலையாளும் என்னும் இம் மூவரும் ஒற்றர் போன்றவராவர்.

“முருகேசுவின் மனைவி தலைக்கணம் பிடித்தவள். அவள் புரிசனையும் புரிசனது உறவினர்களையும் மதிப்பதில்லை. அதனால் அவள் அவர்களைப் பற்றி மிகவும் தரக் குறைவாகப் பேசுவாள். நீ முருகேசனின் நண்பன். அவள் நீ அங்கு சென்ற போது நல்லை நாதனின் மனைவியைப் பற்றித் தரக்குறைவாகப் பேச அதை நீ நல்லநாதனின் மனைவிக்குக் கூறியதால் ஏற்பட்ட பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளது. நல்ல ஒரு குடும்பத்தில் பிறந்த உனக்கு உது தேவை தானா? உனது கமத்தில் வேலை செய்யும் பரணீதரனை வேலையை விட்டு நீக்கினாய். அதன் பின் அவனைச் சேர்த்தாய். அதனால் அவன் பகை கொண்டு உன்னைப் பற்றிக் கேவலமாகக் கதைக்கிறான். உனது தீய செயல்களை பற்றித் தனக்குத் தெரியுமென்னும் அதைச் சொல்லி விடுவேன் என்றும் கூறித்திரிகிறான். இதெல்லாம் நல்லதற்கல்ல நண்பனின் இரகசியங்களை வெளிப்படுத்துபவனும் , கணவனையும் உறவினரையும் மதியாத மனைவியும், பகை உணர்வுள்ள வேலைக்காரனும் பகைவர்களின் ஒற்றர்கள் என்பதை உணர்ந்து கொள்” என்று சிறுத்தொண்டன் கூறியது நினைவுக்கு வந்தது. பெரு மூச்சுவிட்டான் சோதிலிங்கம்.

## 56. உயர்வான வழிமுறைகள்

**முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு**
**தந்தையும் தாயும் தாயும் வழிபட்டு – வந்த**
**ஒழுக்கம் பெருநெறி சேர்தல் இம்மூன்றும்**
**விழுப்ப நெறிதூரா வாறு**

இளமையில் கல்வி கற்றலும், அதன் பின்பு தந்தையினதும் தாயினதும் வழிப்படுத்தலில் வாழ்தலும், அத்துடன் பெரியோரைச் சார்ந்து நடத்துதலும் என்ற இம் மூன்றும் உயர்வுக்குரியவர்கள் வாழும் வழிகளாகும்.

சிறுத்தொண்டன் வீட்டுக்கு வந்தார். அவரைக் கண்டதும் சோதிலிங்கம் எழுந்து நின்று வணங்கினான், ''சோதி, உனது நடத்தைகளில் நான் பூரண திருப்தியடையவில்லை. இளமையில் கற்க வேண்டியவற்றைக் கற்றல் வேண்டும். அதை நீ செய்யவில்லை. அப்படிச் செய்யாவிட்டாலும் அதன் பின்பு பெற்றோரின் விருப்பங்களை அவர்களின் மனம் மகிழுமாறு பூர்த்தி செய்யவேண்டும். உனது தந்தை தான் கொள்வனவு செய்த நிலத்தில் தென்னம் பிள்ளைகள் நடுகிறார். அதைக் கண்காணிக்கச் சொல்லியும் நீ கண்காணிக்கவில்லையென்றும் உனது நண்பர்களுடன் சேர்ந்து திரிகிறாயென்றும் கூறிக் கவலைப்பட்டார். திருமணம் செய்ய விரும்பும் நீ அதற்கான வழிவகைகளைச் செய்யாது இளைஞனைப்போல நண்பர்களுடன் சுற்றித்திரிந்தால் பெண் தருவோர் சம்மதிப்பார்களா...? பெரியவர்களின் வார்த்தைகளை மதிக்கவேண்டும். ஒப்புக்கு நீ என்னிடம் வருகிறாயே தவிர மனச்சுத்தத்துடன் வரவில்லை. இளமையில் கற்பதும் பின் தாய்தந்தையரின் சொல்லைக் கேட்பதும் பெரியவர்கள் கூறியபடி வாழ்வதும் தான் உயர்வைத் தருமே தவிர அவற்றை அசட்டை செய்வது அழிவைத் தான் தரும்'' என்றார் சிறுத்தொண்டன்.

## 57. இன்பம் அளிக்காதவை

**கொட்டி அளந்தமையாப் பாடலும் தட்டித்துப்**
**பிச்சைபுக் குண்பான் பிளிற்றலும் - துச்சிருந்தான்**
**ஆளும் கலங்கா முறுதலும் இம்மூன்றும்**
**கேள்வியுள் இன்னா தன.**

தாளத்திற்கு ஏற்ப அமையாத பாடலும், இரப்பவனின் பெருங்கூச்சலும், வாடகைக்குக் குடியிருப்பவன், வீட்டுக்காரனின் பொருட்களை விரும்புதலும் என்ற இம் மூன்றும் கேட்கும் போது பெரும் துன்பங்களைத் தருவனவாகும்.

“உன்னைத் திருத்தி நல்ல வாழ்வு அமைத்துக் கொடுக்கும் படி உனது தாயும் தந்தையும் எந்நேரமும் என்னை இரக்கின்றனர். அவர்களது துன்பத்தைப் போக்கவும், உன்னாலும் உனது நண்பர்களாலும் இக்கிராமதிற்கு ஏற்படும் தீமைகளை விலக்கவுமே உன்னோடு நான் தொடர்பு வைத்தேன். தாளத்திற்கு அமையாத பாடலைக் கேட்டு ரசிக்கமுடியாது. இரப்பவன் பெருங்குரலெடுத்து அழுது இரந்தால் கேட்டுச் சகிக்க முடியாது. அதுபோல வீட்டில் குடியிருப்பவன் அவ் வீட்டைத் தனதாக்க விரும்புவதையும் சகிக்க முடியாது. அந்த நிலையில்தான் நீயும் இருக்கிறாய். நான் சொல்வதைக் கீழ்ப்படிவுடன் கேட்பதாக என்முன் நடித்து விட்டு உனது தோழர்களோடு சேர்ந்து தீய செயல்களைத் தான் முன்பு போலச் செய்கிறாய். சொல்லும் செயலும் ஒன்றாக இருத்தல் வேண்டும். இரண்டும் இரண்டுபட்டால் இன்பமாக இருந்தாலும் கடைசியில் வேரும் துன்பத்தில் தான் முடிவடையும் என்பதை நீ உணரத் தவறி விட்டாய். நீ திருந்துவதானால் உனது பெற்றோரின் விருப்பத்தைப் பூர்த்திசெய். பெற்றோரை மதிப்பவன் தான் மற்றவர்களையும் மதிப்பான். பெற்றோரை மதியாதவன் மற்றவரை மதிப்பது போல நடிப்பான்” என்றார் சிறுத்தொண்டன்.

## 58. இளவரசரின் செயல்கள்

**பழமையை நோக்கி அளித்தல் கிழமையால்**
**கேளிர் உவப்பத் தழுவுதல் - கேளிராய்த்**
**துன்னிய சொல்லால் இனம் திரட்டல் இம்மூன்றும்**
**மன்னற்கு இளையான் தொழில்.**

நண்பர்களுக்கு வேண்டியவற்றை அளித்து அவர்களை மகிழ்வித்தல், உறவினர் மகிழும் படி அவர்களைச் சுற்றமாக்கிக்கொள்ளல், இனிமையாகப் பேசி நல்லினத்தைப் பெருக்கல் ஆகிய இம் மூன்று செயல்களும் இளவரசனின் செயல்களாகும்.

“நண்பர்களது பழைமையான உறவைப்பாராட்டி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் உறவினர்களோடு அன்பாகப் பழகல், இனிய வார்த்தைகளைக் கூறி நல்லவர்களின் நட்பைப் பெருக்குதல் என்பன இளவரசனின் செயல்கள் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். இப்பொழுது ஒவ்வொரு குடும்பத்தலைவனும் அக்குடும்பத்தின் அரசன் எனக் குறிப்பிடப்படுகிறான். அக்குடும்பத்தில் உள்ள ஆண்கள் இளவரசர்கள். இளைஞர்கள். எல்லோரும் இளவரசர்கள் என்ற நினைப்போடு வாழ வேண்டும் என்று நான் உனக்கு வகுப்பில் கூறியுள்ளேன். இதில் நீ எதைச் செய்தாய்? நண்பர்களுக்கு உதவுகிறாய் அதனால் அவர்களின் தீய செயல்களுக்கு ஊக்கமளிக்கிறாய். உறவினரை எதிரிகளாக நினைக்கிறாய். அதனால் நல்லவர்கள் உன்னை விட்டு விலகிச் செல்கின்றனர். இந்தப்போக்கை மாற்றுமாறு உனக்குப்பல முறை கூறியும் நீ கேட்கிறாய் இல்லை. அன்போடு பேசிப்பார், பண்போடு பழகிப்பார், நல்லவர்களுக்கு உதவி செய்துபார். சுற்றம் சேரும். நன்மைகள் குவியும். எல்லோரும் விரும்புவார்கள். அதனால் நீ நினைத்தவையாவும் நல்லபடி நடக்கும்” என்றார் சிறுத்தொண்டன்.

## 59. உள்ளவை போல் அழிபவை

**கிளைஞர்க்கு உதவாதான் செல்வமும் பைங்கூழ்**
**விளைவின்கண் போற்றான் உழவும் - இளையனாய்க்**
**கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்**
**உள்ளன போலக் கெடும்.**

உறவினர்க்கு உதவி செய்யாதவனுடைய செல்வமும், பசுமையான பயிர்கள் வீளைந்த வேளை காக்காத உழவனும், இளமையில் இருந்து கள்ளை விரும்பி உண்பவனின் குடும்பமும் ஆகிய இம் மூன்றும் நிலைத்தவை போலத் தோன்றி அழிபவையாகும்.

“நீ கண்டவர்கள் எல்லோருக்கும் உனது தந்தை பாடுபட்டுத் தேடிய செல்வத்தைக் கொடுத்து அழிக்கிறாய். உறவினர்களுக்கும் நல்லவர்களுக்கும் கொடுக்கும் செல்வம் தான் நிலைத்திருக்கும். உனது மாமனார் மிகவும் வறியவர். அவர் விதைப்பதற்காக உன்னிடம் பொருள் கேட்டும் நீ கொடுக்கவில்லை. தீயவர்களுக்குக் கொடுக்கிறாய். உனது பணத்தில் குடித்த ஒருவன் நேற்றுப் பாடசாலைக்குச் சென்று அதிபருடன் பிரச்சினைப்பட்டுள்ளான். பாடசாலைச் சமூகம் அவனைக் குற்றஞ் சொல்லவில்லை. உன்னைத்தான் சொன்னது. உனது கமத்தில் நெல் விளைந்துள்ளது. அதை உரிய நேரத்தில் அறுவடை செய்ய உன்னால் முடியவில்லை. பெற்றோரின் முதுமைக்காலத்தில் பிள்ளைகள் உதவவேண்டும். அதற்காகத் தான் பெற்றோர் பிள்ளைகளைப் பெற்று அன்புடன் வளர்க்கிறார்கள். அத்துடன் இளமையில் கள்ளைக்குடிப்பவன் காலப்போக்கில் கள்ளுக்கடிமையாகி விடுவான். கள்ளைக்குடிப்பது பெரும் இன்பத்தைப் போலத் தோன்றும் துன்பம்….. இவற்றையெல்லாம் உணராத உன்னுடன் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. ஒருவன் அறியாமல் பாவம் செய்யலாம். அறிந்தறிந்து செய்தால் அவனை விலக்கி வைத்தல் வேண்டும்” என்றார் சிறுத்தொண்டன்.

## 60. துன்பப் பிறப்புக்கள்.

**பேஎய்ப் பிறப்பிற் பெரும்பசியும் பாஅய்**
**விலங்கின் பிறப்பின் வெருவும் - புலம்தெரியா**
**மக்கள் பிறப்பின் நிரப்பிடும்பை இம்மூன்றும்**

**துக்கப் பிறப்பாய் விடும்.**

பேயைப்போல பெரும் பசியும், பாயும் விலங்குகளின் கொடுமையால் மிருகங்கள் அடையும் அச்சமும், அறிவானவற்றை உணராத உயிர்களின் துன்பமும் ஆகிய இம்மூன்று பிறப்புக்களுக்குள்த் துன்பப் பிறப்புக்களாகும்.

இதுவரை கோபத்துடன் கூறிய சிறுத்தொண்டன் அவனைத் திருத்த வேண்டும் என்ற நோக்கில் அன்பாகச் சொன்னார், ‘‘மகனே, உனது தீய நண்பர்கள் பேயைப் போலப் பெரும்பசி கொண்டவர்கள். அவர்களின் பசியைத் தீர்க்க முடியாது. பாயும் மிருகங்களான சிங்கத்திற்கும் புலிக்கும் ஏனைய மிருகங்கள் பயப்படும். அவற்றைக் கண்டுவிட்டால் தமது உயிர்போய்விடும் என்று அஞ்சும். அதுபோலத் தான் நீயும் இருக்கிறாய். அவர்கள் கொடிய விலங்குகள். எப்போதும் தீமைகளையே செய்வார்கள். அத்துடன் அவர்களும் நீயும் இளமையிலேயே குடிக்கிறீர்கள். இவையெல்லாம் இன்பம் தந்து அழிக்கும் நஞ்சுகள். அதனால் உனது குடிக்குரிய பண்புகளைப் பேணிப்பாதுகாத்து வாழ். இல்லாவிட்டால் குடியோடு சேர்ந்த உனது வாழ்வும் அழிந்துவிடும். பேயின் பசியைத்தீர்க்க முடியாது. அதுபோலத் தீயவர்களின் மனத்தையும் திருப்திப்படுத்த முடியாது. அதனால் அவர்களின் நட்பை விடு. உனது தந்தையோடு சேர்ந்து தொழிலை நல்லபடி செய். இவ்வாறு செய்தாயானால் உனது அலைபாயும் மனம் ஒருநிலைப்படும். அதன்பின் நல்ல சிந்தனைகள் மனதில் உருவாகும்’’ என்றார் சிறுத்தொண்டன்.

## 61. அமைச்சரின் துணிவுகள்

**ஐயறிவும் தம்மை அடைய ஒழுகுதல்**
**எய்வது எய்தாமை முற்காத்தல் - வைகலும்**
**மாறேற்கும் மன்னர் நிலை அறிதல் இம்மூவர்**
**சீரேற்ற பேரமைச்சர் கோள்.**

ஐம்புலன்களை அடக்கி வாழ்தலும், அரசனுக்கு ஏற்படவிருக்கும் நன்மைதீமைகளை முன்பே அறிந்து அதற்கான நடவடிக்கை எடுத்தலும், பகைவரது செயற்பாடுகளை ஒற்றர் மூலம் அறிந்து செயற்படுதல் ஆகிய இம் மூன்று செயல்களும் சிறப்புடைய அமைச்சனின் செயல்களாகும்.

சோதிலிங்கமும் சிறுத்தொண்டனும் கதைத்துக் கொண்டிருக்கும் போது நாவலன் அங்கு வந்து சிறுத்தொண்டனை வணங்கினான். ‘‘ஐயா, இந்த ஊருக்கு எல்லாம் நீங்கள் தான். ஐம்புலன்களையும் அடக்கிவாழும் நீங்கள், எமக்கேற்படும் நன்மை தீமைகளை முன்பே அறிந்து அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கை களை எடுத்து எல்லோரையும் நல்வழிப்படுத்துவீர்கள். எமது நடவடிக்கைகளையெல்லாம் ஒற்றர் போல அறிந்து தீமை வராது காப்பீர்கள். அத்தகைய உங்களைக் குருவாகப் பெற்ற நான் பெரும் பாக்கியசாலி. எனது மனம் முழுமைமயான துறவை நாடுகிறது. அதனால் ஆசிரியப் பணியைத் துறக்க விரும்புகிறேன்.. அதைப் பற்றி அறியவே வந்தேன்’’ என்றான்.

‘‘மகனே, மயில்போன்ற சாயலை உடைய மங்கையுடன் இணைந்து வாழும் சிறப்பு ஒருவனுக்கு இல்லறத்தில் ஏற்படும். இல்லறத்தின் பயனாகப் பொன்னுலகான சுவர்க்கத்தை அடையலாம். இவ்வுலகில் சிறந்தது இல்லறம் தான். காம இன்பத்தைதத் துய்ப்பவரான கணவனும் மனைவியும் முத்தியுலகம் சென்றடைவர் என்று அறநூல்களும் சான்றோர்களும் கூறியுள்ளனர். ஆகையால் இல்லறத்திலிருந்து முத்தியடையவே நான் விரும்பினேன். இல்வாழ்வானின் வாழ்க்கை முறைகளால் தான் ஏழைகளும் துறவிகளும் சிறப்பாக வாழ்கின்றனர். அதற்காக உன்னைத் திருமணம் செய்யும்படி நான் கூறவில்லை. ஆசிரியப் பணி புனிதமானது. கற்கவேண்டிய நூல்கள் அனைத்தையும் திரிபுறக் கற்ற நீ அதை நன்

மாணக்கர்களுக்குப் புகட்டுவது தவம் செய்வதை விடப் பயனுள்ளது . மேலானது. இன்று நல்லாசிரியர்கள் இல்லை என்று சொல்லுமளவிற்குக் காலம் வழிசெய்துள்ளது. அந்த வகையில் நல்லாசிரியரான நீ எதற்காகப் பதவியைத் துறத்தல் வேண்டும். மன அடக்கம் தான் தவம். மன அடக்கமுள்ளவனின் புலன்கள் வழி தவறாது. பிறகேன் பதவியைத் துறக்க விரும்புகிறாய்?'' என்று கேட்டார் சிறுத்தொண்டன்.

## 62. மக்களை இழப்பவர்

**நன்றிப் பயன்தூக்கா நாணலியும் சான்றோர்முன்**
**மன்றில் கொடும்பா டுரைப்பானும் - நன்றின்றி**
**வைத்த அடைக்கலங் கொள்வானும் இம்மூவர்**
**எச்சம் இழந்துவாழ் வார்.**

பயன்கருதாது செய்த உதவியின் தன்மையை உணராதவனும், சான்றோர் முன் பொய் உரைப்பவனும், அடைக்கலமாகக் கொடுத்த பொருளைக் கவர்ந்தனும் ஆகிய இம் மூவரும் தம்மக்களை இழந்து வருந்துபவர் போலாவார்.

''மகனே, தான் கற்றவற்றில் நல்லவறை மக்களுக்கு எடுத்துக் கூறாதவன் கற்ற கல்வியால் எந்தப் பயனையும் அடையமாட்டான். கல்வி என்பது தேங்கி நிற்கும் குட்டையல்ல. அது பாய்ந்து செல்லும் அருவி.. மக்கள் கங்கையில் வரும் கழிவுகளை அகற்றி நல்ல நீரைப் பெறுவது போலக் கற்றவன் கற்றவற்றுள் நல்லவற்றை மாணவர்களுக்கு உபதேசித்தல் வேண்டும். பயன்கருதாது ஒருவர் செய்த உதவிகளை உணராதவனும், சான்றோர்முன் பேசத்தகாதவற்றைப் பேசுபவனும், ஆசிரியர்கள் பிறருக்குப் பயன் படும்படி செயலாற்ற வேண்டும் என்று ஒப்படைத்த பொன்போன்ற மொழிகளை பிறருக்குச் சொல்லாது தான் மட்டும் ரசித்து அனுபவிப்பவனும் தமது பிள்ளைகளை இழந்து வருந்துபவர்கள்

போலாவார். அதைத்தான் தீயவர்கள் செய்கிறார்கள். அதை நீயும் செய்யப்போகிறாயா? கற்றவை பயன் தராவிட்டால் கற்றதாலும், கற்பித்ததாலும் பிரயோசனமில்லை. மாணவர்களுக்குக் கொடுப்பாய் என்ற நோக்கத்தில் தான் என்னிடமிருந்த பொக்கி‘ங்களை உன்னிடம் தந்தேன். அதைக்கவர நீ நினைக்கிறாய் என்றே நான் கருதுகிறேன்’’ என்றார் சிறுத்தொண்டன். அதைக்கேட்ட நாவலன் திகைத்துப்போனான்.

## 63. நன்மையைத் தராதவை

**நோவஞ்சா தாரொடு நட்பும் விருந்தஞ்சும்**
**ஈர்வளையை யில்லத் திருத்தலும் - சீர்பயவாத்**
**தன்மையிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்**
**நன்மை பயத்தல் இல.**

தீயவற்றைச் செய்வதற்கு அஞ்சாதவர்களின் நட்பும், விருந்தினருக்கு உணவு கொடுக்க அஞ்சும் மனைவியின் உறவும், நல்ல சுற்றத்தினர் இல்லாத இடத்தில் குடியிருத்தலும் என்ற இம் மூன்றும் நன்மை தருவன அல்ல.

‘‘ஐயா, தீயவர்களுடன் நட்புக் கொள்ளக்கூடாது, விருந்தினர்களுக்கு உணவு கொடுக்காத மனைவியோடு உறவு வைக்கக் கூடாது. தீயவர்களின் அருகே குடியிருக்கக் கூடாது, என்று சொல்வீர்கள்.. அதன்படியே வாழ்ந்தும் வருகிறீர்கள்... நீங்கள் கற்பித்த படி வாழ்ந்து வருகிறேன். அதனால் நீங்கள் கூறியபடி நான் ஆசிரியர் பதவியைத் துறக்கவில்லை. ஆசிரியராக இருந்து அர்பணிப்புடன் செயலாற்றுவேன்’’ என்றான் நாவலன்.

சிறுத்தொண்டன் சோதிலிங்கத்தைப் பார்த்துச் சொன்னார், சோதி, உன்னை எனக்குப் பிடிக்கவில்லை. நீ தீயவற்றைத் திரும்ப திரும்பச் சொன்னாலும் அதை மறந்து விருப்புடன் செய்கிறாய்....

எனது மனைவீ விருந்தினர் எவருக்காவது உணவளிக்காது இருந்ததில்லை. அப்படி இருந்திருந்தால் அவளது உறவைத் துறந்திருப்பேன். நல்ல சுற்றத்தவர் இல்லாத இடத்தில் குடியிருக்கக் கூடாது. அத்துடன் தீயவர்களை நல்லவர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று உறவாடுவதும் கூடாது. மீறி உறவாடினால் பெரும் தீமைகள் வந்து சேரும் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அதனால் இனிமேல் நீ என்னைச் சந்திப்பதானால் மடத்தில் வந்து சந்தி. வீட்டுக்கு வராதே'' என்றார் சிறுத்தொண்டன்.

## 64. கற்புடைய பெண்ணின் கடமைகள்

**நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்**
**இல்புறஞ் செய்தலின் ஈன்ற தாய் - தொல்குடியின்**
**மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம் மூன்றும்**
**கற்புடையாள் பூண்ட கடன்.**

நல்ல விருந்தினரை உபசரிப்பதால் கணவனுக்குச் சிறந்த நட்பினன் ஆகவும், நாள் தோறும் இல்லறப் பணிகளைச் சிறந்த முறையில் செய்வதால் பெற்ற தாயாகவும், பெருமை மிகுந்த நன்மக்களைக் குலம் தழைக்கப் பெற்றுக் கொடுப்பதால் நல்ல மனைவியாகவும் விளங்குபவள் இல்லத்தரசி. இம் மூன்று கடமைகளையும் செய்பவளே கற்புக்கரசியாவாள்.

‘‘நாவலா, இல்லறம் தான் நல்லறம். இல்வாழ்வான் பிதிர்களில் இருந்து உயிர்வாழும் அத்தனை உயிரகளுக்கும் உதவி செய்தல் வேண்டும். அந்த உதவிகளைச் செய்வதற்கு உறு துணையாக இருப்பவள் மனைவி. மனைவி என்பவள் தருணத்திற்கேற்ப அவ்வடிவெடுத்து உதவும் ஆற்றல் உள்ளவள். அந்த ஆற்றல்களை இறைவன் அவளிடம் கொடுத்துள்ளான். இதில் முக்கியமானது தாய்மை. அன்பு, புரிந்து கொள்ளும் தன்மை, குலத்தைப் பெருக்கல்

என்பன அவற்றுள்ச்சில. நீ தவத்தை இல்லறத்திலிருந்து மேற்கொண்டால் நல்ல மனைவியைப் பெறுவாய், நல்ல புத்திரர்களைப் பெறுவாய், எல்லோருக்கும் உதவுவாய். திருமணம் செய்து கொண்டு இல்லறவாழ்வு வாழ்வதென்பது கசப்பு மருந்தினை உண்ணாதவனுக்கு அதைச் சர்க்கரையில் வைத்துக்கொடுப்பது போன்றது. காமம் என்பது இன்பக்கடலாகும். காதலர் இருவர் கருத்தொருமித்துக் கூடிய இன்பமானது இன்பக்கடலில் வீசுகின்ற சுவையாகும். அந்த இன்பத்திலிருந்து உண்டாகும் அன்பே முத்தாகும்.'' என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அதனால் நல்லதொரு குலமகளைத் திருமணம் செய்து வாழ்வதைப்பற்றிச் சிந்தித்துப் பார்'' என்றார் சிறுத்தொண்டன்.

## 65. மிக்க வருத்தம் தருவன

**அச்சம் அலைகடலின் தோன்றலும் ஆர்வுற்ற**
**விட்டகல கில்லாத வேட்கையும் - கட்டிய**
**மெய்ந்நிலை காணா வெகுளியும் இம்மூன்றும்**
**தம்நெய்யில் தாம் பொரியு மாறு.**

கடலின் அலைகளைப் போல ஓயாது மனதில் தோன்றும் அச்சமும், உண்ட சுவையை விட்டுவிடமுடியாத அவாவும், அறிவுடையவர்களால் இயற்றப்பட்ட செய்யுள்களை விளங்கிக்கொள்ளாமையால் உண்டாகும் கோபமும் ஆகிய இம் மூன்றும் ஆடு முதலியவற்றை ஆட்டிமே பிறந்த நெய்யிலே பொரிப்பது போல எவரிடம் தோன்றியவையோ அவரையே வேகச் செய்யும் தன்மை உடையவை ஆகும்.

``என்னை வற்புறுத்தாதீர்கள். நான் ஆசிரியர்த் தொழிலைக் கைவிடவில்லை.. ஆனால் திருமணத்தைப்பற்றிச் சிந்திக்கக் கூட முடியவில்லை'' என்றான் நாவலன்.

“ஒவ்வொரு விடயத்திலும் உண்டாகும் முடிவுகள் தான் மனிதர்களை செயற்படுத்துகின்றன. உனக்குத் திருமணம் என்றால் அச்சமாக உள்ளது. அந்த அச்சம் கடல் அலைகளைப்போல மனதில் ஆர்ப்பரிக்கிறது. அதுபோலச் சோதிலிங்கத்திற்குச் செய்த தீய செயல்களால் வந்த இன்பம் அவாவாக மாறியுள்ளது. ஒழுங்காகக் கற்காதவனுக்கு அறிவுடையவர்கள் பாடிய செய்யுள்களின் பொருள் விளங்காமையால் அவனுக்குக் கோபம் உண்டாகிறது. ஆட்டை வெட்டி உண்பவன் அதன் கொழுப்பை உருக்கி வரும் நெய்யிலே கறிசமைப்பான். அதுபோல எதை எதை நினைத்து அச்சப் படுகிறீர்களோ அது அவர்களைத் துன்பப்படுத்தும் அதை அதை விட்டால் தான் துன்பம் குறையும். நாவலர் நீ நான் சொன்னதைப் பற்றி எண்ணி மனதைக் குழப்பாதே. சோதிலிங்கம், நீ நான் சொன்னதைப்பற்றி எண்ணிப் பார்த்து மனத்துன்பத்தை நீக்கு. ஒருவனது மனதில் உண்டாகும் எண்ணங்கள் தான் அவனைத் துன்பப்படுத்துவதும், இன்பப்படுத்துவதும்” என்றார் சிறுத்தொண்டன்.

## 66. சிறப்பில்லாதவை

**கொழுநனை இல்லாள் கறையும் வழிநிற்கும்**
**சிற்றாளில் லாதான்கைம் மோதிரமும் - பற்றிய**
**கோல்கோடி வாழும் அரசனும் இம் மூன்றும்**
**சால்போடு பட்டது இல.**

கணவன் இல்லாத பெண்ணின் பூப்பும், தனக்கு ஏவல் செய்யச் சிற்றாள் இல்லாதவனின் கை விரலில் உள்ள மோதிரமும், ஆட்சியில் நீதிதவறும் அரசனும் என்னும் இம் மூன்றும் நிறைவான சிறப்பைத் தருவன அல்ல.

வீட்டில் சமையல் வேலை செய்யும் மைதிலி மூன்று நாட்களாக வேலைக்கு வராமல் விட்டு விட்டு அன்று வந்திருந்தாள். குளித்து நெற்றியில் நீறணிந்து, குங்குமத் திலக மிட்டு வந்த அவளின்

முகத்தில் துயரம் படிந்திருப்பதைச் சிறுத்தொண்டன் அவர் உணர்ந்து கொண்டார். அவளது கணவன் வேல்மாறனை அவர் நூறுமைல்களுக்கு அப்பாலும் தனது களஞ்சியத்தில் வேலை செய்யுமாறு அமர்த்தியிருந்தார். அவன் வீட்டுக்கு வருவது குறைவு. ஆறுமாதங்களுக்கொரு முறை தான் வருவான். வந்தாலும் இரண்டொரு நாள்த்தான் வீட்டில் தங்குவான்.பெற்றோரும் பிள்ளைகளும் கூட இருப்பதால் அவர்களை மைதிலி தான் கவனிக்க வேண்டும். கணவனில்லாத பூப்படைந்த பெண்களின் பூப்பு நிறைவானதல்ல. ஏக்கமும் அவலமும் உடையது என்று அவர் சமீபத்தில் கற்றநூலில் ஒன்று கூறியது அன்றிலிருந்து மைதிலியை நினைக்க அவருக்கு வேதனையாக இருந்தது. அதனால் மைதிலியை அழைத்துச் சொன்னார், ‘‘மகளே, அடுத்த மாதம் முதல் உனது கணவனுக்கு ஊரிலேயே வேலை கொடுக்கிறேன்’’ என்று கூறிவிட்டு அவளின் முகத்தைப் பார்த்தார். அது பிரகாசமாக இருந்தது. அதை நினைக்க அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. கணவன் இல்லாத மனைவியின் பூப்பைப் போன்றது தான் சிற்றாள் இல்லாதவனின் கையிலிருக்கும் மோதிரமும் . இரண்டும் பெருமையைப் பெறாது. அது போலக் கொடுங்கோல் மன்னனும் சிறப்புப் பெறமாட்டான்’’ என்று நினைத்துச் சிரித்தார் சிறுத்தொண்டன். அப்போது அங்கு வந்த காமாட்சி கணவனின் சிரிப்பின் அர்த்தம் புரியாது குழம்பினாள்.

## 67. பரிகாரம் இல்லாதவை

**எதிர்நிற்கும் பெண்ணும் இயல்பில் தொழும்பும்**
**செயிர் நிற்கும் சுற்றமும் ஆகி – மயிர்நரைப்ப**
**முந்தைப் பழவினையாய்த் தின்னும் இவைமூன்றும்**
**நொந்தார் செயக்கிடந்தது இல்.**

கணவனின் பேச்சுக்கு எதிர்ப்பேச்சுப் பேசும் மனைவியும், நல்லொழுக்கம் இல்லாத வேலையாளும், உள்ளத்தில் பகை உணர்வை வைத்துக் கொண்டு உறவாடும் உறவினரும் முன்வினைப் பயனால் வந்தமைந்தால் அவனை முதுமைக்குரியவனாக்கும். இம் மூன்றும் நீங்கப் பரிகாரம் எதுவும் இல்லை.

முதுமையடைந்தாலும் இளமைகுறையாதிருந்தாள் காமாட்சி. ‘‘மனம், எவ்வேளையிலும் மகிழ்ச்சியாக இருந்தால் உடலும் மனமும் என்றும் இளமையாக இருக்கும். ‘‘பதினெட்டு வயதுப் பெண்ணைப் போல இருக்கிறாய்’’ என்ற சிறுத்தொண்டன் அவளது கன்னத்தில் செல்லமாகத் தடடினார்.

வெட்கத்துடன் சிரித்த காமாட்சி அவரை பார்த்துச் சொன்னாள், ‘‘காலையில் உங்களது சகோதரனின் மனைவி வந்து தனது கணவனைப்பற்றிக் குறைகூறிவிட்டுச் சென்றாள். பணம் கொடுத்துக் கொடுத்து நீங்கள் தானாம் அவரைக் கெடுக்கிறீர்கள். இனிமேல் கொடுக்க வேண்டாம் என்று கூறிவிட்டுச் சென்றாள். அதன்பின் உங்கள் சகோதரன் நடனபாதம் வந்து தனக்கு விதைப்புக்கு ஐம்பதினாயிரம் ரூபா தேவையென்று சொல்லிவிட்டுச் சென்றார். அதன்பின் அவரது வேலையாளான முருகன் வந்து நடனபாதத்தின் போக்குச் சரியில்லை என்று கூறிவிட்டுச் சென்றான்’’

‘‘அவளால் எனக்கு மானக்கேடு. அவள் எமது தூரத்து உறவினரின் மகள். பெற்றோர் வசதியில்லாததால் எமது வீட்டில் இருந்து வளர்ந்தாள். பின்பு அப்பா திருமணம் செய்து வைத்தார். அவள் வாய்க்காரி. கணவனோடு மட்டுமன்றி ஊரவர்களுடனும் முரண்படுபவள். அவளின் பக்கம் தான் வேலைக்காரர்களும் கதைப்பார்கள். இது நடனபாதத்திற்குத் தீராத நோய். அவன் நல்லவன் ஒழுக்கமானவன். அவன் எதைச் சொன்னாலும் அவள்

எதிர்ப்பேச்சுப் பேசுவாள். அத்துடன் வேலையாட்களும் அவனை மதிப்பதில்லை. உறவினர்களும் அவளின் போக்கால் நடனத்தை மதிப்பதில்லை.. பாவம் அவன் உடல் மெலிந்து மனக் குழப்பத்துடன் காணப்படுகிறான். இப்போ மடத்துக்கு வந்து யாவற்றையும் சொன்னவன். மனைவியும், வேலையாட்களும், உறவினர்களும் மதிக்காவிட்டால் அவனால் எதுவும் செய்யமுடியாது. அதுமுன் வினைப்பயன் என்று தான் கருதவேண்டும் இந் நிலையில் நாமும் வெறுத்தால் அவனுக்கு வாழ்க்கையே வெறுத்து விடும். அதனால் அவனைத்தேற்றி விட்டு வருகிறேன்'' என்றவாறு முகம் கை கால்களைச் கழுவச் சென்றார் சிறுத்தொண்டன். காமாட்சி துவாயை எடுத்துக் கொண்டு அவரின் பின்னால் சென்றாள்.

## 68. அறவுணர்வு உடையவரிடம் இருப்பவை

**இல்லார்க்கொன் றீயும் உடைமையும் இவ்வுலகில்**
**நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும்**
**துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்**
**நன்றறியும் மாந்தர்க்கு உள.**

வறியவர்களுக்கு உதவக் கூடிய செல்வமும், இவ் உலகில் எதுவும் நிலைத்திருப்பதில்லை என்ற எண்ணமும், எவ்வுயிரையும் துன்புறுத்தாத தன்மையும், என்னும் இம் மூன்றும் அறத்தை உணர்ந்தவர்களிடம் உண்டு.

''நாக நாதனின் மகன் வந்தான். அவன் கற்பதற்கான உதவு தொகையைக் கொடுத்தேன். கோயிற் குருக்களின் பேரனுக்கும் கல்விக்கு உதவும் தொகையைக் கொடுத்தேன். மைதிலியின் கணவனை இடமாற்றம் செய்யுங்கள். மடத்தில் சமையல் வேலை செய்யும் சிவலிங்கத்தின் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்துள்ளானாம்.. உங்களின் விருப்பத்தைக் கேட்டான்''. என்று காமாட்சி

சிறுத்தொண்டன் வீட்டில் இல்லாத போது வந்தவர்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“இந்தச் செல்வத்தைக் கடவுள் தந்தது வறியவர்களுக்குக் கொடுத்துதவி செய்யவே. எனது நண்பனான பற்குணத்தின் மூன்று கப்பல்களைக் கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்று விட்டனர். அதனால் மனமுடைந்த அவன் தற்கொலை செய்து கொண்டான். யாருக்கும் ஈயாமல் பொருளைப் பாதுகாத்த சிவசுப்பிரமணியத்தின் களஞ்சிய சாலை மின் ஒழுக்கால் எரித்து சாம்பலாகி விட்டது. எப்பொருளும் நிரந்தரமானதல்ல. அறம் தான் நிலையானது. சிவ சுப்பிரமணியம் வேலையாட்களுக்குக் கூடச் சரியாகச் சம்பளம் கொடுப்பதில்லை. இப்போ எல்லாவற்றையும் இழந்த பின்பு தான் ஞானம் வந்திருக்கிறது. நான் சொன்னால் என்னைக் கேலி செய்யதவன் இன்று அறம் தான் மனிதனை வழிநடத்த வேண்டும் என்கிறான்” என்றார் சிவத் தொண்டன்.

## 69. கிடைத்தற்கு அரியவை

**அருந்தொழில் ஆற்றும் பகடும் திருந்திய**
**மெய்ந்நிறைந்து நீடிருந்த கன்னியும் - நொந்து**
**நெறிமாறி வந்த விருந்தும் இம்மூன்றும்**
**பெறுமா றரிய பொருள்.**

கடினமான நிலத்தையும் சலியாது உழும் எருதும் இளமையும் அழகும் நிறைந்திருந்தும் நீண்டகாலமாகத்திருமணமாகாதிருக்கும் கன்னியும் வழிதவறிப் பசித்து வந்த விருந்தினரும் என்றும் இம் மூன்றும் பெறுதற்கரிய பொருட்களாகும்.

“தனது தேக வலியைப் பாராது உழைப்பவன் நடனபாதம். அவனது மனைவியின் தங்கை இளமையும் அழகும் நிறைந்தவள்.

அவளுக்கு நெடு நாட்களாகத் திருமணம் நடைபெறவில்லை. அதற்குக் காரணம் கிரகதோசம். அதனால் அவளை மடத்திற்கு வரும் வழிப்போக்கர்களுக்கு உணவு கொடுப்பதற்காக நியமித்தேன். முப்பத்தைந்து வயதில் வழிப்போக்கனாக வந்த வியாபாரி ஒருவன் அவளை விரும்பி மணந்தான். இப்போ அவள் நன்றாக வாழ்கிறாள். கடினமாக உழைக்கும் நடன பாதமும், அவளது தங்கையும், களைத்து வரும் வழிப்போக்கர்களும் பெறுமதியானவர்கள். அதனால் தான் அவர்களுக்கு நான் உதவி வருகிறேன். அதை நடனபாதம் உணர்கிறான். அதனால் தான் அவர்களுக்கு நான் உதவி வருகிறேன். அதை நடனபாதம் உண்கிறான். ஆனால் அவனின் மனைவி உணர்வதில்லை. சிவசுப்பிரமணியத்தைப் போலப் பெருந்துன்பம் வந்தால் தான் அவள் உணர்வாள். அதுவரை பொறுத்திருக்கும்படி நடன பாதத்திற்குக் கூறினேன். அந்த வாழ்க்கை அவனுக்குப் பழக்கப்பட்டு விட்டது. அதனால் அவன் எதுவும் சொல்லவில்லை'' என்றார் சிறுத்தொண்டன்.

## 70. செல்வம் உடையவர் எனப்படுவர்

**காவோ டறக்குளம் தொட்டானும் நாவினால்**
**வேதம் கரைகண்ட பார்ப்பானும் - தீதிகந்**
**தொல்வதுபாத் துண்ணும் ஒருவனும் இம்மூவர்**
**செல்வர் எனப்படு வார்.**

குளத்தை வெட்டிச்சோலைகளை உருவாக்கியவனும், வேதம் ஓதிச் சிறப்புப் பெற்ற அந்தணனும், ஒழுக்கமாக வாழ்ந்து கிடைத்தைப் பகிர்ந்துண்ணும் இல் வாழ்வானும் ஆகிய இம் மூவரும் செல்வர்களாவர்.

வயற்கரைச் சிவன் கோவிற் குருக்கள் சிறுத்தொண்டனின் வீட்டுக்கு வந்தார். அவருடன் அவரது உதவியாளன் பழனி வேலுவும்

வந்தனர். சிவன் கோவிற் குருக்கள் வேதமோதுவதில் வல்லவர். கோவிலில் வேதமோதினால் சிவனும் உமாதேவியாரும் வந்திருந்து கேட்டுக் கொண்டிருப்பர் என்று ஊரவர்கள் பேசிக் கொள்வார்கள். பழனி வேலு தொண்டாகவே சிவன் கோவிலில் வேலை செய்து வந்தான். அவன் ஒரு விவசாயி. பெரு நிலப்பரப்பு அவனிடம் இல்லை. சிறுத் தொண்டனிடம் நிலம் பெற்று விவசாயம் செய்து வந்தான். அதில் இருந்து வரும் வருமானத்தில் ஏழை எளியவர்களுக்கு உணவளிப்பான்.

அவர்கள் இருவரையும் சிறு தொண்டன் வரவேற்று ஆசனத்தில் இருத்தினார். “ சிறு தொண்டரே, சிவன் கோவிற் குளம் வந்துவிட்டது. சென்ற வருடம் மழைவீழ்ச்சி குறைந்ததால் விவசாயிகளும், கால்நடைகளும் பெரும்க‘டப்பட்டன. அதனால் அதை விஸ்தரித்து ஆழமாக்க வேண்டும். குளம் உங்களது நிலத்தில் உள்ளது. குளத்தை சுற்றியுள்ள நிலமும் உங்களுடையது, என்றார் குருக்கள்.

“அதைச்செய்ய எண்ணியிருந்தேன். ஞாபகப்படுத்தி விட்டீர்கள்,” என்றார் சிறுதொண்டன்.

“குளத்தை வெட்டிச் சோலையை உருவாக்குவதும் சிறப்புடன் வேதமோதும் அந்தணரும் தனக்கக்கிடைத்த உணவை பகிர்ந்துன்றும் இல்வாழ்வாலும் தான் பெரும்தனவந்தர்கள் என்று சான்றோர் கூறியிரக்கின்றனர்”, என்றார் பழனிவேலு.

## 71. அஞ்சுபவை

**நின்றநெஞ் சுடையானை நல்குரவஞ்சும்**
**அறனை நினைப்பானை அல்பொருள் அஞ்சும்**
**மறவனை எவ்வுயிரும் அஞ்சும் இம்மூன்றும்**
**திறவதில் தீர்ந்த பொருள்.**

திருப்தியான மனம் கொண்டவனை நெருங்க வறுமை அஞ்சும். அறவோனை நெருங்க பாவம் அஞ்சும், கொலையாளியைக் காண எல்லா உயிர்களும் அஞ்சும். இம்மூன்றும் வேறுபாடுடையவையானாலும் தம்முள்ச் சிறந்தவையாகும்.

குளம் தோண்டும் வேலையை ஆரம்பித்து வைத்துவிட்டு மடத்திற்குச் குலத்தார் சிறுதொண்டன். அங்கு அவரின் வருகைக்காக முதியவர்கள் காத்திருந்தனர்.

“சிறிது தாமதமாகி வந்து விட்டேன். என்னை மன்னித்து கொள்வார்கள் என்று சிறுதொண்டன் சொன்னார். பொருட்களை ஈயாதவனிடம் என்றும் வறுமை நிலைத்திருக்கும். அவன் கோடிக்கணக்காக உழைத்தாலும் மனம்திருப்திப்படாது உழைத்துக் கொண்டே இருப்பான். திருப்திப்படுபவனிடத்தில் ஒருபோதும் வறுமை இருக்கமாட்டாது. அவனை நெருங்க வறுமை பயப்படும். தனக்குள்ள பொருள் போதும் என்று நினைப்பவன் உழைப்பதைத் தானம் செய்வான். அறவானை நெருங்கத் பாவம் அஞ்சும். அதுபோப் கொடிய கொலைகாரர்களை கண்டால் உலகத்தில் வாழும் உயிர்களெல்லாம் அஞ்சும். அதனால் மனிதர்கள் திருப்தி உள்ளவர்களாக வாழப்பழகுதல் வேண்டும். திருப்தி உள்ளவனிடத்தில் மனநிறைவு, மனமகிழ்ச்சி, உள்ளதை பகிர்ந்து உண்ணும் பண்பு, பேன்ற நல்ல பண்புகள் நிறைந்திருப்பதால் பாவமும், பழியும், பொறாமையும் அவனை நெருங்க அஞ்சும் அதனால் என்றும் திருப்தி உள்ளவர்களாக வாழுங்கள், என்றார் சிறுத்தொண்டன்.

ஆடை உடுத்தாமல் நீராடுதலும். பெண்கள் வழக்கு தொடுத்து அறங் கூறும் அவையில் சண்டை செய்தலும், பிறருக்கு கொடுத்து உதவும் ஆண்மையுள்ளோர் வறுமைப்படலும் ஆகிய மூன்றும் கண்களால் பார்க்கத் தகாதவையாகும்.

சோதிலிங்கமும் நண்பர்களும் வயல்வெளியில் இருந்த குளத்தில் ஆடைகள் இல்லாமல் நீச்சலாடிக கொண்டிருந்ததை நல்லை நாதன் கண்டுவிட்டு வந்து சிறுத்தொண்டனுக்கு கூறிவிட்டான். அதனால் சிறுத்தொண்டன் மிகுந்த கோபத்துடன் அவனை ஏசினார், உனக்கு புத்திமதி கூறிக்களைத்து விட்டேன். செய்யக் கூடாத குற்றங்களையெல்லாம் செய்துவருகின்றாய். ஆதவனின் மனைவி அறங்கூறும் சபையில் தனது கணவனின் கொடுமைகளை கூறி வழக்குத்தொடுத்தபோது நீ ஆதவனோடு சேர்ந்து சண்டைக்குச்சென்றுள்ளாய். அத்துடன் குடித்து விட்டு ஆடைகளைக குளக்கட்டில் வைத்துவிட்டு ஆடையின்றி நீராடியிருக்கின்றாய். இது இரண்டும் மகாபாவங்கள். இவற்றை எந்த ஒரு மனிதனும் தன் கண்களால் பார்க்கக்கூடாது. உன்னை எப்படித் திருத்துவது என்று புரியவில்லை. இளஞனே நீ உன் எதிர்காலத்தை மறந்து கொடுமைகளையும் பாவங்களையம் செய்கிறாய். ‘‘என் முன்னாலே நிற்காதே போ’’ என்ற கோபத்தடன் ஏசும் போது அருணாசலம் வந்தார். அவர் ஒரு விவசாயி. தற்போது முதுமை அடைந்திருந்தார். அந்த நிலமையிலும் விவசாயத்தின் மூலம் வரும் வருமானங்களை இரப்பவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தார். சமீப காலமாக அவர் வறுமைப்பட்டுக் கொண்டிருந்தார். ‘‘ஐயா இந்த தள்ளாத வயதில் ஏன் என்னைத்தேடி வந்தீர்கள்? சொல்லியிருந்தால் நான் வந்து சந்தித்திருப்பேன்.’’ என்றார் சிறத்தொண்டன்.

பழனிவேலின் மகளின் திருமணம் சீதனம் இன்மையால் குழம்பிக்கொண்டிருக்கின்றது. எனது விவசாய நிலத்தை விற்றுத் தா. அதைக்கொடுத்து அவளக்கு திருமணம் செய்து வைக்கப் போகிறேன. என்றார் அருணாசலம்.

பிறருக்கு கொடுத்து ஆதரிக்கும் ஆண்மை உள்ளவர்களின் வறுமையை கண்கொண்டு பார்க்க முடியாது. என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதை நினைக்க சிறுத்தொண்டனின் மனம் குழம்பியது.

## 72. காணக் கூடாதவை

**உடுத்தாடை இல்லாதார் நீராட்டும் பெண்டிர்**
**தொடுத்தாண் டவைப்போர் புகலும் - கொடுத்தளிக்கும்**
**ஆண்மை யுடையவர் நல்குரவும் இம் மூன்றும்**
**காண அரியவென் கண்.**

ஆடை உடுத்தாமல் நீராடுதலும், பெண்கள் வழக்குத் தொடுத்து அறங்கூறும் அவையில் சண்டை செய்தலும், பிறருக்குக் கொடுத்துதவும் ஆண்மையுள்ளோர் வறுமைப்படலும் ஆகிய மூன்றும் கண்களால் பார்க்கத் தகாதவையாகும்.

சோதிலிங்கமும் நண்பர்களும் வயல் வெளியில் இருந்த குளத்தில் ஆடைகள் இல்லாமல் நீராடிக் கொண்டிருந்ததை நல்லைநாதன் கண்டு விட்டு வந்து சிறுத்தொண்டனுக்குக் கூறிவிட்டான். அதனால் சிறுத்தொண்டன் மிகுந்த கோபத்துடன் அவனை ஏசினார், ‘‘உனக்கு புத்திமதிகள் கூறிக் களைத்து விட்டேன். செய்யக்கூடாத குற்றங்களையெல்லாம் செய்து வருகிறாய். ஆதவனின் மனைவி அறங் கூறும் சபையில் தனது கணவனின் கொடுமைகளைக் கூறி வழக்குத் தொடுத்த போது நீ ஆதவனோடு சேர்ந்து சண்டைக்குச் சென்றுள்ளாய். அத்துடன் குடித்து விட்டு ஆடைகளைக் குளக்கட்டில் வைத்து விட்டு ஆடையின்றி நீராடியிருக்கிறாய். இது இரண்டும் மகாபாவங்கள். இவற்றை எந்த ஒரு மனிதனும் தன் கண்களாற் பார்க்கக்கூடாது. உன்னை எப்படித் திருத்துவதென்று புரியவில்லை. இளைஞனான நீ உன் எதிர்காலத்தை மறந்து கொடுமைகளையும் பாவங்களையும் செய்கிறாய். என்முன்னாலே நிற்காதே போ’’ என்று கோபத்துடன்

ஏசும் போது அருணாசலம் வந்தார். அவர் ஒரு விவசாயி தற்போது முதுமை அடைந்திருந்தார், அந்த நிலையிலும் விவசாயத்தின் மூலம் வரும் வருமானங்களை இரப்பவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். சமீபகாலமாக அவர்பெரும் வறுமைப்பட்டிருந்தார். ‘‘ஐயா, இந்தத் தள்ளாத வயதில் ஏன் என்னனைத் தேடி வந்தீர்கள். சொல்லியனுப்பியிருந்தால் நான் வந்து சந்தித்திருப்பேன்’’ என்றார் சிறுத்தொண்டன்.

‘‘பழனிவேலின் மகளின் திருமணம் சீதனமின்மையால் குழம்பிக்கொண்டிருக்கிறது. எனது விவசாய நிலத்தை வித்துத்தா. அதைக்கொடுத்து அவளுக்கு திருமணம் செய்து வைக்கப்போகிறேன்’’ என்றார் அருணாசலம்.

பிறருக்குக் கொடுத்து ஆதரிக்கும் ஆண்மையுள்ளவர்களின் வறுமையைக் கண்கொண்டு பார்க்க முடியாது’’ என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதை நினைக்கச் சிறுத்தொண்டனின் மனம் குழம்பியது.

## 73. வாழ்பவர் போல் தாழ்பவர்

**இரந்து கொண் டொண்பொருள் செய்வலென் பானும்**
**பரந்தொழுகும் பெண்பாலைப் பாசமென்பானும்**
**விரிகட லூடுசெல் வானும் இம் மூவர்**
**அரிய துணிந்து வாழ் வார்.**

பிறரிடம் இரந்து தனவந்தனாவேன் என்று எண்ணுபவனும், பலரோடு கூடி மகிழும் பொதுமகள் தன்மீது அன்புள்ளம் கொண்டவள் என்று எண்ணுபவனும் பலரோடு கூடி மகிழும் பொதுமகள் தன் மீது அன்புள்ளம் கொண்டவர் என்று எண்ணும் காமுகனும்கடலில்

தக்ககருவியின்றி பொருள் தேடலாம் என்று சொல்பவனும் ஆகிய இம்மூவரும் உயர்வடைய மாட்டார்கள்.

சிவசுப்ரமணியம் சிவதொண்டனிடம் வந்து சொன்னார், ‘‘நான் மிகவும் வறுமைப்பட்டு விட்டேன். இப்பொழுது என்னிடம் பொருட்கள் எதுவும் இல்லை. நான் எனது நண்பனின் கப்பலில் சென்று பிற ஊர்களில் உள்ளவர்களிடம் கேட்டு பொருள்களை பெற்று பணக்காரனாகலாமென நினைக்கின்றேன்’’ என்றார்.

‘‘நண்பா, பொருட்களை இரந்து பெற்றுப் பணக்காரன் ஆகமுடியாது. அத்துடன் கப்பலில் வெறுங்கையுடன் பயணம் செய்யவும் முடியாது. அதனால் நான் உனக்குக் கடனாக பொருள்களைத் தருகிறேன் அதைக்கொண்டு முன்னேறு. கடலுக்கு அப்பால் உள்ள சேனை ஊரில் சித்திராங்கி என்ற பொது மகளின் வீட்டுக்குச்செல்லாதே. அவள் பொருள் கொடுக்கும் அனைவருக்கும் இன்பம் கொடுப்பவளே தவிர அன்புள்ளவள் அல்ல. அவள் அன்புள்ளவள் என்று நம்பிய அனைவரும் தாழ்ந்து போய் விட்டனர். இரந்து முன்னேறலாம் என்று நினைப்பதும் கடலில் வெறுங்கையுடன் சென்று பொருள் தேடலாம் என்று நினைப்பதும் பொதுமகளை உரிமையானவர் என்று நினைப்பதும் கீழ் மக்களது உயர்வான எண்ணங்கள். அவை நடைமுறைக்கு சாத்தியமாகாதவை.எனவே அவதானமாக இரு’’ என்றார் சிறுதொண்டன்.

## 74. அறத்தைக் கடைப்பிடிக்காதார் இயல்புகள்

**கொலைநின்று தின்றொழுகு வானும் பெரியவர்**
**புல்லுங்கால் தான்புல்லும் பேதையும் - இல்லெனக்கு ஒன்று**

**ஈகென் பவனை நகுவானும் இம்மூவர்**
**யாதும் கடைப்பிடியாதார்.**

ஓர் உயிரைக்கொன்று அதன் இறைச்சியை உண்பவனும், பெரியவர் ஒருவர் தன்னைத் தழுவும் போது தனது தகுதியை மறந்து அவரை தழுபுபவனும், பொருள் இல்லாதவனைப் பார்த்து இகழ்ந்து சிரிப்பவனும் என்றும் மூவரும் எந்த அறத்தையும் பின்பற்றாதவர்களாவர்.

‘‘சிவசுப்பிரமணியன் எந்தப்பெரிய தனவந்தன். இப்போ நட்டம் அடைந்ததால் தன்னிடம் எந்தப்பொருளும் இல்லை என்று இரக்கிறார். முன்பு அவர் தலைக்கணம் கொண்டு திமிருடன் நடந்தவர். எனது குருவான சிற்றம்பலம் அவரைத் தனது மாணவரென்று தழுவ அவரும் தழுவி அவமானப்பட்டவர்’’. என்றார் பண்டிதர் பரந்தாமன்.

‘‘பண்டிதரே, ஓர் உயிரைக் கொன்று அதன் இறைச்சியை உண்பவனும் நீர் கூறியது போல பெரியவர்கள் அன்பு மிகுதியால் தழுவும்போது சிறியவர்கள் அடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டுமே தவிர தாமும் பெரியவர் என்று நினைத்து அவரைத்தழுவக்கூடாது என்பது உண்மை. அதைப்புரிந்த நீர் தன்னிடம் பொருள் இல்லை என்று கூறி இரப்பவர்களை கேலி செய்யக்கூடாது என்று பெரியவர்கள் கூறியதை அறியவில்லையா? அத்துடன் நீர் மாமிசம் உண்பதும் உயிர்க்கொலை செய்பவர்களை ஊக்குவிப்பதும் எந்த அறத்தில் அடங்குகின்றது. ஒருவனைத் திருத்துபவன்தான் அந்தக் குற்றங்களை செய்யாது இருத்தல் வேண்டும். ஒருவனைக் கேலி செய்பவன் அது சம்மந்தமாக சான்றோர் கூறியதையும் அறிந்திருத்தல் வேண்டும். நீர் கற்றனீர். கற்றவன் கற்றபடி நடக்காவிட்டால் அவன் கற்ற கல்வியால் என்ன பயன் உண்டாகும் என்பதை நினைத்துப்பாரும்’’. என்றார் சிறுத்தொண்டன்.

## 75. மரம் போல் அசைவில்லாதவர்

**வள்ளன்மை பூண்டான்கண் செல்வமும் உள்ளத்து**
**உணர்வுடையா னோதிய நூலும் - புணர்வின்கண்**
**தக்க தறியும் தலைமகனும் இம்மூவர்**
**பொத்தின்றிக் காழ்த்த மரம்.**

வாரி வழங்கும் வள்ளன்மை உள்ளவனின் செல்வமும், கற்றதை நினைவில் வைத்திருக்கும் அறிவுடையவனின் நூலறிவும் , பிறர் தன்னிடம் வந்தபோது, வந்தவனின் மன எண்ணத்தை அறிந்து கொள்பவனும் என்னும் இம் மூவரும் மறுவின்றி வைரம் பொருந்திய உறுதியான மரத்தைப் போன்றவராவர்.

மடத்தில் இருந்தபோது சிறுத்தொண்டனுக்கு மயக்கம் வருவது போல இருந்தது. அதனால் சிவநாதனும் சிவலிங்கமும் வைத்தியரிடம் சென்றனர். அவர் வந்து சிறுத் தொண்டனின் உடலைச் சோதித்துப் பார்த்த பின்பு, ‘‘நீங்கள் கடுமையாக வேலை செய்கிறீர்கள். சில நாட்களுக்கு ஓய்வெடுங்கள் எல்லாம் சரியாகி விடும்’’ என்றார்.

‘‘ஐயாவுக்கு எந்த வருத்தமும் வராது என்று சொல்லிவிட்டுத் தான் நான் வைத்தியரிடம் சென்றேன். அது உண்மையாகி விட்டது, ‘‘ வரி வழங்கும் வள்ளன்மை உள்ளவர்களின் உடலும், அவர்களின் செல்வமும், கற்றவற்றையெல்லாம் மறக்காது நினைவில் வைத்திருப்பவரின் அறிவும் , தன்னிடம் வந்தவரின் விருப்பத்தை அவரின் முகத்தின் மீது உள்ள குறிப்புக்களைக் கொண்டு அறிந்து உதவுபவரும் வைரம் பாய்ந்த,மரத்தை ஒத்தவர்கள்’’. என்று சான்றோர் கூறியதாகச் சிறுத்தொண்டன் ஐயா எமக்குக் கற்பிப்பவர். அதனால் அவரது மனமும் உடலும் வைரம்பாய்ந்த மரத்தைப்போல உறுதியாக இருக்கும். வேலைப்பழுவால் சோர்ந்து விட்டார். இரண்டு நாட்களுக்கு அவரோடு கூட இருந்து அவரைக் கண்காணிக்கப் போகிறேன்’’

என்றான் சிவலிங்கம்.. வைத்தியர் மருந்துகள் எதுவும் கொடுக்காது, ‘‘ஓய்வாக இருங்கள்’’ என்று கூறி விட்டுச் சென்றார்.

## 76. பாதுகாப்பதற்கு அரியவர்.

**மாரிநாள் வந்த விருந்தும் மனம்பிறிதாய்க்**
**காரியத்திற் குன்றாக் கணிகையும் - வீரியத்து**
**மாற்றம் மறுத்துரைக்கும் சேவகனும் இம்மூவர்**
**போற்றற்கு அரியார் புரிந்து.**

மழை காலத்தில் வந்த விருந்தினரும், மனம் வேறுபட்டிருந்தபோதும் தனது வருவாய்க்காக மகிழ்வூட்டும் பொது மகளும், போர்க் களத்தில் அரசன் கூறியவற்றிற்கு மாறாக நடந்து கொள்ளும், போர்வீரனும், என்ற இம் மூவரும் விரும்பி உறவாடுவதற்குரிவரல்லர்.

நள்ளிரவில் பெருமழை பெய்து கொண்டிருந்தது. அப்போது மடத்தின் கதவு நட்டப்பட்டது. சிவலிங்கம் எழுந்து சென்று கதவைத் திறந்தான். வெளியே வெளியூரவர்கள் பத்துப்பேர் நின்றனர். அவர்களைப் பார்த்த சிவலிங்கத்திற்கு ஆத்திரம் வந்தது. எனினும் வேண்டாவெறுப்பாக வரவேற்றான். அவனது உதவியாளன் அன்று நள்ளிரவுக்குப் பின்பு தான் வருவதாகக் கூறிச் ெசென்றான். அவனுக்கும் விலை மகளான கஜேந்தினிக்கும் உறவு இருந்தது. முதள் நாள் இரவு தனது சகோதரனின் பிள்ளை இறந்து விட்டதென்று அயல் ஊருக்குச் சென்றவள். மறுநாள்க் காலை திரும்பியிருந்தாள். அதனால் அவன் கஜேந்தினியின் வீட்டுக்குச் சென்று விட்டான். சிவலிங்கம் முணுமுணுத்தபடி சமைக்கத் தொடங்கினான். அப்போது அவனது உதவியாளன் பாட்டொன்றை மகிழ்வுடன் முணுமுணுத்தவாறு வந்தான், ‘‘பத்துப்பேர் அயலூரில்

இருந்து வந்துள்ளனர்'' என்றவாறு காய்கறிகளை வெட்டினான் சிவலிங்கம்.

''மழைகாலத்தில் வரும் விருந்தினரை மகிழ்வுடன் வரவேற்க முடியாது. சினத்தால் சிறுத்தொண்டன் ஐயா கோபிப்பார்'' என்றான் உதவியாளன்.

''அது மட்டுமல்ல எத்தனை பிரச்சினைகள் இருந்தாலுரும் அதை மறைத்துவிட்டுப் பணத்திற்காக மகிழ்வூட்டும் விலை மகளும், போர்க்களத்தில் அரசனுக்கு அடங்காது செயற்படும் போர் வீரனும் விருப்பத்துக்குரியவர்கள் அல்லர் என்று சிறுத்தொண்டன் ஐயா கற்பித்ததை மறந்து விட்டாயா?'' என்று கேட்டான் சிவலிங்கம்.

## 77. குடிப்பிறப்பில் குற்றமற்றவர் செயல்

**கயவரைக் கையிகந்து வாழ்தல் நயவரை**
**நள்ளிருளும் கைவிடா நட்டொழுகல் - தெள்ளி**
**வடுவான வாராமல் காத்தல் இம்மூன்றும்**
**குடியில் குற்றமற்றவர்க்கே உள்ளனவாகும்.**

கீழ்மக்களைக் கைவிட்டு வாழுதல், தம்மீது அன்பு கொண்டவர் நள்ளிருள் போன்ற கொடுந்துன்பத்தில் அகப்பட்டு வாடும் போது கைவிடாதிருத்தல்., தனக்கு எவ்வேளையிலும் பழிச் சொல்வராது காத்துக்கொள்ளல், என்ற இம் மூன்றும் குற்றமில்லாத குடிப்பிறப்பினர்க்கே உண்டு.

''உன்னுடைய போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. நீயாரோ, நான் யாரோ என்றாலும் ஒன்றாக வேலை செய்வதால் அன்பாகப் பழகுகிறோம். சிறுத்தொண்டன் ஐயா முதியவர்களின் வகுப்பில் நேற்று என்ன கூறியவர்,'' கீழ்மக்களோடு பேசக்கூடாது, நட்பு வைக்கக் கூடாது. என்றும் நல்லவர்களோடு நட்புப்பூணுங்கள். அவர்கள்

பெருந்துன்பங்கள் வந்தாலும் உங்களைக் காப்பாற்றுவார்கள் என்றும், பழியான செயல்களைச் செய்யக் கூடாது என்றும் சொன்னவர். அத்துடன் கீழ் மக்களைக் கைவிடுதலும், நண்பர்களுக்குப் பெரும் துன்பங்கள் வந்தாலும் அவர்களைக் கைவிடாது உதவி செய்வதும். பழிச்சொல் வராது பாதுகாத்தலும் உயர் குடிப் பிறந்தவர்களின் குடிப்பண்பு என்றவர். அவரை நான் கடவுளாகப் போற்றுகிறேன். உனது செயல்களைப் பற்றிக் கூறாவிட்டால் எனக்கும் இந்த மடத்திற்கும், சிறுத்தொண்டன் ஐயாவுக்கும் பெரும் மானக்கேடு வரும். அதனால் நீ திருந்திவாழ வேண்டும். இல்லாவிட்டால் வேலையை விட்டு விலக வேண்டும். இதில் எதைச் செய்யப்போகிறாய். நீ திருந்தாவிட்டால் நான் ஐயாவுக்கு உனது நடத்தைகள் பற்றிக் கூறுவேன்'' என்றான் சிவலிங்கம்.

## 78. தவமுடையார் செயல்கள்

**தூய்மை உடைமை துணிவாம் தொழிலகற்றும்**
**வாய்மை உடைமை வனப்பாகும் - தீமை**
**மனத்தினும் வாயினும் சொல்லாமை மூன்றும்**
**தவத்தில் தருக்கினார் கோள்.**

தூய்மை உடையவராக இருத்தல், அறிஞர்களால் கூறுப்படுபவற்றை விளங்கிக் கொள்ளும் ஆற்றல், சொல்லிலும் செயலிலும் தூய்மையாக இருத்தல் என்ற இம் மூன்றும் சிறந்த தவநெறியை மேற்கொண்டு வாழ்வோரின் பண்பாகும்.

''தூய்மை உடையவராகவும், அறிவும் ஆற்றலும், அறிஞர்கள் கூறுபவற்றை விளங்கிக் கொள்பவராகவும் சொல்லிலும் செயலிலும் ஒழுக்கமுள்ளவராகவும் வாழும் சிறுத்தொண்டன் ஐயாவுக்கு இம் மடத்தின் ஊழியனான நீ செய்யும் தவறுகளைச் சொல்லா விட்டால் எனக்குப் பாவமும் பழியும் வந்து சேரும்.விலை மகளான கயேந்தினியுடன் இனித் தொடர்பு வைக்கமாட்டேன் என்று

கூறியமையால் உன்னை மன்னித்தேன். நீ மீண்டும் அவளிடம் சென்று வந்துள்ளாய். அவளது வீட்டுக்குச் சென்றால் குளிக்காமல் யாரும் வீட்டின் உள்ளே செல்லமாட்டார்ககள். அவளின் வீட்டில் இருக்கும் மூதேவி அங்கு செல்வோரையும் பற்றிப்பிடித்து விடும். இந்த மடம் தூய்மையானது. மாசுமறு அற்றது. உணவு உண்போரிற் பலர் விரதத்தை அனுட்டிப்பவர்கள். அவர்கள் நீ சமைத்த உணவை உண்டால் பாவத்தையும் பழியையும் உண்டவர்களாவர். அதனால் எனக்கும் பழி ஏற்படும். அதை நான் விரும்பவில்லை'' என்றான் சிவலிங்கம்.

## 79. நெஞ்சுக்கு ஒரு நோய்

**பழி அஞ்சான் வாழும் பசுவும் அழிவினால்**
**கொண்ட அருந்தவம் விட்டானும் - கொண்டிருந்து**
**இல்லஞ்சி வாழும் எருதும் இவர்மூவர்**
**நெல்லுண்டல் நெஞ்சிற்கு ஓர் நோய்.**

உலகம் இகழும்படி வாழ்பவனும், துன்பம் வந்தபோது தான் மேற்கொண்ட தவத்தைக் கைவிட்டவனும், தனது மனைவிக்குப் பயந்து அடங்கி வீட்டில் வாழும் எருது போன்றவனும், இம் மூவரும் சோற்றை உண்டு வாழும் நோயாளிகள் ஆவர்.

''நீ உனது மனைவிக்குப் பயந்து அடங்கி வாழ்கிறாய் என்று ஊரவர்கள் பேசிக்கொள்கிறார்கள். தனது உழைப்பை விலை மகளுக்குக் கொடுப்பவன் எப்பொழுதும் மனைவிக்கு அடங்கியே வாழ வேண்டும். நீ அப்படித் தான் வாழ்கிறாய். சபாபதியிடம் நீ வாங்கிய பணத்தைக் கொடுக்காமையால் அவன் ஊர்முழுக்க உன்னைப்பற்றி மிகவும் கேவலமாகக் பேசித் திரிந்தவன். அதைவிட உன்னை ஊரில் யாராவது ஒருவர் மதிக்கிறார்களா? ஊரில் மதிப்பில்லாதவனும், எருதைப் போல வீட்டில் அடங்கி ஒடுங்கிப்

படுத்திருப்பவனும், தனது முயற்சியை இடையில் கைவிடுபவனும் சோற்றை உண்டு வாழும் நோயாளிகள் என்று சிறுத்தொண்டன் ஐயா உனக்குச் சொல்லித்தரவில்லையா….? நல்லவர்களோடு பழகியும், நல்லவர்களின் பேச்சைக் கேட்டும் திருந்தாத நீ ஒரு தொழு நோயாளி. உனது நோய் மாறாது. உனது மனைவி மட்டுமல்ல உனது பெற்றோரும், பிள்ளைகளும், உறவினரும், ஊரவரும் உன்னைக் கண்டாலோ அல்லது உன்னோடு பேசினாலோ அவமானம் எனக்கருதுகின்றனர். இதை அறிந்தும் உன்னால் எப்படி மகிழ்வுடன் சிரித்துக் கதைக்க முடிகிறது''. என்று கேட்டான் சிவலிங்கம்.

## 80. புதரில் போட்ட விதை

**முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்**
**நிறையில்லான் கொண்ட தவமும் - நிறைஒழுக்கம்**
**தேற்றாதான் பெற்ற வனப்பும் இவை மூன்றும்**
**தூற்றின்கண் தூவிய வித்து.**

முறையாகச் செயல்களைச் செய்ய முடியாதவன் பெற்ற தலைமையும், மனவுறுதி இல்லாதவன் மேற்கொள்ளும் தவமும், ஒழுக்கமில்லாதவனின் வனப்பும், என்னும் இம் மூன்றும் புதரில் விதைத்த விதைபோலப் பயனற்றதாகும்.

''சிறுத்தொண்டன் மடத்தின் பொறுப்புக்களை இன்னொருவரிடம் கொடுத்து விட்டு அதைக்கண் காணிக்க விரும்பினார். இளைஞர்களுக்கு வேலைகளைப் பழக்கி அவர்களுக்குத் தலைமை தாங்கும் பண்பை வளர்த்தல் வேண்டும் என்று எண்ணினார். ஆனால் எவரும் ஏற்கமுன் வரவில்லை. அவரது மனைவி சொன்னாள், ''நடனபாதம் ஒழுங்கானவன், நல்லவன், உங்கள் சொல்லைக் கேட்பவன். அதனால் அவனிடம் தலைமைப் பொறுப்பைக் கொடுங்கள்'' என்றாள்.

சிறுத்தொண்டன் பலமாகச் சிரித்தார். பின்பு சொன்னார், ‘‘தலைமைப் பதவி என்பது மிகவும் பொறுப்பானது, கண்ணியம் மிக்கது. அதனால் தலைவன் என்பவர் எல்லோரையும் அனுசரித்து நடப்பவனாகவும் பயப்படாதவனாகவும் உறுதியுடன் முடிவுகளை எடுப்பவனாகவும் இருத்தல் வேண்டும். நிதானமாகச் சிந்திக்க வேண்டும், பொறுமையுடன் பலரும் ஏற்கக்கூடிய முடிவை எடுத்தல் வேண்டும், இந்தத் தகுதிகள் அவனுக்கு இல்லை. அவன் உறுதியில்லாதவன். அவனது மனைவி எல்லாவற்றையும் கெடுத்துவிடுவாள். முறையாகச் செயல்களைச் செய்ய முடியாதவன் பெற்ற தலைமையும், மனவுறுதி இல்லாதவன் மேற்கொஷள்ளும் தவமும், ஒழுக்கமில்லாதவனின் வனப்பும் பயனற்றவை. அதனால் அவனுக்கும் சமூகத்திற்கும் பெரும்தீங்குகள் உண்டாகும். தனது மனைவியை வழிப்படுத்தி வாழ முடியாதவனிடம் தலைமையைக் கொடுக்கமுடியாது’’ மீறிக் கொடுத்தால் அது புதரில் இட்ட விதை போலப் பயனற்றுவிடும்’’ என்றார்.

## 81. ஆசைக் கடலில் மூழ்குபவர்

**தோள்வழங்கி வாழும் துறைபோல் கணிகையும்**
**நாள்கழகம் பார்க்கும் நயமிலாச் சூதனும்**
**வாசிகொண் டொண்பொருள் செய்வானும் - இம்மூவர்**
**ஆசைக் கடலுள் ஆழ்வார்.**

அனைவருக்கும் நீர் வழங்கும் நன்நீர்த் துறை போலபலருடன் கூடி மகிழும் பொது மகளும், நாள் தோறும் சூதாடிப் பொருளை இழக்கும் சூதாடியும், மிகுதியாக வட்டி வாங்கிப் பொருளைச் சேகரிக்கும் கொடியவனும் என்னும் இம் மூவரும் ஆசை எண்ணும் கடலில் மூழ்குபவர்கள் ஆவார்.

பண்டிதர் பரந்தாமன் வெகுநேரமாக வந்திருந்தார். உங்களைக் காணமையால் மாலை ஐந்துமணிக்கு வருவதாகச் சொல்லிச் சென்றார் என்றார். காமாட்சி.

அவருக்கும் மடத்தின் தலைமைப் பதவி மீது தீராத மோகம். சாதி,மதபேதமும்,உயர்வு தாழ்வும் பாராது ஊரின் நடுவே உள்ள நல்ல நீர்க் கிணறு அனைவருக்கும் நீர் வழங்வது போல ஆசை வசப்பட்டு பொருளுக்காக தன் உடலையே விற்கும் கஜேந்தினியே கதி என்றிருக்கும் பரந்தாமன், ஓயாமல் சூதாடுபவர் அத்துடன் பாமரமக்களை ஏமாற்றி வட்டிக்குப் பணம் கொடுத்து முதலுக்கு மேலாக வட்டி வாங்குபவர். பொருளாசை கொண்ட அவருக்குத் தலைமைப் பதவி கொடுத்தால் கஜேந்தினிக்கும் சூதாட்டத்திற்கும் வட்டிக்குக் கொடுக்கவும் தான் பொதுப்பணம் பயன்படும். மனிதர்கள் இளமையில் தவறு விடுவது இயற்கை. ஆனால் பொறுப்புக்கள் வந்த பின் திருந்தித் தான் வகிக்கும் பதவிகளை அலங்கரிக்க வேண்டும். பதவியால் பதவி பெறுபவனும், பதவி பெறுபவனால் பதவியும் மேன்மை அடைய வேண்டும். இதைப்பலர் உணர்கிறார்களில்லை. படித்து ஆசிரியரான பரந்தாமனின் நடத்தை பற்றி ஊரறியும் அப்படியிருந்தும் திருந்தாது ஆசை பிடித்தலையும் அவனுக்குத் தலைமைப் பதவியிலும் ஆசை’’ஷ என்று சலித்துக் கொண்டார் சிறுத்தொண்டன்.

## 82. நல்லவர் வழிகள்

**சான்றாருள் சான்றான் எனப்படுதல் எஞ்ஞான்றும்**
**தோய்ந்தாருள் தோய்ந்தான் எனப்படுதல் - பாய்ந்தெழுந்து**
**கொள்ளாருள் கொள்ளாத கூறாமை இம்மூன்றும்**
**நல்லாள் வழங்கும் நெறி.**

அறிவிற் சிறந்தவர்களால் அறிஞர் என்று மதிக்கப்படல், எக்காலத்திலும் நண்பர்களுடன் நட்புக்குரிய சிறந்த பண்புகளுடன்

நடத்தல், தம் மீது வெறுப்புக் கொண்டவர்களுடனும் கோபம் கொள்ளாதிருத்தல், என்ற இம் மூன்றும் நல்லவர்களின் பண்பாகும்.

"ஒருதலைவன் அறிவிற் சிறந்தவர்களால் அறிவுள்ளவன், ஒழுக்கமமானவன், கோபங்கொள்ளாதவன், இரக்க சுபாவம் உள்ளவன், அன்பும் பரிவும் பிரச்சினைகளை நடுவுநிலை நின்று ஆராய்பவன். நண்பர்களோடு நட்பு முறை தவறாமலும், உறவினர், அயலவர்களுடன் அன்புடனும், பரிவுடனும், பாசத்துடனும், மகிழ்வுடனும் பேசக்கூடியவனாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய பண்புகள் உள்ளவன் தான் மற்றவர்களுக்குத் தலைவனாகவும் முன்மாதிரியானவனாகவும் இருக்க முடியும். கள்ளைக் குடிப்பவன் எப்படி மற்றவர்களைக் கள்ளைக் குடிக்கக் கூடாதென்று கூறமுடியும்? இப்படித்தான் ஒவ்வொரு விடயங்களும். நாவலன் எல்லா வகையிலும் பொருத்தமானவன். ஆனால் துறவு மேற்கொள்வதில் ஆர்வமாக இருக்கிறான். துறவு மேலானது தான் ஆனால் இல்வாழ்க்கை அதை விட மேலானது என்று உணர்த்தியும் உணர்கிறானில்லை. ஒரு துறவியிடம் மடப் பொறுப்பை ஒப்படைக்கலாமா என்று பல நாட்களாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். முடிவை எட்டவில்லை. அதனால் இதைப்பற்றி அவனோடு நான் கதைக்கவில்லை" என்றார் சிறுத்தொண்டன்.

## 83. நல்வழியைக் கெடுக்காதவை

**உப்பின் பெருங்குப்பை நீர்படியின் இல்ஆகும்**
**நட்பின் கொழுமுளை பொய்வழங்கின் இல்ஆகும்**
**செப்பம் உடையார் மழையனையர் இம்மூன்றும்**
**செப்பநெறி தூரா வாறு.**

உப்புக் குவியலுக்குள் நீர் புகுந்தால் அது கரைந்து அழிந்து விடும். அது போலவே நண்பர்களிடையே பொய் புகுந்தால் நட்பு அழிந்து விடும். நடுநிலை உடையார் மழையைப் போல

சகலரையும் சமமாக மதித்து உபசாரம் செய்வார். இவை மூன்றும் நல்ல வழி அழியாமைக்குக்குரிய சாதனங்களாகும்.

பண்டிதர் பரந்தாமன் மடத்திற்கு வந்தபோது சிறுத்தொண்டன் அங்கிருந்தார். அவரை வரவேற்ற சிறுத்தொண்டன் சொன்னார், " பண்டிதரே, நீர் கற்றனீர். நல்லவை கெட்டவையல்லாம் அறிந்தவர். உமக்கு நான் விபரமாக எதையும் கூறத் தேவையில்லை. உப்புக் குவியலுக்குள் நீர் உட்புகாமல் பாதுகாத்தால் தான் அதிலிருந்து பயனைப் பெறலாம். தவறி நீர் புகுந்து விட்டால் அது எதற்கும் பயன்படாது. அழிந்து விடும். அதுபோல நட்பானது பொய் பேசினால் அழிந்து விடும். தலைமைப் பதவியை ஏற்பவன் சகலரையும் சமமாக மதித்து உபசாரம் செய்து, அவர்கள் மனங் கோணாதபடி நடத்தல் வேண்டும். அவ்வாறு நடக்கத் தவறினால் தலைமைப் பதவிக்கு இழுக்குண்டாகும். அதனால் சமூகம் நாசமாகிவிடும். இவை எல்லாம் உமக்குத்தெரியும். அறநூல்களையும் நீதி நூல்களையும் கற்றுப் பண்டிதர் தேர்வில் சித்தியடைந்து ஆசிரியப் பதவி வகிக்கும் உங்களுக்கு இவற்றை நான் கூறலாகாது. அதனால் கற்றதை ஞாபகப் படுத்தினேன். எனக்கு அவசியமானதொரு கருத்தரங்குகள்ளது" என்று கூறிவிட்டு எழுந்து சென்றார் சிறுத்தொண்டன்.

## 84. வறுமையில் சிக்கியவர்

**வாய்நன்கு அமையாக் குளனும் வயிறாரத்**
**தாய்முலை உண்ணாக் குழவியும் சேய்மரபில்**
**கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்**
**நல்குரவு சேரப்பட் டார்.**

நீர் வரும் வழிநன்றாக அமையாத குளமும், தன்வயிறு நிரம்புமாறு தாயிடம் பால் உண்ணாத மழலையும், நல்ல நூல்களைக்

கற்றறிய வேண்டும் என்ற எண்ணிமில்லாத மனிதர்களும், ஆகிய இம் மூவரும் வறுமைப்பட்டவராவர்.

உள்ளே இருவரது உரையாடல்களையும் கேட்டுக் கொண்டிருந்த சிவநாதன் சொன்னார், “ஐயா, வாழைப்பழத்தில் கூரிய ஊசியை ஏற்றுவது போல நோகாமல் பரந்தாமனுக்குப் பதில் கூறிவிட்டீர்கள். அவன் ஒருபோதும் திருந்த மாட்டான். கோடிகோடியாகப் பணம் இருந்தும் என்னபயன். அப்பணத்தால் அவன் கூட இன்பமடைவதில்லை. சென்றவாரம் ஒரு நள்ளிரவில் பலர் ஒன்று சேர்த்து ஆயுதங்களுடன் அவனது வீட்டிற்குச் சென்று மிரட்டிப் பணம் பெற்றனர். பலர் திட்டுகின்றனர். பெரிய குளமாக இருந்தாலும் அதற்கு நீர்வரும் வாய்க்கால்கள் நல்ல முறையில் அமைய வேண்டும். அது போலத் தாயிடம் குழந்தை வயிறாறப் பாலுண்ண வேண்டும். மனிதராகப் பிறந்தவர்கள் நல்ல நூல்களைத் தேடித்தேடிக் கற்கவேண்டும். கற்றபடி வாழவேண்டும். அப்படி வாழாவிட்டால் கற்றதால் என்ன பயனை அடைய முடியும்? பரந்தாமன் அளவுக்கதிகமாகப் பொருள் தேடி வைத்துள்ளான். அப்பொருள் நல்ல வழியில் வந்து சேரவில்லை. அதனால் அப்பொருளுக்கும் அவனுக்கும் பெரும் ஆபத்துக்கள் வருகின்றன. அப்படி வந்தும் அவன் உணராது மேலும் மேலும் பாவங்களைச் செய்கிறான். பால் ஊட்டாமல் இருந்தும் தமது அழகு கெட்டுவிடும் என்பதற்காகக் குழந்தைக்குப் பால் தன்னுடைய அழகைக் காப்பாற்றும் தாயைப் போல அவனும் மறுமையை நினைக்காது வாழ்கிறான்” என்றார்.

## 85. ஒற்றரின் இயல்புகள்

**எள்ளப் படுமரபிற்று ஆகலும் உள்பொருளைக்**
**கேட்டு மறவாத கூர்மையும் முட்டின்றி**
**உள்பொருள் சொல்லும் உணர்ச்சியும் இம்மூன்றும்**
**உள்ளிய ஒற்றாள் குணம்.**

சிரமங்கள் பலவும் வந்த போதும் பகைவர்களைப் பற்றிய தகவல்களைக் கேட்டறிந்து, அறிவால் ஆராய்ந்து, மறக்காமல் தான் அறிந்தவற்றை ஒழுங்குபடுத்தி மன்னர்க்குக் கூறுவது ஒற்றனின் மூன்று சிறந்த இயல்புகள் ஆகும்.

சோதிலிங்கம் சிறுத்தொண்டனிடம் வந்து, "பண்டிதர் படித்தவர், அறிவுள்ளவர். மனிதர்கள் தவறு செய்வது இயல்பு, அதற்காக அவர்கள் வாழ்நாள் முழுவதும் தவறுகள் செய்தபடி இருப்பார்களா…? அவர்கள் திருந்தசந்தர்ப்பமளிக்ககலாம். தானே" என்றான்.

"தூதுவன் எனப்படுபவன் சம்பந்தப்பட்ட நடத்தைகளை ஆராய்ந்து நல்லவற்றையும் தீயவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து அதில் எது கூட இருக்கிறதோ அதை மீண்டும் ஆராய்ந்து முடிவெடுத்தல் வேண்டும். அதற்கு ஒற்றனின் அறிவும், ஞாபக சக்தியும், நுண்ணறிவும் துணையாக இருக்கும். இந்த மூன்றும் இல்லாதவர்கள் சிறந்த தூதுவர்களாக மாட்டார்கள். முன்னைய காலத்தில் மன்னர்களின் தூதுவர்கள் அறிவுத்திறனும், ஆராய்வுத்திறனும், ஞாபகத்திறனும், தாம் திரட்டியவற்றை ஒழுங்கு படுத்திப் பேசும் திறனுமுள்ளவர்களாக இருந்தனர். இப்போ மன்னராட்சி ஒழிந்து விட்டது. அதனால் ஒரு துறையின் தலைவனுக்குத் தனது தோழனின் சார்பில் தூது வந்தவனுக்கு முன்னைய அரசர் காலத்தில் இருந்த பண்புகள் இருத்தல் வேண்டும். உன்னிடம் அவை எதுவும் இல்லை. நீ எழுந்து போ" என்று கோபமாகச் சொன்னார் சிறுத்தொண்டன்.

## 86. குற்றங்களை உண்டாக்கும் பகைகள்

**அன்புப் பெருந்தளை யாப்பு நெகிழ்ந்தொழிதல்**
**கற்புப் பெரும்புணை காதலின் கைவிடுதல்**
**நட்பின் நயநீர்மை நீங்கல் இவைமூன்றும்**
**குற்றம் தரூஉம் பகை.**

அன்பை நீக்குதல், பொருளுக்காகக் கற்ற கல்வியை மறத்தல், நட்புக் காரணமாக நடுவு நிலை தவறுதல், ஆகிய மூன்றும் குற்றங்களை உண்டாக்கும் பகைகள் ஆகும்.

சிறுத் தொண்டன் சென்ற பின் மடத்தில் இருந்தான் சோதிலிங்கம். அவனது மனம் கொதித்துக் கொண்டிருந்தது. அப்போது அந்தப்பக்கம் வந்த சிவநாதனைக் கண்டதும் கோபத்துடன் சோதிலிங்கம் சொன்னான், ‘‘சிறுத்தொண்டன் தான் ஊரில் பெரிய மனிதனோ….? அவர் தான் ஊரில் நடைபெறும் அனைத்திற்கும் முடிவு எடுப்பவரோ,’’?

‘‘அப்படிச் சிறுத்தொண்டன் எண்ணுவதில்லை நீ தான் எண்ணிவந்துள்ளாய். அவர் தான் முடிவு எடுப்பவர் என்று நீ கருதியமையால் தானே. அவரிடம் வந்தாய். பின் ஏன் அப்படிச் சொல்கிறாய். மனிதர்களை மனிதராக வாழவழி செய்து கடவுளாக்குவது அன்பு. அந்த அன்பை விட்டு நீங்கினால் பாவமும் பழிகளும் வந்து சேரும். அத்துடன் பொருளாசை மிகுந்து கற்ற கல்வியை மறப்பதும் பாவம் பழிகள் வந்து சேரக் காரணிகள் ஆகும். இதை விட நட்பு, உறவு, பதவி போன்றவற்றிற்காக நடுவுநிலை தவறினாலும் பாவமும் பழியும் வந்து சேரும். இதைப் பலர் உணர்வதில்லை. ஆனால் சிறுத்தொண்டன் ஐயா உணர்ந்து அதன் படி வாழ்கிறார். அதனால் ஊரவர்கள் அனைவரும் அவரை மதிக்கின்றனர், வணங்குகின்றனர். இது உனக்குத் தெரியும். கீழான

பல செயல்களை நீ செய்தும் உன்னை அவர் கண்டிக்காது அன்போடு எடுத்துரைத்தார். பொருளுக்காக நீ எதையும் செய்வாய். சிறுத்தொண்டன் தனது பொருளைக் கொடுப்பாரே தவிர யாரிடமாவது எதையாவது பெற்றாரா....? அப்படியானால் கூறு அவர் நடுநிலை தவறாதவர். இது உனக்குத் தெரியும். தெரிந்தும் அன்பில்லாத பொருளுக்காக எதையும் செய்யும் நடுவுநிலை இல்லாதவனுக்காகப் பரிந்து பேச ஏன் வந்தாய்...? என்று கேட்டார் சிவநாதன்.

## 87. மூடர்கள்

**கொல்வது தானஞ்சான் வேண்டலும் கல்விக்கு**
**அகன்ற இனம்புகு வானும் இருந்து**
**விழுநிதி குன்றுவிப் பானும் இம்மூவர்**
**முழுக்க ளாகற்பா லார்.**

ஓர் உயிரை அஞ்சாமல் கொலை செய்பவனும், கல்வியறிவில்லாதவர்களுடன் சேர்பவனும், தான் முயற்சியின்றி இருந்து முன்னோர் சேமித்த பொருளை அழிப்பவனும், ஆகிய இம் மூவரும் மூடர்களாவர்.

“நீ கற்றவன். கற்றவற்றை நினைத்துப்பார். நீயும் பரந்தாமனும் செய்வதும் சரியா...? மூடர்கள் கூடச் செய்ய அஞ்சும் செயல்களைத் துணிவுடன் செய்கிறீர்கள் ஓர் உயிரின் தசையை உண்பதே பாவம். ஆனால் நீங்கள் இருவரும் கற்றதை மறந்து உயிர்களை அஞ்சாமல் கொன்று தின்கிறீர்கள். கல்வி அறிவில்லாதவர்களை மதித்து அவர்களின் பணத்திற்காக நட்புக் கொண்டுள்ளீர்கள். கற்காத மூடர்கள் செய்யும் செயல்களை மதிக்கிறீர்கள். அதனால் மூடர்கள் தாம் செய்யும் செயல்கள் நல்லவை என்று நினைக்கிறார்கள்.. அதற்கு நீங்கள் துணையாக இருக்கிறீர்கள். அத்துடன் நீ முயற்சியின்றிச் சோம்பியிருந்து உனது பேரனாரும் தகப்பனாரும் க்‘ட்டப்பட்டுச்

சேமித்த பணத்தைச் செலவு செய்கிறாய். இந் நிலையில் உனக்கொரு நண்பன். அவருக்கொரு பதவி. அதுக்காகத் தூதுவருகிறாய். கற்ற உனக்கு உயிர்க் கொலை செய்யக் கூடாதென்றும், கல்வி அறிவில்லாதவர்களுடன் சேரக்கூடாதென்றும் முன்னோர் தேடிவைத்த சொத்தில் வாழக் கூடாதென்றும் தெரியவில்லை. அப்படியிருக்க ஒரு தீயவனுக்கு உதவக் கூடாதென்று உப்படிப் புரியும்'' என்று கோபமாகக் கேட்டாள்.

## 88. உள்ளத்தைக் கலக்குபவை

**பிணிதன்னைத் தின்னுங்கால் தான்வருந்து மாறும்**
**தணிவில் பெருங்கூற் றுயிருண்ணு மாறும்**
**பிணைசெல்வ மாண்பின்று இயங்கலிளவை மூன்றும்**
**புணையின் நிலைகலக்கும் ஆறு.**

நோய் வருத்தும் போது வருந்துவதும், இரக்கமில்லாது காலன் உயிரைக் கவர்ந்து செல்லும் போது வருந்துவதும், உறவினர்களால் செல்வம் அழிந்தபோது வருந்துவதும் ஆகிய இம் மூன்றும் உள்ளத்தின் நிலையை மாற்றிப் பிறவிக் கடலில் அமிழ்த்த வைக்கும்.

''சிறுத்தொண்டர் ஐயா பாகுபாடற்றவர். விருப்பு,வெறுப்பு அற்றவர். நோய்வந்து அவரை வருத்திய போதும் துன்பப்படாதவர். காலன் வந்து கலைத்தாலும் கலங்காதவர் உறவினர்கள், நண்பர்களால் தனது பொருள் அழிந்தாலும் கவலைப் படாதவர். அவ்வாறு கலங்குவதால் பிறவி தொடரும் என்றும், துன்பங்கள், துயரங்கள் மிகுந்து விடும் என்று அஞ்சுபவர். நீங்கள் நோய் என்றால் வருந்துவீர்கள். மரணத்திற்குப் பயப்படுவீர்கள். உறவினர்,நண்பர்களுக்கு கொடுக்க விரும்ப மாட்டீர்கள். ஆனால் சிறுத்தொண்டர் ஐயா அள்ளிக் கொடுக்கிறார். சென்ற வருடம் கடும் நோய்க்குள் உள்ளான போது அவர் வருந்தாமல் ''இறவை என்னை

உன்னிடத்தில் அழைத்துச் செல் என்று தான் பிரார்த்தித்தார். ஆனால் ஊரவர்கள் விரதமிருந்து பொங்கிப் படைத்து “இறவைா, சிறுத்தொண்டன் ஐயாவைக் காப்பாற்று” என்று அழுதனர். “பொருள் மீதும் உடல் மீதும் ஆசையில்லாதவன் உயிர் வாழ்ந்தாலும் அவன் பிணம்”என்று தான் பெரியவர்கள் கூறியுள்ளனர். இதைச் சாதாரண மக்கள் அறிய மாட்டார்கள். ஆனால் அவர்கள் கற்காவிட்டாலும் இறைவனுக்கு அஞ்சுகின்றனர். ஆனால் கற்ற நீங்கள் எல்லாவற்றையும் அறிந்த போதும் பழிபாவங்களுக்கு அஞ்சாது வாழ்கிறீர்கள். இந்த வாழ்வு இம்மையில் வேண்டுமானால் நீங்கள் விரும்பிய இன்பங்களையெல்லாம் தரும். ஆனால் மறுமை என்று ஒன்றிருக்கிறது. அது எப்படியானதென்று நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை” என்றார் சிவநாதன்.

## 89. பிறந்தும் பிறவாதவர்

**அருளினை நெஞ்சத் தடைகொடா தானும்**
**பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்**
**இறந்துஇன்னா சொல்லகிற் பானுமிம் மூவர்**
**பிறந்தும் பிறந்திலா தார்.**

அருளைத் தனது உள்ளத்தில் சேர்த்து வைக்காதவனும், பொருளைத் தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் பாதுகாத்து வைத்திருப்பவனும், தன் நிலை மறந்து கோபத்தால் தீய சொற்களைப் பேசுபவனும் ஆகிய இம் மூவரும் மனிதராகப் பிறந்த மனிதரல்லாதவர் ஆரவந்.

“மனிதனென்றால் அருளுள்ளவனாக, அன்புள்ளவனாக, பொறுமை உள்ளவனாக, பிறருக்குதவி செய்பவனாக, நடுவு நிலை உள்ளவனாக இருத்தல் வேண்டும். இவை இல்லாதவர்கள் மனிதரல்ல பதர்கள் என்று பெரியவர்கள் கூறியிருக்கின்றனர். பொருளைச் சேர்த்தால் அதில்

ஆறில் ஒரு பங்கைத் தானம் செய்ய வேண்டும் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். ஆனால் பலர் தாம் உழைக்கும் செல்வம் முழுவதையும் சேமிப்பில் இட்டு விட்டுப் பிறரைச் சுரண்டி உண்கின்றனர். செல்வத்தைச் சேகரிப்பது இன்பமாக வாழ, தான் வாழ்ந்து எஞ்சியது தான் சேமிப்பு. சேமிப்பில் எஞ்சியது தான் தான் வாழும் நிலையென்றால் அது உலோபித்தனத்தின் உச்சநிலையாகும். உண்ணாமல், உடுக்காமல், அறவழியில் வாழாமல் வாழ்வோர் உயிருள்ள பிணங்கள் என்று பண்டிதர் பரந்தாமனுக்குத் தெரியாதா…? அல்லது உனக்குத் தெரியாதா? முன்னோரின் சேமிப்பு வாரிசுகளின் ஒழுக்கமான வாழ்விற்கே தவிர தீய நடத்தைகளுக்குல்ல. அவர்கள் பாடுபட்டு சேமித்த செல்வம் உன் போன்றவர்களால் களங்கப்பட்டு அவர்களுக்குப் பழியையே தேடித் தரும். இதை நினைத்தாவது இனியாவது திருந்திவாழ்'' என்றார் சிவலிங்கம்.

சோதிலிங்கம் எதுவும் பேசத் தோன்றாதவனாகச் சில கணங்கள் இருந்தான். பின்பு பெருமூச்சு ஒன்றை விட்டு விட்டு எழுந்து நடந்தான்.

## 90. நரகத்திற்குச் செல்லாமைக்கான வழிகள்

**ஈதற்குச் செய்க பொருளை அறநெறி**
**சேர்தற்குச் செய்க பெருநூலை – யாதும்**
**அருள்புரிந்து சொல்லுக சொல்லை இம் மூன்றும்**
**இருள் உலகம் சேராத ஆறு.**

பிறருக்கு உதவுவதற்காகப் பொருளைத் தேடுதல், அறவழியில் நடக்க நூல்களைக் கற்றல், எப்பொழுதும் இனிய மொழியைப் பேசுதல், இம் மூன்றும் ஒருவனை நரகத்திலிருந்து நீக்கும்.

சோதிலிங்கம் எழுந்த போது பண்டிதர் பரந்தாமன் வந்தார். இருவரையும் கண்ட சிவநாதன் , இவர்களுடன் கதைத்தால் மனதில் துன்பம். தான். உண்டாகும். என்று நினைத்து உள்ளே சென்றார்.

‘‘சிவநாதன் ஐயா’’ பண்டிதன் அன்பாக அழைத்தார். ஆச்சரியத்துடன் சிவநாதன் நின்று அவர்களைப் பார்த்தார்.

‘‘ஐயா, நான் கற்றபடி நடக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதை உணர்ந்து திருந்தி வாழ விரும்புகிறேன். பொருள் தேடுவது பிறருக்கு உதவுவது என்று கற்று விட்டுப் பிறரின் பொருளை அபகரித்து வாழ்ந்தேன். கற்பது மனதை பக்குவப்படுத்தி நல்ல வழிகளில் தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பதற்கு என்று கற்று விட்டு நானும் நல்ல வழியில் வாழாது பிறரையும் கெடுத்தேன். எப்பொழுதும் இனிய மொழி பேசவேண்டும் என்பதையும் மறந்து வாழ்ந்து துன்பப்பட்டேன். இனியாவது நல்லபடி வாழ வேண்டும் என்று நினைக்கிறேன்’’என்றார் பண்டிதர் பரந்தாமன்.

உங்களது வார்த்தைகளைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது. நெருப்பு ,நெருப்பு என்று உரக்கக் கத்தினாலும் நெருப்புச் சுடாது. அதுபோல வாழ்ந்த வாழ்க்கை மோசமானது. இனி திருந்தப் போகிறேன் என்று கூறுவது திருந்துவதாகாது. சொன்னபடி வாழ்வது தான் திருந்தியதற்கு அடையாளம். அதனால் சொன்னபடி வாழ். மக்கள் நம்பினால் தலைமைப் பொறுப்பினால் அழைத்து வந்து தருவார்கள். அதுவரை பொறுத்திரு’’. நீ கூறியபடி வாழ்ந்தால் மறுமையில் இன்பமாக வாழலாம்’’ என்றார் சிவநாதன்.

## 91. உடல் பற்றுடைய மூடர் செய்கை

**பெறுதிக்கண் பொச்சாந்து உரைத்தல் உயிரை**
**இறுதிக்கண் யாமிழந்தோம் என்றல் - மறுவந்து**
**தன்னுடம்பு கன்றுங்கால் நாணுதல் இம்மூன்றும்**

**மன்னா உடம்பின் குறி.**

பெற்றோர் செய்த உதவிகளை மறந்து, தாம் செய்த உதவி களைப் பெரிதாகப் பேசுதல், பெற்றோர் இறந்ததும் தாம் எல்லாவற்றையும் இழந்து விட்டதாகக் கலங்குதல், துன்பம் வந்த பின்பு தான் நல்லவற்றைச் செய்திருந்தால் இத்துன்பம் நேர்ந்திராது என்றுகலங்குதல், ஆகிய இம் மூன்றும் அறியாமையின் அடையாளங்களாகும்.

“பண்டிதரே, உமக்கு உமது பெற்றோர் செய்த உதவிகளை நினைத்துப் பாரும். அவர்கள் கல்வியூட்டி, நல்ல இடத்தில் திருமணம் செய்து தந்து வீடு தோட்டம், துரவு, பண்ணை தோப்பு என்றெல்லாம் தந்தவர்கள். அதற்காக நீர் அவர்களுக்கு என்ன செய்தீர்? இறுதிக் காலத்தில் பராமரித்தீர். அதை விட்டுவிட்டு நீர் தான் அவருக்கு உழைத்துக் கொடுத்ததாகவும், அச் சொத்தை அவர் தனது தங்கையின் பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டதாகவும் சொல்கிறீர். உண்மையில் உம்மை விட அவரது தங்கையும் பிள்ளைகளும் அவரில் பாசம் வைத்துள்ளனர். ஒரு மனிதன் தனது உழைப்பில் தனது சகோதரிக்கு உதவுவது பிழையா? உமது மனைவியின் சகோதரன் வெளி நாட்டிலிருந்து தனது சகோதரிக்கு எவ்வளவு பணம் அனுப்புகிறான். அதை மகிழ்வுடன் பெறுகிறீர் தானே. அது பிழையில்லையா? இப்போ யாராவது உம்மிடம் உதவிக்கு வந்தால் அப்பா இறந்த பின்பு என்னால் கூட வாழ முடியவில்லை என்று சொல்கிறீர். அதைவிடத் தேவை வந்தபோது தான் அறியாமற் செய்த பிழைகளை உணர்ந்து விட்டேன். இனித் தவறு செய்யமாட்டேன் என்று கூறி வருந்துகிறீர்கள். இதெல்லாம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடக்கும் திட்டமிட்ட செயல்கள். இதெல்லாம் சுயநலம் கொண்டவர்களின் செயல்கள். உண்மையாக நடப்பவன் தனது செயல்களை விளம்பரப்படுத்த மாட்டான்” என்றார் சிவநாதன்.

## 92. பிறந்தும் பிறவாதவர்

**விழுத்திணைத் தோன்றா தவனும் எழுத்தினை**
**யொன்றும் உணராத ஏழையும் - என்றும்**
**இறந்துரை காமுறு வானும் இம்மூவர்**
**பிறந்தும் பிறவாதவர்.**

ஒழுக்கமுள்ள குடும்பத்தில் பிறவாதவனும், எழுத்தறிவில்லாத மூடனும், தனது சொந்த விருப்பு வெறுப்புக்களை மட்டும் பேசுபவனும் , ஆகிய இம் மூவரும் பிறந்திருந்தும் பிறவாதவர்களேயாவர்.

“பண்டிதரே, “ஒழுக்கமில்லாத குடும்பத்தில் பிறந்தவனும், எழுத்தறிவில்லாத மூடனும் தனது சுயநலத்திற்காக வாழ்பவனும் மனிதனாகப் பிறந்தும் பிறவாதவர்கள்” என்று அறநூல்களும் பெரியவர்களும் கூறியிருக்கின்றனர். நீங்கள் இருவரும் ஒழுக்கமான குடும்பத்தில் பிறந்தவர்கள். கற்றவர்கள் இருந்தும் கற்காத மூடர்களைப் போலவும் தீய குடியிற் பிறந்தவர்கள் போலவும் சுய நலத்துடன் நடந்து கொள்கிறீர்கள். இது ஏன்? கற்றவன் தான் திருந்தப் போகிறேன் என்று சொல்வது எனக்கு வியப்பைத் தருகிறது. உயர் குடியிற் பிறந்த கற்றவர்களான நீங்கள் பலருக்கு இவ்வாறு எத்தனை முறை கூறியிருப்பீர்கள். இருந்தும் உங்கள் நடத்தையில் எந்த மாறுபாடும் உண்டாகவில்லை. ஒழுக்கமில்லாத தந்தைக்குப் பிறந்த பலர் தாம் கற்ற கல்வியின் அறிவால் அதை உணர்ந்து நல்ல முறையில் வாழ்கிறார்கள். அதனால் வெட்கப்பட்ட பெற்றோர் திருந்திய வரலாறு அறநூல்களில் உண்டு. ஆரம்பத்தில் முனிவர்கள், ரிஷிகள், ஞானிகள் ஏன் தேவர்கள் கூடத் தீய செயல்களைச் செய்துள்ளனர். தீய செயல்களைச் செய்துள்ளனர். தீய செயல்களைச் செய்பவன், அச் செயல் நீ தீதானது என்று நினைத்தாலே திருந்த ஆரம்பித்து விடுவான். ஆனால் நீங்கள் இருவரும் பல்வேறு நிகழ்வுகளில் திருத்துவதாகக் கூறி மக்களை ஏமாற்றியுள்ளீர்கள். அதனால்

உங்களை யாரும் நம்பமாட்டார்கள். உண்மையாகத் திருந்தி வாழ்ந்தாலும் அது நடிப்பு, திட்டமிட்ட செயல், சுயநல நோக்கு என்று தான் அனைவரும் சொல்வர்'' என்றார் சிவநாதன்.

## 93. உயிர்க்கு அறியாமை அளிப்பவை

**இருளாய்க் கழியும் உலகமும் யாதும்**
**தெரியா துரைக்கும் வெகுள்வும் - பொருள் அல்ல**
**காதலட படுக்கும் விழைவும் இவை மூன்றும்**
**பேதைமை வாழும் உயிர்க்கு.**

அருளில்லாதவர்களுடன் சேர்வதால் இருளாய் இருக்கும் உலகும், நன்மை தீமைகளை ஆராயாது பேசும் கோபமான வார்த்தைகளும், நற் செயல்கள் அல்லாதவற்றில் விருப்பம் கொள்ளும் அவாவும், என்ற இம் மூன்றும் உயிர்களுக்கு அறியாமையைக் கொடுக்கும்.

''பண்டிதரே, பல்வேறு நிறங்களைக் கொண்ட கண்ணாடிகளை அணிந்து உலகைப்பாரும். நீர் அணியும் கண்ணாடிகளின் நிறத்திற்கேற்பவே உலகும் காட்சி தரும். வெற்றுக் கண்ணால் பாரும் நிஜமான உலகு தெரியும். நீர் தீயவர்களுடன் சேர்ந்து கலந்து மகிழ்வுடன் பழகுவதால் தான் உலகம் தீயதாகத் தெரிகிறது. தீயவர்கள் பொருளுக்காகத் திட்டமிட்டுத் தீய செயல்களைச் செய்வர் ஆனால் அச் செயல்கள் அவர்களுக்கு நல்ல வருவாயைத் தரும். மகிழ்ச்சியான செயல்களாகவே தெரியும். நன்மை தீமைகளை ஆராயாது சுயநலம் ஒன்றையே கருதி வாழ்பவன் தனக்கு கேடு வராவிட்டாலும் மற்றவர்களை மதித்துப் பேச மாட்டான். அதனால் தீய செயல்கள் செய்யவே விரும்புவான். இது இயல்பு. ஆனால் கற்றவன் இவ்வாறு நடப்பதை இயல்பு என்று கூறமுடியாது. நீங்கள் இருவரும் உண்மையாகத் திருந்தினாலும் நான் நம்பமாட்டேன். அத்துடன் சிறுத்தொண்டன் ஐயாவுக்குச் சொல்லவும் மாட்டேன்.

உனது தந்தையாரும் வட்டிக்குப்பணம் கொடுப்பவர். அவர் பரம ஏழைகளுக்குக் கொடுக்கும்போதும் அடைமானமாகப் பொருட்களை வாங்குவார். பின்பு அவர்கள் வட்டிக் காசுடன் அப்பொருளை மீள எடுக்க கவரும் போது வட்டிக்காசு வாங்காது பொருளைக் கொடுப்பார். அது பற்றி நான் விசாரித்தபோது அவர் சொன்னார், “ எமது ஊரில் க்‘டப்படுபவர்களில் பலர் உழைப்பதில்லை. உழைப்பவர்கள் மது அருந்தி விடுவார்கள். அப்படியானவர்களுக்குக் கொடுத்து நாம் அவர்களை மேலும் தீயவர்களாக்கக் கூடாது” என்பார். அதிலும் உண்மை உள்ளது. ஆனால் நீ அப்படி இல்லை. அதிகம் வட்டி கேட்பாய். கொடுத்த முதலை கூட்டிச் சொல்வாய். சென்ற வாரம் நீயும் செல்வராசாவும் கடன் பிரச்சினையில் முரண்பட்டீர்கள். அப்படியிருக்க உன்னை எப்படி நம்புவது?” என்று கேட்டார் சிவநாதன்.

## 94. ஒழுக்கம் இல்லாதவர்

**பண்பில்லார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்**
**பெண்பாலைக் காப்பிகழும் பேதையும் - பண்பில்**
**இழுக்கான சொல்லிடு வானும் இம்மூவர்**
**ஒழுக்கம் கடைப்பிடியா தார்.**

நட்புத் தன்மை இல்லாதனுடன் நட்புக் கொள்பவனும், மனைவியைக் காரணமின்றி இகழ்து பேசித் துன்புறுத்துபவனும், வெறுக்கத்தக்க கீழ்த்தரமான வார்த்தைகளைப் பேசுபவனும், ஆகிய இம் மூவரும் தமக்குரிய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவர்களாவர்.

துஸ்யந்தன் மடத்திற்கு வந்து ஒரு தலைவாழை இலையை எடுத்து விட்டு அமர்ந்தான். அதைக் கண்ட சிவலிங்கம் அதிர்ந்து போனான். அவனுக்குத் திருமணமாகி ஒரு மாதம் கூட பூர்த்தியடையவில்லை. ஆனால், மனைவியுடன் பிரச்சினைப் பட்டுக்

கொண்டிருந்தான். அதற்கு மனைவியின் சகோதரனுடன் ஏற்பட்ட தகராறே காரணம்.

“தம்பீ, நீர் படித்தவர். மடத்திற்குப் பசியோடு வந்தவர்களை அன்போடு வரவேற்று உணவளிப்பது எனது கடமை. அதற்காக எனக்குச் சம்பளம் தரப்படுகிறது. உமது பெற்றோர் மனைவியுடன் பிரச்சினைப் பட்டதால் உமக்கு உணவு தர மறுக்கின்றனர். அவர்களது செயல் சரியானது. ஆனால் இது தருமசத்திரம் நான் சோறு படைக்கிறேன். சிறிது யோசித்துப்பாரும் தம்பி. உமது மனைவியின் சகோதரன் முருகானந்தன் முழு முரடன். அவன் பெற்றோருக்கே அடங்காதவன். அவனுடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டு காரணமின்றி உமது மனைவியைக் கோபிப்பதும, அவளை இகழ்வதும் சரியானதல்ல. அவன் உமது நண்பன். அவனோடு கூட அவனது வீட்டுக்குச் சென்றதால் தான் நீ அவளை விரும்பித் திருமணம் செய்தாய். நட்புக் கொள்ளத் தகுதியில்லாதவர்களுடன் நட்புக் கொள்பவனும், மனைவியைக் காரணமின்றி இகழ்ந்துபேசுபவனும், பேசக்கூடாத வார்த்தைகளைக் கூச்சமின்றிப் பேசுபவனும் ஒழுக்கமில்லாதவர்கள் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். உமது மனைவி நல்லவள், ஒழுக்கமானளவள். அவளோடு காரணமின்றிக் கோபப்படாதே. உனது நண்பனின் குணமறிந்த பின்பு தானே அவளைத் திருமணம் செய்தாய். அதற்குப் பின் ஏன் அவளைத் துன்புறுத்துகிறாய்”? என்றான். துஸ்யந்தன் எதுவும் பேசாமல் இருந்தான்.

## 95. நல்வினையை நீக்கும் ஆயுதங்கள்

**அறிவு அழுங்கத் தின்னும் பசிநோயும் மமாந்தர்**
**செறிவு அழுங்கத் தோன்றும் விழைவும் - செறுநரின்**
**வெவ்வுரை நோவா வெகுள்வும் இவைமூன்றும்**
**நல்வினை நீக்கும் படை.**

அறிவை அழிக்கும் பசி என்ற நோயும், சான்றோரை நெருங்கவிடாது தடுக்கும் தீய குணங்களும், பகைவர் கூறும் கொடிய சொற்களைப் பொறுக்கமுடியாத கோபமும், இம் மூன்றும் நல்வினையை நீக்கும் கொடிய படைகளாகும்.

''தம்பி, பசி அறிவை அழிக்கும், சிந்திக்க விடாது. அதனால் முதலில் பசிதீர உண். ஒரு மனிதனில் உள்ள நல்ல குணங்கள் பெரியவர்களைக் கவரும். அதனால் பெரியவர்கள் அன்புடன் அவர்களுடன் கதைப்பார்கள். ''துட்டரைக் கண்டால் தூரவிலகு'' என்றொரு முதுமொழி உண்டு. உனது மைத்துனனுக்கு எதுவும் சொல்ல முடியாது. சொன்னால் கோபம் கொள்வான்., தாக்கவருவான். பண்பில்லாத வார்த்தைகளைப்பேசி மனதைப் புண்ணாக்குவான். அதனால் யாரும் அவனுடன் பேசச் சம்மதிக்கமாட்டார்கள். அவன் உன்னை நண்பன் என்றும் நினையாது தீய சொற்களைக் கூறுகிறான். அதற்கு நீ கோபப்பட்டால் உனது வாழ்க்கை தான் நாசமாகும். நீ படித்தவன். பண்புள்ளவன், ஒழுக்கமான நல்ல குடும்பத்தில் பிறந்தவன். விரும்பி அவளை மணந்து விட்டாய். இனி என்ன செய்ய முடியும். நீயும் உனது மனைவியும் இப்போ பிறம்பான இன்னொரு குடும்பம். அதனால் நீ உனது மனைவியின் குணங்களை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டும். அதைவிட்டு விட்டு அவளது சகோதரனோடு ஏன் வீணாகப் பிரச்சினைக்குப் போகிறாய்? நீ நண்பனாக இருந்த காலத்தில் அவன் உனது சொல்லைக்கேட்டு நடந்தவனா? இல்லையே. பிறகேன்

அவனைப் பற்றிச் சிந்தித்து உனது வாழ்க்கையைச் சீரழிக்கிறாய்'' என்று கேட்டான். சிவலிங்கம்.

## 96. பெய்யெனப் பெய்யும் மழை

**கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன**
**செய்வகை செய்வான் தவசி கெடி தொரீஇ**
**நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்**
**பெய் எனப் பெய்யும் மழை.**

கணவனின் உள்ளக் குறிப்பை அறிந்து நடக்கும் மனைவி, தான் மேற்கொள்ளும் விரதங்களை முறைப்படி அனுட்டிக்கும் துறவி, தீமைகளை விலக்கி நன்மைகளை மட்டும் செய்யும் அரசன் இம் மூவரும் பெய் என்று கூறினால் மழை பெய்யும்.

''கன்னிப் பெண் ஒருவனின் துணைவியாகும். போது அவள் முழுமையாகத் தன்னைக் கனவணுக்கு அர்ப்பணிக்கிறாள். அவளுக்குத் திருமணமாகு முன் இருந்த இரத்த உறவுகளின் நெருக்கம் குறைந்து இடையில் வந்த கணவனோடு இரண்டறக் கலக்கிறனார். இது பெண்களின் இயல்பு. உனது மனைவியின் தாயை எனக்குத் தெரியும். அவள் கணவனைத் தெய்வமாக மதிப்பவள். அவளுக்குப் பிறந்த பிள்ளையும் பாசத்தில் குறை வைக்க மாட்டாள். அப்படியான பெண்ணும், தான் மேற்கொள்ளும் கடமைகளை முறைப்படி செய்யும் துறவியும், நல்லவற்றை மட்டும் செய்யும் அரசனும் பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்று அறநூல்கள் கூறுகின்றன. மனைவி என்பவள் கணவனின் அன்புக்குப் பாத்திரமாகிவிட்டால் அவள் கணவனைத் தெய்வமாக மதித்துக் கடமை செய்வாள். இதற்குக் காரணம் கணவன் தன் மனைவி மீது வைக்கும். அளவற்ற அன்பு தான். காதலிக்கும் போது கரும்பாக

இனித்தவள் இப்போது ஏன் உனக்கு வேம்பாகக் கசக்கிறாள். உனக்கு அவள் அடங்கி நடக்கவில்லையா? இல்லை அவள் தனது சகோதரனில் கூடுதலான அன்பு வைத்துஉன்னைத்தரக் குறைவாக நினைக்கிறாளா..? சொல்'' என்றான் சிவலிங்கம்.

## 97. பாவச் செயல்கள்

**ஐங்குரவர் ஆணை மறுத்தலும் ஆர்வுற்ற**
**எஞ்சாத நட்பினுள் பொய்வழங்கும் - நெஞ்சமர்ந்த**
**கற்புடை யாளைத் துறத்தலும் இம்மூன்றும்**
**நற்புடையிலார் தொழில்.**

தாய், தந்தை, ஆசிரியன், தமையன், மன்னன் என்னும் அறிவிற் சிறந்த பெரியவர்களை மதிக்காமல் நடத்தலும், நல்ல நண்பர்களிடத்தில் உள்ளதை மறைத்துப் பேசுவதும், தன்னை உள்ளத்தால் போற்றி வாழும் கற்புடைய மனைவியைத் துறத்தலும், என்ற இம் மூன்றும் அறமில்லாதவர்களின் செயல்களாகும்.

‘‘தம்பி, தாய், தந்தை, ஆசிரியர், தமையன், மன்னன் ஆகியோரின் சொல்லை மதித்தல் வேண்டும். உனது பெற்றோர் நீ அவளைக் காதலிக்கும் போதே அவளைக் காதலிக்கவேண்டாம் என்றனர். அவளது சகோதரனின் தீய செயல்கள் தான் காரணம். அதை நீ கேட்கவில்லை. அத்துடன் உனது மூத்த சகோதரன் தனது மனைவியின் சகோதரியை உனக்கு மணம் பேசினார். அதையும் நீ கேட்கவில்லை. அதனால் அவர்கள் உனது குருவான சிறுத்தொண்டன் ஐயாவுக்கு கூறினர். அவர் உனக்குப் புத்திமதிகள் கூறினார். ஒரு பெண்ணை விரும்பிவிட்டு இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்வது பாவம். அதனால் உனது பெற்றோரின் விருப்பப்படி நடக்க விருப்பமில்லாவிட்டால் அவளைத் திருமணம் செய்து தனிக் குடித்தனம் நடத்து என்றவர். அதையும் நீ கேட்கவில்லை. அத்துடன்

உனது நல்ல நண்பன் நாவலன். அவனையும் நீ இந்த விடயத்தில் மதிக்கவில்லை. அதைவிட நீ உனது மனைவி மீது என்ன குற்றம் கண்டாய். முன்பு அவளை வெறுத்த உனது பெற்றோரே இப்போ அவளது குணநலன்களை மெச்சுகின்றனர். அத்துடன் உன்னையும் உனது பெற்றோரையும் மதித்து வாழும் அவளை நீ ஏன் வெறுக்கிறாய்…? நீ செய்வது சரியில்லை. ஒரு ஒழுக்கமான மனிதன் நீ செய்யும் காரியங்களை விரும்ப மாட்டான். எனவே அவளது சகோதரனில் உள்ள பகையை மறந்து, அவளுடன் கூடி வாழ் மனைவியோடு கூடி வாழாத நாட்கள் பாவப்பட்ட நாட்கள் என்று அற நூல்கள் கூறுகின்றன. படித்த உனக்கு இதை நான் சொல்லத் தேவையில்லை'' என்றான் சிவலிங்கம்.

## 98. மும்மாரிக்கு வித்து

**செந்தீ முதல்வர் அறம் நினைந்து வாழ்தலும்**
**வெஞ்சின வேந்தன் முறை நெறியில் சேர்தலும்**
**பெண்பால் கொழுநன் வழிச்செலவும் இம்மூன்றும்**
**திங்கள்மும் மாரிக்கு வித்து.**

பிராமணர்கள் வேதத்தை முறைப்படி ஓதுதலும், மிகுதியான கோபத்தை உடைய மன்னன் மனம் திருந்தி நல்ல முறையில் ஆட்சி செய்தலும், மனைவியானவள் தனது கணவனின் மனம் மகிழும்படி நடத்தலும் ஆகிய இம் மூன்றும் மாதம் மும்மாரி பொழியக் காரணமாக அமையும்.

''முறைப்படி அந்தணர்கள் வேதமோதினால் மாதத்தில் இன்னொரு நாள் மழை பெய்யும். அது போலக் கொடுமைகள் செய்த அரசன் திருந்தி மக்களுக்கு நன்மைகள் செய்தால் மாதத்தில் ஒருநாள் மழை பெய்யும். அது போல மனைவியானவள் தனது

கணவனைப் பின்பற்றி அறவழியில் வாழ்ந்தால் மாதத்தில் ஒரு நாள் மழை பெய்யும் என்று அறநூல்கள் கூறுகின்றன. உனது மனைவி உன்னை விரும்பாது, உனது சொற்கேளாது நடக்கிறாளா…? அந்தணன் ஒழுக்கத்துடன் முறைப்படி வேதமோதினால் மக்களது மனம் மகிழும். அதுபோல இல்லத்தரசனான கணவன் மனைவியைப் புரிந்து அவளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்து அவளோடு கூடி இன்பம் அனுபவித்தால் கணவனதும் அவனது உறவினர்களதும் மனம் குளிரும். இது போல அறச் செயல்களில் ஈடுபடும் கணவனை உற்சாகப்படுத்தினால் அவனது மனம் குளிரும். மழைபெய்தால் பூமி குளிர்ந்து உலக சீவராசிகளை மகிழ்ச்சிக்குட்படுத்துவது போல மனைவியும் கணவனும் தமது சிறந்த நடத்தைகளால் தம்மைத்தாமே மகிழ்ச்சிப் படுத்த வேண்டும். கணவனுக்குச் சிறந்த துணை மனைவி மனைவிக்கு சிறந்த பாதுகாவலன் கணவன். இவ்வாறு நினைத்து வாழ்ந்தால் குடும்பத்தில் பிரச்சினைவராது'' என்றான் சிவலிங்கம்.

‘‘உண்மை தான் அண்ணை எனக்குச் சாப்பாடு வேண்டாம். உங்களின் வார்த்தைகளை நான் உயிருள்ளவரை போற்றி நடப்பேன்'' என்று கூறி விட்டு எழுந்தான் துஸ்யந்தன்.

## 99. நல்லுலகம் சேராதவர்

**கற்றாரைக் கைவிட்டு வாழ்தலும் காமுற்ற**
**பெட்டாங்கு செய்தொழுகும் பேதையும் - முட்டின்றி**
**அங்ஙவை செய்யும் அவ்வலையும் இம்மூவர்**
**நல்லுலகம் சேரா தவர்.**

கற்ற சான்றோரை விட்டு நீங்கி வாழ்பவர்களும், தான் விரும்பியவற்றை யெல்லாம் ஆராயாது செய்யும் அறிவிலியும், அளவின்றித் தீமைகள் செய்யும் கொடியவனும் ஆகிய இம்மூவரும் நல்ல உலகம் சேராதவர் ஆவர்.

“நான் அவளைத் திருமணம் செய்ததால் கற்ற சான்றோர் என்னை வெறுத்தனர். அதனால் அவர்கள் என்னைச் சந்திக்க விரும்புவதில்லை. அத்துடன் சிறுத்தொண்டன் ஐயாவும் எனது பெற்றோரும், கற்றவர்களும் திருமணம் செய்து விட்டாய். இனி அப் பெண்ணைத் துன்பப்படுத்தாதே என்றனர். ஆனால் நான் அவற்றைக் கேட்கவில்லை. அதனாலும் அவர்கள் என்னை வெறுத்தனர். நான் யார் சொல்வதையும் கேளாது திமிருடன் வாழ்ந்தேன். பாவம் பழிகளை எண்ணாது அளவிறந்த கொடுமைகளைச் செய்யும் எனது மனைவியின் சகோதரனின் நடத்தையில்தான் அவளை வெறுத்தேன். அளவுக்கதிகமான தீயசெயல்களைச் செய்பவர்களைக் கடவுள் தண்டிப்பார்” என்பார்கள் அதுபேல அவனைக் காவல் துறையினர் வந்து கைது செய்து கொண்டு போய்விட்டனர். இப்போ அவனைப் பிணை எடுக்கக் கூட யாரும் முன் வருகிறார்களில்லை. கற்ற சான்றோரின் வார்த்தைகளைக் கேட்காமலும் நான் நினைத்த படி நடந்ததாலும் கடந்த ஆறு மாத காலங்களாக நரகலோகத்தில் வாழ்ந்தேன். தீமை செய்பவர்களைப் பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை. அவர்களைக் கடவுள் தண்டிப்பார் என்றும் உணர்ந்து கொண்டேன். அதனால் நான் இனித் தவறு செய்யமாட்டேன்” என்று கூறிவிட்டுச் சிவலிங்கத்தின் பதிலை எதிர்பாராது எழுந்து நடந்தான் துஸ்யந்தன். நல்லதொரு செயலைச் செய்து முடிந்த பூரிப்பில் சிரித்தான் சிவலிங்கம்.

## 100. மன்னர்க்கு உறுப்புகள்

**பத்திமை சான்ற படையும் பலர்தொகினும்**

**எத்துணையும் அஞ்சா எயிலரணும் - வைத்து அமைந்த**
**எண்ணின் உலவா விழுநிதியும் இம்மூன்றும்**
**மண்ணாளும் வேந்தர்க்கு உறுப்பு.**

தம்மிடம் உள்ளன்பு கொண்ட படையும், பலர் ஒன்றாகக் கூடி எதிர்த்தாலும் சிறிதும் அஞ்சப் பட வேண்டாத அரசனும், கணக்கில் அடங்காத பெருஞ் செல்வமும்,என்ற இம் மூன்றும் நாட்டை ஆள்கின்ற மன்னர்களுக்கு உறுப்புக்களாகும்.

தலைவர் பதவியை பொறுப்பான ஒருவரிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்ற முடிவில் இருந்த சிறுத்தொண்டர் பொருத்தமான ஆளைப் பற்றிச் சிந்தித்தார். அவர் பிரச்சினைகள் வரும் போது முன் நாளில் ஆட்சி செய்த மன்னர்களின் வரலாற்றைப் படிப்பார். அதனைப் படித்து முடித்தபின் மனம் தெளிவடைந்து விடும். அதன் பின் முடிவெடுப்பார். அதன் படி பாண்டிய மன்னனைப்பற்றி விபரமாக எழுதியிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து விரித்தார்.

“ஓர் அரசனுக்குத் தன்னிடம் உள்ளன்பு கொண்ட படை வீரர் தேவை.பல அரசர்கள் ஒன்று சேர்த்து எதிர்த்தாலும் சிறிதும் அச்சப்பட வேண்டாத அரசனும் பெருஞ்செல்வமும் இருத்தல் வேண்டும். அப்படியான அரனும் தனது அமைச்சர்களுடன் கலந்துரையாடி மக்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் மகிழ்வுடன் செய்வான். அரசனிடம் பேரன்பு பூண்ட படைவீரர்கள் இருப்பார்களானால் தம் உயிரைக் கொடுத்து நாட்டையும் அரசனையும் காப்பாற்றுவார்கள். பெருஞ்செல்வம் இருந்தால் போதியளவு ஆயுதங்களை வாங்கலாம், போர்வீரர்களுக்குச் சம்பளமாகவும், அன்பளிப்புக்களாகவும், வெகுமானங்களாகவும் செல்வத்தைக் கொடுக்கலாம். அத்துடன் பொருள்வளமுள்ள அரசன் பாதுகாப்பான அரண் அமைத்து அதனுள்த் தங்கிப் பல போர் வீரர்கள் பல நாட்களுக்கு போராடக் கூடிய வழிவகைகளைச் செய்வான். முக்கியமாக உணவு, ஆயுதங்கள்,

மருந்து, நீர், மருத்துவர்கள், பராமரிப்பாளர்கள் நிறைந்திருந்தால் அச்சப்படத் தேவையில்லை. நீதியில்லாத மன்னனால் இவற்றை நல்ல முறையில் செய்ய முடியாது'' என்றிருந்தது.

‘‘மடத்திற்குத் தேவையான நல்ல உதவியாளர்கள் இருக்கிறார்கள். போதியளவு நிதி உண்டு. பாதுகாப்பான கட்டிடங்கள் உண்டு. போதிய மருத்துவ வசதிகளும் உண்டு. அதனால் நல்ல குணசாலியான ஒழுக்கம் மிக்க ஆளும் திறமையுள்ள ஒருவன் தான் தேவை. அது நாவலனா……..? இல்லை கமலேந்திரனா….? இல்லை ஆறுமுக தாசனா………? இவர்களில் யார் சிறந்தவர்கள்? என்று சில கணம் யோசித்த சிறுத்தொண்டன் சிவநாதனை அழைத்துக் கேட்டார்.

‘‘நாவலன் துறவு பூணவேண்டும் என்கிறான். கமலேந்திரன் வணிகன். பலநாட்கள் ஊரில் இருக்க மாட்டான். ஆறுமுகதாசன் ஒழுக்கமானவன் நல்லவன். பதவியைத் தேடி அலைபவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. ஆளுமை உள்ளவர்களுக்கே கொடுத்தல் வேண்டும்'' என்றார் சிவநாதன். தான் நினைத்தவனைச் சிவநாதனும் சொன்னதால் பூரிப்புடன் சிரித்தார் சிறுத்தொண்டன்.